திருக்கோயில்

என் கடன்
பணிசெய்து கிடப்பதே

OFFICE OF THE STATE EDITOR
13 JUL 1973
GAZETTEERS UNIT

மாலை 15] பரிதாபி - ஆனி, ஆடி - ஜுன் 1973 [மணி 9

திங்கள் வெளியீடு

தமிழ்நாடு அரசி
அறநிலைய ஆட்சித்துறை வெளி

விருத்தாசல வட்டம் நல்லூர் அருண்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயிலுக்கு
தமிழக ஆளுநர் மேதகு திரு. K. K. ஷா அவர்கள் வருகை தந்தபோது
வரவேற்றுச் சிறப்பித்த பெருமக்கள் 3-4-73

பொருளடக்கம்

1. திருவள்ளுவர் மாட்சி
2. திருத்தேர் வெள்ளோட்டத் திருவிழா
3. உடலும் உயிரும்
4. இயற்கைக் காட்சியில் இன்பச்சுவை
5. ஆலயங்கள் ஆற்றிடும் அரும் பணிகள்
6. சின்முத்திரை
7. மூவகை அடியவர்
8. துயக்கன் மயக்கன்
9. தமிழக ஆடற்கலைத்திறன்
10. தஞ்சை மாவட்டக் கோயில்களின் வரலாறு
11. மதிப்புரைகள்
12. சிங்கபிரான் பெருமை
13. திருக்குறளில் ஊழும் முயற்சியும்

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூபா பத்து மட்டும் தனிப்பிரதி விலை ரூபா, ஒன்று மட்டும்.

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் ''திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34'' என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது அவ்வவ்வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது. —ஆசிரியர்.

95/GM/73
13 JUL 1973
GAZETTEER UNIT MADRAS-2



மாலை 15] பரிதாபி - ஆனி, ஆடி - சூன் 1973 [மணி 9

திருவள்ளுவர் மாட்சி

[ந. ரா. முருகவேள், M. A., M. O. L.]

★★★

முன்னுரை

திருவள்ளுவர் ஒரு சிறந்த பெருங் கவிஞர். ஒப்புயர்வற்ற நீதி நூல் ஆசிரியர். மிகச் சிறந்த தத்துவஞானி; இணையற்ற இலக்கியப் பேராசிரியர்; அரும்பெரும் அரசியல் நுண்ணறிஞர்; பொருவிலாப் பொருளியல் மேதை; தன்னிகரற்ற பல் கலைக்குரிசில்; உலகம் முழுவதற்குமே ஒரு பெரும் வழிகாட்டி. காலமும் இடமும் கடந்து, சாலவும் நிலைபெற்று ஞாலமே புகழ்ந்து வியக்கும் திருக்குறள் என்னும் செந்தமிழ்த் தெய்விக அறநெறிப் பெரும் பனுவலை இயற்றி அளித்த, அரும்பெரும் வள்ளல் அவர்! பழமைக்குப் பழமையாக வும், புதுமைக்குப் புதுமையாகவும், அவர் தம் அருளுரைகள் அமைந்து பொலிந்து விளங்குகின்றன.

உலகப் பெரும் சமயத் தலைவர்களும் சான்றோர்களும் கூறியுள்ள கருத்துக்கள் எல்லாம், திருக்குறளில் செறிந்து கிடக்கக் காண்கின்றோம். திருவள்ளுவர் எல்லாச் சமயத்தவரும் ஒப்புக்கொள்ளத்தக்க வகை யில், என்றும் மாறாத அடிப்படை வாழ் வியல் உண்மைகளை நடுவுநிலை பிறழாமல் நன்கினிது சுவைமிக விளக்கியருளுகின்றார். அவர் தம் நூல், நவில் தொறும் நயம் பயக் கின்றது. தொட்டனைத் தூறும் மணற் கேணி போலக் கற்றனைத்தூறும் நற்கருத் துக்களை உடையதாக மிளிர்கின்றது. ஒரு நாடு-ஒருகாலம்-ஒருமொழி-ஓர் இனம் என் பவற்றிற்கே உரியதாகி விடாமல், எல்லாக் காலமும்-எல்லா நாடும்-மொழியும்-இனமு மாகியவற்றைச் சேர்ந்த மக்கள் அனை வருக்குமே உரிய, மாபெரும் பொதுமறை நூலாகத் திருக்குறள் திகழ்கின்றது.

JL Q2m 211, N 59T15 N73 . 15.9

வாழ்க்கையின் ஒவ்வொரு கூறுபற்றியே, நூல்களெல்லாம் பொதுவாக விளக்கும். ஆனால் வாழ்க்கையின் பலதிறக் கூறுகளையும் முழுவதாக ஒருசேர, முன்னொடு பின் முரண்படாமல் விளக்கும் திறனில், திருக்குறளுக்கு இணையாக ஒரு நூலும் இல்லை எனத் துணிந்து கூறலாம். இல்லறத்தான் துறவறத்தான், அரசன் அமைச்சன், நண்பன், பகைவன், போர்வீரன், தூதுவன், கற்றான் கல்லான், கள்ளுண்பான், கவருடுவான், இரவலன் புரவலன், ஆண்கள் பெண்கள், முதலிய அனைவருக்குமே ஏற்றபெற்றி அறிவுரைகள் கூறும் அரும்பெறற் சமுதாயப் பெருநூலாகத் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் தலை சிறந்து திகழ்கின்றது. அறம் பொருள் இன்பம் என்னும் முப்பெருந் தலைப்பில், எப்பெரும் பொருளையும் உள்ளடக்கிக் குறைவிலா நிறைவாய் விளக்கும் முறையில், தெய்வப்புலவர் திருவள்ளுவருக்கு நிகராவார் பிறர் எவருமே இலர்.

148 710

திருக்குறளும் சிவபிரானும் :

திருக்குறள், தமிழிலக்கியங்களுள் தலை சிறந்தது. அதன் சிறப்பு அளப்பரியது. திருக்குறளின் சிறப்பினைப் பற்பல புலவர்கள் பற்பல வகைகளிற் பெரிதும் புகழ்ந்துரைத்துள்ளனர். திருக்குறளுக்கும், சிவபிரானுக்கும் மிக நெருங்கிய இயைபு உண்டு. திருக்குறளை நினைத்தால் சிவபிரானையும், சிவபிரானை நினைத்தால் திருக்குறளையும் இயைத்தே நினைவுகூரும் வகையில், பற்பல சிறந்த ஒப்புமைப் பண்புகள் காணப்படுகின்றன.

(1) சிவபிரான் தனக்கு உவமையில்லாதவர்; திருக்குறளும் தனக்கு உவமையில்லாத தனிப்பெரும் சிறப்பு உடையது; (2) அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாயும், வேறாயும் விளங்குபவர் சிவபெருமான்; அவ்வாறே திருக்குறளும் அறுவகைச் சமயக் கொள்கைகளைக் கூறுவதாயும், அவற்றிற்கு அப்பாற்பட்டதாயும் விளங்குகின்றது. (3) சிவபெருமான் நூல்களின் எல்லையை எல்லாம் கடந்தவர். அவ்வாறே திருக்குறளும் எல்லா நூல்களிலும் மேம்பாடு மிக்கது. (4) சிவபிரான் உயிர்களின் அறிவினில் அருளால் மன்னி நலம் செய்பவர்; திருக்குறளும் நம்மனோர் அறிவினில் அருளால் மன்னி நலம் செய்வது. (5) உயிர்களுக்கெல்லாம் அம்மையும் அப்பனுமாக விளங்கி அருள் புரிபவர் சிவபெருமான்; அங்ஙனமே திருக்குறளும் ஒரு வகையில் நம்மனோர்க்கு அம்மையாயும் அப்பனாயும் திகழ்கின்றது. (6) எல்லாப் பொருள்களிலும் நிறைந்து செறிந்து நிற்பவன் சிவபெருமான்; அங்ஙனமே எல்லாப் பொருள்களும் நிறைந்து செறிந்து திகழ்கின்றது திருக்குறள்! (7) முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனாய்ச் சிவபெருமான் திகழ்தல் போலவே, திருக்குறளும் திகழ்கின்றது (8) நவில் தொறும் நயம் பயக்கும் பண்பு திருக்குறளுக்குப் போலவே, சிவபெருமானுக்கும் உண்டு.

அறுவகைச் சமயத் தோர்க்கும்
அவ்வவர் பொருளாய், வேறும்
குறியது உடைத்தாய், வேதா
கமங்களின் குறிஇறந்து, அங்கு
அறிவினில அருளால் மன்னி,
அம்மையோடு அப்பன் ஆகிச்
செறிவொழி யாது நின்ற
திருக்குறள் சென்னி சேர்ப்பாம் !

சிவப்பிரகாசர் :

திருவள்ளுவரையும் திருக்குறளையும் எத்தனையோ புலவர்கள், எத்தனையோ பலவகைகளில் புகழ்ந்து பாடியிருக்கின்றனர். ஆயினும் அவற்றுளெல்லாம், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் புகழ்ந்து பாடியிருக்கும் முறை, பெரிதும் வியந்து மகிழத்தக்கதாகத் திகழ்கின்றது.

திருக்குறளின் சிறப்பை விளக்க, அவர் ஓர் உவமை கூற நினைக்கின்றார். திருக்குறளோ ஒப்புயர்வு இல்லாததாய்த் தனிப்பெரும் சிறப்புடையதாக விளங்குகின்றது. அதனால் திருக்குறளின் சிறப்பை விளக்க, ஓர் உவமையைக்கூட எடுத்துக் காட்ட அவரால் இயலவில்லை. அவர் நீள நினைந்து ஆராய்ந்து பார்க்கின்றார். தனக்கு உவமையில்லாத திருக்குறளுக்குத் 'தனக்குவமை இல்லாதான்' ஆகிய இறைவனை

யேதான் உவமை கூறிவிடலாமே என அவர் நீள நினைந்த பின்னர், ஒருவகை முடிவுக்கு வருகின்றார்.

வீரசைவராகிய தாம், சிவபிரானை எத்தகைய நிலையில் மதித்து வணங்கிப் போற்றுவாரோ, அத்தகைய நிலையிலேயே வைத்துத் திருக்குறளையும் அவர் போற்றிப் புகழ முற்படுகின்றார். திருக்குறளைச் சிவம் எனவே சிந்தித்து வந்திக்கின்றார் அவர்! திருக்குறளின் இரண்டு அடிகளையும் சிவபிரானின் இரண்டு திருவடிகள் எனவே கருதி அவர் மகிழ்கின்றார். திருக்குறளின் அடிகளுக்கும், சிவபிரானின் அடிகளுக்கும் இடையே உள்ள ஒப்புமைத்தன்மை, இரண்டு என்ற எண்ணிக்கையில் மட்டுமே அமைந்திருப்பதாக அவர் கருதிற்றிலர். மற்றும் ஓர் அழகிய பொருத்தமும் அமைந் திருப்பதாக அவருக்குப் புலப்படுகின்றது.

மாதியலும் பாதியர்:

திருக்குறளின் முதல் வரியானது நான்கு சீர்களால் இயன்று சிறிது நீண்டும், இரண்டாம் வரியானது மூன்று சீர்களால் அமைந்து சிறிது குறுகியும் இருத்தலை நாம் அறிவோம். இவ்வியல்பு சிவபிரானின் திருவடிகளிலும் இனிது பொருந்தியிருத் தலை, நம் சிவப்பிரகாசர் எண்ணி எண்ணி மகிழ்கின்றார். சிவபெருமான் ஆணும் பெண்ணும் ஆக, அம்மையும் அப்பனு மாக, அர்த்தநாரீசுவர மூர்த்தியுருவம் கொண்டு விளங்குபவன். மாணிக்கவா சகர் "தொன்மைக் கோலம்" என, அர்த்த நாரீசுவரர் (மாதியலும் பாதியர்) திருவுரு வத்தைப் புகழ்ந்து போற்றுகின்றார். அத்திருவுருவத்தில் ஆண்பாற் பகுதிக் குரிய வலக்கால் சிறிது நீண்டும், பெண் பாற் பகுதிக்குரிய இடக்கால் சிறிது குறுகியும் இருக்கும்.

சிவபெருமானின் இரு திருவடிகளுக் கும் உரிய இவ்வியல்பு, திருக்குறளின் இருவரிகளுக்கும்கூட, இனிது பொருந்தி அமைந்திருப்பதனை நினைந்து நினைந்து சிவப்பிரகாசர் மகிழ்ந்து இன்புறுகின்றார். இங்ஙனம் திருக்குறளின் பெருமையினைப் பொருத்தமுற உணர்ந்து வியக்கும் சிவப் பிரகாச சுவாமிகள், திருவள்ளுவரையே தம்முடைய குரவாகவும், தெய்வமாகவும் மதித்துத் தொழுகின்றார்.

''என் அடிகள்
வெண்குறள் நேர்
அடியிரண்டும்
என் தலைமேல்
இருத்தும் இறை
வெங்கைநாட்டில்..''

எனவரும் திருவெங்கைக் கலம்பகச் செய் யுட் பகுதியில் திருவள்ளுவரை 'என் அடிகள்' (என்னுடைய தெய்வம், ஞானா சிரியர்) என்றும்; அவர் இயற்றிய குறள் வெண்பாக்களால் அமைந்த நூலை 'வெண் குறள்' என்றும், இறைவன் ஆகிய சிவபெருமானின் திருவடிகளை "வெண் குறள் நேர் (திருக்குறளின் இரண்டு வரிகளைப்போன்ற) அடி இரண்டு" என்றும் துறைமங்கலம் சிவப்பிரகாசர் சுருக்கமா கவும் நுணுக்கமாகவும் குறிப்பிட்டிருத்தல், அறிந்து இன்புறற்பாலது.

அறன் வலியுறுத்தல்:

திருவள்ளுவர் காலத்திலும், அதற்கு முற்பட்டும் இருந்த மக்களிற் பெரும் பாலோர், 'இன்பமே வாழ்க்கையின் முதன் மையான குறிக்கோள்; அதனை எம்முறை யாலேனும் அடையலாம்' என்னும் கொள்கையுடையவராக இருந்தனர் போலும்! பண்டைக்கால மக்களுள் ஒரு சாரார் அறத்தினும் இன்பமே பெரிதும் முதன்மையுடைத்தெனக் கருதியிருத்தல் கூடும் என்பது "இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்" எனவரும் தொல் காப்பிய நூற்பாவானும் புலனாகின்றது. அதனை உடன்படாமல், அந்நிலையைமாற்றி அறமே இன்பத்தினும் முதன்மையுடை யது என்றும், 'அறத்தான் வருவதே இன் பம்' என்றும், வலியுறுத்திய பெருமை திருவள்ளுவர்க்கே உரியது. தனி மனித வாழ்வின் நலத்திற்கு இன்பம் முதன்மை; சமுதாய வாழ்வின் நலத்திற்கு அறப் முதன்மை என்று கண்டு, அறத்திற்கு முதலிடம் அளித்தவர் திருவள்ளுவரே யாவர். "சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும் அறத்து வழிப்படூஉம் தோற்றம்

போல" எனப் புறநானூறு பாடியது, திருவள்ளுவர் நிகழ்த்திய புரட்சியின் விளைவேயாகும். "வடுவிலா வையத்து மன்னிய மூன்றில் நடுவணது எய்த இரு தலையும் எய்தும்" எனப் பொருளுக்குப் பிறர் அளித்த சிறப்பை உடன்படாமல், "அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம் புல்லார் புரளவிடல்" எனப் பணித்தருளியவர் திருவள்ளுவரேயாம்.

பெண்ணிற் பெருந்தக்க யாவுள ?

பண்டைக்கால மக்களிடையே பெண்களைப் பற்றிப் பலவகைப் பொருந்தாக் கருத்துக்கள் நிலவி வந்தன. அவற்றுள், 'பெண்கள் பாவப் பிறவிகள்; ஆண்களை விடத் தாழ்ந்தவர்கள்; அவர்களுக்கு வீடு பேறு இல்லை' என்பன போல்வனவும் சில. சமணரும் பௌத்தரும் பெண்களை இழிவாகவே கருதி நடத்தி வந்ததாகத் தெரிகின்றது. புத்தர்பிரான் பௌத்த மடங்களிற் பெண்களைச் சேர்த்துக்கொள்ள எளிதில் இசைவு அளித்திலர். இசைந்த பின்னரும் பிட்சுணிகளுக்குப் பலப்பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பெற்றன. துறவு நெறியையே மிகவும் வற்புறுத்தும் பௌத்த, சமண நூல்களில் பெண்களைக் கடிந்துரைக்கும் பகுதிகள் நிரம்பக் காணப் படும். பெண்களைப்பல்லாற்றானும் இழித்து உரைத்து இகழ்வாக நடத்துவது அக்காலத் துச் சமுதாய நிலையாக இருந்து வந்தது. திருவள்ளுவர்க்கு இன்னோரன்னவை உடன் பாடல்ல. "பெண்ணின் பெருந்தக்கயாவுள?" (54) என அறைகூவி வினவி, அதற்குப் 'பெண்ணிற் பெருந்தக்கது இல்' (1137) எனத் தாமே விடையும் கூறிப்பெண்ணின் பெருமையினை உலகறிய நிலை நிறுவியவர் திருவள்ளுவர் பெருந்தகையே எனலாம்

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் :

திருவள்ளுவர் காலத்திலும், அதற்கு முன்னரும், பிறப்பில் உயர்வு தாழ்வு கருதும் சாதி வேறுபாடுகள் முதலியன, பெரிதும் நிலவி வந்தன. இன்றளவும் அவை இருந்தே வருகின்றன. சமண சமயம் அவற்றை ஒழிக்க முதலில் ஓரளவு முயன்றது. எனினும் பிற்காலத்தில் அவற்றை ஏற்றுக்கொண்டு விட்டது. மனுமிருதி போன்ற வைதிக நூல்கள் சாதிவேற்றுமைகளைப் பாராட்டி, அவைகள் வளர்வதற்குரிய வழிகளும் வகுத்தன. திருவள்ளுவர்க்கு இவை உடன்பாடு அல்ல. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று புரட்சிப் பெருமுழக்கம் செய்து, "மேலிருந்தும் மேலல்லார் மேலல்லார்; கீழிருந்தும் கீழல்லார் கீழல்லவர்" எனச் சிறந்த தீர்ப்பும் அளித்தவர் திருவள்ளுவர் பெருமான்!

கௌடில்யர் :

திருவள்ளுவரின் மாட்சி, அவரை வேறு பிற ஆசிரியர்களோடு ஒப்பிட்டுக் காண்பதனாலும், மிகவும் நன்கினிது நமக்குப் புலப்படும். திருக்குறளின் பொருட்பாலைக் கௌடில்யரின் அர்த்த சாத்திரத்திற்கும், காமத்துப்பாலை வாத்ச்யாயனரின் காமசூத்திரத்திற்கும் சிலர் ஒப்பிடுவதுண்டு. அஃது ஒருபுடை ஒப்புமையாகுமேயன்றி, முழுவதும் ஏற்புடைத் தாகாது. கௌடில்யரின் அர்த்த சாத்திரத்தில் உழவருக்கு ஒரு சிறிதும் முதன்மையளிக்கப்படவில்லை. அரசன் குடிமக்களை அச்சுறுத்தியும் வற்புறுத்தியும் தனது வருவாயைப் பெருக்கிக் கொள்ளலாம் என்று கூறி, நீண்டதொரு வரிப்பட்டியலையும் அர்த்தசாத்திரம் வகுத்துத் தந்துள்ளது. வருணாச்சிரம சாதிப் பாகுபாடுகளை அடிப்படையாகக் கொண்டே அர்த்தசாத்திரம் அமைந்துள்ளது. 'நீதிநெறி பிறழாமல்தான் ஒருவன் பொருளீட்டுதல் வேண்டும்' என்று கூறும் குறள் நெறிக்கும், பொருளீட்டுதலில் நீதி பற்றி ஏதும் நினைக்க வேண்டுவதில்லை எனப் போதிக்கும் இயல்பிற் செல்லும் அர்த்தசாத்திரத்திற்கும் உள்ள இடையீடு மிகப்பெரியது.

குடிமக்களின் கரவின்மை, அறியாமை மூடநம்பிக்கைசமயவுணர்வு ஆகியவற்றைப் பயன் படுத்திக்கொண்டு, ஓர் அரசன் தன் பணப் பெட்டியை நிரப்பிக்கொள்ளலாம் எனக் குறிப்பிற் புலப்படுத்தி, அதற்குரிய வழிவகைகளையும் கௌடில்யர் தமது நூலில் வகுத்துரைக்கின்றார். மேலும் சூது குடி இணைவிழைச்சு என்பன போன்ற இழிசெயல்களுக்கும் ஊக்கம் அளித்து அவ்வாற்றாலும் அரசன் தன் வருவாயைப் பெருக்கிக் கொள்ளலாம் என்பது அதன்

கொள்கை. இவையெல்லாம் திருவள்ளுவருக்குச் சிறிதும் உடன்பாடு அல்ல. இங்ஙனமே, அறநெறியைப் பொருட்படுத்தாமல் புறக்கணித்துத் தீயசூழ்ச்சித் திறங்கள் பலவற்றைக் கூறும் மாக்கியவெல்லி (Machiavelli)யின் கொள்கைகள் பலவும், திருவள்ளுவர்க்கு உடன்பாடு உடையன அல்ல. ஓர் அரசன் நரியைப்போன்ற சூழ்ச்சித்திறம் மிக்கவனாதல் வேண்டும் என்பது மாக்கிய வல்லியின் கொள்கை. அரசன் அரிமாப்போன்ற பெருமித இயல்புடையவனாகப் பிறங்குதல் வேண்டும் என்பது திருவள்ளுவரின் கொள்கை. இதுவே இவ்விருவருக்கும் உள்ள இடையீட்டின் அளவை, நம்மனோர்க்குப் புலப்படுத்தப் போதியதாகும்.

வாத்ச்யாயனர் :

இவ்வாறே திருவள்ளுவரும் வாத்ச்யாயனரும் ஒருவரோடொருவர் நெடுந்தொலைவினர். திருவள்ளுவர் தூய தெய்விகக் காதலை விளக்கினர். வாத்ச்யாயனர் தீய இழிந்த காமத்திறன் பற்றி விரித்துரைத்தனர். பாலுணர்ச்சியைத் தூண்டி விடுவது, விரைச் செய்வது, நீடுநிலை பெறுத்துவது பற்றியெல்லாம் வாத்ச்யாயனரின் காமசூத்திரம் விவரிக்கின்றது. ஆண் பெண் சேர்க்கையில் நிகழும் பலதிறச் செயல்கள், நிலைகள் பற்றியெல்லாம் வாத்ச்யாயனர் வருணிப்பர். பிறன் மனைவியை மயக்கிக் கெடுப்பதற்குரிய வழிவகைகளையும் கூடக் காமசூத்திரம் கட்டுரைக்கும். பரத்தைமைப் பண்பும் செயல்களும் பற்றிக்கூட, அது பாரித்துரைக்கக் காணலாம். இன்னோரனைய இழிதகவுகள் எதுவும் திருக்குறளிற் காணப்படமாட்டா.

பிளேட்டோ :

திருவள்ளுவர்க்கு மேலை நாட்டுப் பேரறிஞர்களான பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்றவர்களும், சிறிதும், ஈடாக மாட்டார்கள். பிளேட்டோ கண்ட குடியரசு அளவாற் சிறியது; நகரஅரசு (City-State) எனத்தக்கது. குடிமக்களின் தொகையிலும் செல்வ நிலையிலும் வளர்ச்சியற்ற தேக்கமுடையது. பேச்சுரிமைக் குறைப்பு முதலிய பலவகைக் கட்டுப்பாடுகள் அங்கு உண்டு. தனிநிலையிற் குடும்ப வாழ்வின் இன்பமும், குழந்தை வளர்ப்புரிமையும் அங்கே அனுமதிக்கப் பெறமாட்டா. கவிஞர்கள் அங்கே மதிக்கப் பெறுர். மெலிந்தோர் நலிந்தோர் புறக்கணிக்கப்படுவர். மனைவியரும் குழந்தைகளும் அங்கே பொதுவாக்கப்படுவர். திருவள்ளுவர் கூறும் கற்பு முதலிய பண்புகளுக்கு அங்கே இடமில்லை.

அரிஸ்டாட்டில் :

அரிஸ்டாட்டிலின் கருத்தின்படி, அடிமை முறை இன்றியமையாதது; உயர்வு தாழ்வுகள் இயல்பானவை; இழிநிலை பிறவியிலேயே அமைந்தது; குடியாட்சி என்பது கிரேக்கர்களுக்கு மட்டுமேயுரியது. ஏனைய ரெல்லோரும் நாகரிகமற்ற இழிசினரே (Barbarians) ஆவர். செல்வம் தேடுதற்கும், நீதிநெறி முறைகளுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. இத்தகைய கருத்துக்களெல்லாம் திருக்குறளில் ஒரு சிறிதும் காணப்படமாட்டா.

உலகப் பேரறிஞர்கள் பலர், மிகப் பழங்காலத்தில் எழுதிய எத்துணையோ கருத்துக்கள், இன்றைய உலகின் நடைமுறைக்கு ஒவ்வாமலும், அறிவுக்குப் பொருந்தாமலும், எள்ளி நகையாடும் வகையிலும், மாறிப்போதலை நாம் கண்டு வருகின்றோம். அரிஸ்டாட்டில் போன்ற பேரறிஞர்கள் பலர் எழுதியுள்ள கருத்துக்கள் பலவற்றைப் பிழையுடையனவாக மறுத்து 'அறிவுத்துறைக் குப்பைகள்' (Intellectual rubbish) என இகழ்ந்து ஒதுக்கிப் பேரறிஞர் திரு பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் எள்ளி நகையாடுகின்றார்.1

---

1 "Aristotle, in spite of his reputation, is full of absurdities. He says that children should be conceived in the winter when the wind is in the North, and that if people marry too young the children will be female.

He tells us that the blood of females is blacker than that of males; that the pig is the only animal liable to measle; that an elephant suffering from insomnia should have its shoulders rubbed with salt, olive oil, and warm water, that, women have fewer teeth than men and so on."—Dr, Bertrand Russel.

இங்ஙனமெல்லாம் இன்றி, நூற்றுக்கு நூறு விழுமிய கருத்துக்களே பொருந்தி, ஒதுக்கித் தள்ளத்தக்கது எதுவும் இன்றிக் "காழில்கனி" எனக் கட்டுரைக்கலாம்படி கவின்மிகச் சிறந்து, காலம் இடம் இனம் நாடு மொழி முதலிய எல்லைகளையெல்லாம் கடந்து, அறிவுக்கும் இயற்கைக்கும் நடை முறைக்கும் உண்மைக்கும் அணுத்துணை யும் பிறழாமலும் தன்னிலையிற்றிரிழாமலும் நிலைபேறுற்று நிகரின்றித் திகழ்கின்றது நம் திருக்குறள்! இஃது, எண்ணுந் தொறும் நமக்கு மிகவும் இறும்பூது பயப் பதன்றோ?

முடியாட்சியும் குடியாட்சியும் :

திருவள்ளுவரின் காலத்தில் 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்னும் கொள்கை நிலவி வந்தது. அந்நாளில் முடியுடைய மன்னர்களே நாடாளுவது இயல்பாகவும் மரபாகவும் இருந்து வந்தது. ஆயினும் திருவள்ளுவர் தமது திருக் குறளில் முடியாட்சியை மட்டுமன்றி இந்நாளைய குடியாட்சி முறைக் கருத்துக் களையும் ஏற்றுபெற்றி விளக்கியிருக்கின்றார். "இறைமாட்சி" என்னும் அதிகாரத்தில் வரும் பத்துக் குறள்களில், நான்கு குறள் களில், அரசருள் ஏறு, வேந்தன், பண்புடை வேந்தன், முறைசெய்து காப்பாற்றும் மன்னன் என்னும் சொற்றொடர்களால், முடியுடை மன்னர்களைக் குறிப்பிடுகின்றார். நான்கு குறள்களில், முடிமன்னரா குடியாட் சித் தலைவரா என்று பிரித்தறிய முடியாத படி இருக்கும் பொதுவான சொற்களே பயன்படுத்தப்பட்டுள்ளன. காட்சிக்கெளி யன் கடுஞ்சொல்லன் அல்லன், இன்சொல் லால் ஈத்தளிக்க வல்லான், கொடை அளி செங்கோல் குடி ஓம்பல் நான்கும் உடை யான், நிலனுள்பவன் என்னும் சொற் றொடர்கள், முடிமன்னர் குடியாட்சித் தலைவர் ஆகிய இருவருக்குமே உரிய பொதுமை நிலையில் விளங்குதல் காணலாம் இரண்டு குறள்களில் (384, 385), 'அரசு' என்னும் பொதுச் சொல்லே கையாளப் பட்டுள்ளது.

திருவள்ளுவரின் அரசியலில் குடிமக் கள் வறிதே ஆளப்படுபவர் அல்லர். ஆட்சி யிற் பங்கு கொள்பவராகவும் விளங்கு கின்றனர். *13* அதிகாரங்கள் கொண்ட குடியியலில், ஒருமுறையேனும் அரசன் அல்லது மன்னன் என்னும் சொல் வந்தி லாமை, இவ்வுண்மையினை வலியுறுத்தும். 'குடிதழீஇக் கோல்ஓச்சும் மன்னன்' என்ற திருக்குறள் தொடர், இந்நாளைய பாராளு மன்றக் குடியாட்சி முறையினையே (Parliamentary Democracy) சிறந்த தாகக் கூறுகின்றது என்பதனை யுணர்த் துவதாதல் காணலாம்.

ஒப்புரவு :

திருக்குறள் இரண்டாயிரம் ஆண்டு கட்டு முற்பட்ட மிகப் பழைய நூலேயாயி னும், இந்நாளைய புதுமைக் கருத்துக்களை யும் கூட ஏற்றுபெற்றி, இனிது விளக்குந் தகையதாகத் திகழ்கின்றது. இந்நாளில் உலகமெங்கணும் பரவிப் பெருகிவரும் பொதுவுடைமைக் கொள்கை (Communism), சமவாய்ப்பியற் கொள் கை (Socialism) போல்வனவற்றையும் கூட, ஒரு வகையில் திருக்குறள் உணர்த்து கின்றது எனலாம். திருக்குறளில் வரும் 'ஒப்புரவு அறிதல்' என்னும் அதிகாரம், ஒரு வகையில் இன்றோரனைய புதுமைக் கருத்துக்களையும், இனிது ஏற்றுத் தழுவிக் கொண்டு விளக்குகின்றது எனல் கூடும். சோஷியலிசம் அல்லது சமதர்மம் எனப் படும் சொற்களால் குறிக்கப்பெறும் கருத் தினையே 'ஒப்புரவு' என்னும் சொல் குறிக் கின்றது எனக்கொள்ள இடமுளது.

(1) "ஊருணி நிறைந்தற்றே உலக வாம் பேரறிவாளன் திரு." (2) "பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம் நய னுடையான் கட்படின்" (3) "மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம் பெருந்தகை யான்கட்படின்" என்னும் குறள்கள், இவ் விருவகைப் புதிய கொள்கைகளுக்கும் செவ்விய நல்ல முன்னோடி எனலாம்.

சீர்திருத்தச் செந்நெறி :

திருவள்ளுவர், ஒரு சிறந்த சீர்திருத் திருத்தக்காரரும் புரட்சியாளருமாவர். மக்கட் சமுதாயத்தைச் சீர்திருத்தி, அவர் களை வையத்து வாழ்வாங்கு வாழ்விக்க வந்த மாட்சிமை யுடையவராகலின், திரு வள்ளுவர் அக்காலத்துச் சமுதாய வாழ்வில்

நிலவியிருந்த பலவகைக் குற்றங் குறைகளைக் கடிந்து கூறித் திருத்துவதற்குச் சிறிதும் தயங்கிற்றிலர். அக்காலத்தில் பெருக நிகழ்ந்து வந்தனவாகத் தெரிகின்ற கொலை வேள்விகளைத் திருவள்ளுவர் பெரிதும் வெறுத்து மறுத்துள்ளார். "அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று" எனவும், "நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக் கொன்றாகும் ஆக்கம் கடை' எனவும், திருவள்ளுவர் கொலை வேள்விகளைக் கடிந்துரைத் திருத்தல் காணலாம்.

கொல்லாமையை ஒரு பெரும் கொள்கையாகக் கூறிக்கொண்டு, தாம் உயிர்களை நேரே கொல்லாமல், பிறர் கொன்று கொண்டு வந்து தந்த புலாலைப் பலர் அக்காலத்தில் உண்டு வந்தனர். புலால் உண்ணுதலை ஒரு குற்றமாக அவர்கள் கருதிற்றிலர். அவர்களை மறுத்து, "தினற் பொருட்டாற் கொல்லாது உலகெனின் யாரும் விலைப்பொருட்டால் ஊன் தருவாரில்" எனவும், "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்" எனவும், திருவள்ளுவர் அருளிச் செய்தனர். திருவள்ளுவர்,

> "சமயக் கணக்கர் மதிவழி கூறாது
> உலகியல் கூறிப் பொருள்இது என்றவர்"

ஆதலின், பண்டைக் காலத்துச் சமயவாதிகளிற் பலர், தலை முடியை மழித்தல்-நீட்டல் - பறித்தல் (கேசலோசனம்) முதலிய போலி வேடங்களைப் பூண்டு, புரிந்துவந்த கூடாவொழுக்கச் செயல்களைப் பெரிதும் கடிந்துரைத்தார் "வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம் புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று" "வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்" என்பன போன்ற திருக்குறள்கள் திருவள்ளுவரின் சீர்திருத்தச் செந்நெறியினைத் தெற்றென உணர்த்தும்.

காமஞ்சான்ற ஞானப் பனுவல் :

திருவள்ளுவரின் மாட்சிமை, அறத்துப் பாலிலும், பொருட்பாலிலும் மட்டுமேயன்றி, காமத்துப்பாலிலும் கவின்மிக்குச் சுடர்விட்டு ஒளிர்கின்றது. காமம் என்னும் சொற்கேட்ட துணையானே, அதனைமிக இழிந்ததாகக் கருதி வெறுத்து ஒதுக்கி விடுபவர் பலருண்டு. அத்தகைய இழிந்த காமத்தினையும்கூட, நம் திருவள்ளுவர் மிக உயர்ந்த சிறந்த புனிதப் பொருளாக மாற்றிப் போற்றியுள்ளார். அகப்பொருள் நூல்களில் பொதுவாகவும் இயல்பாகவும் "குல் தொடர்அல்' போன்ற சில சொற்கள் அடிக்கடி போதருவதுண்டு, அனைய சொற்கள் எதுவும் ஒரு சிறிதும் விரவாமல் மிகவும் அரிய இனிய அழகிய முறையில், காமத்துப் பாலைத் திருவள்ளுவர் இயற்றியருளியுள்ள திறன், மிகப் பெரிதும் வியக்கற்பாலது. மாணிக்கவாசகரின் திருச்சிற்றம்பலக் கோவையாரும், நம்மாழ்வாரின் திருவிருத்தமும் போன்ற "காமம் சான்ற ஞானப் பனுவல்கள்" தோன்றுதற்கு வழி வகுத்தருளிய பெருமை, திருவள்ளுவரையே சாரும் எனக் கூறுதல் பொருந்தும்.

முடிவுரை :

இங்ஙனமெல்லாம் மிகச்சிறந்த முறையில், தெய்வப் புலவர் திருவள்ளுவர் பெருமானால், இயற்றப் பெற்றமை பற்றியே, ஆழ்வார்கள் நாயன்மார்கள் போன்ற அருட்பெரும் சான்றோர்களும், அவர்களின் அடிச்சுவட்டினைப் பின்பற்றிப் போந்த அரும்பெரும் கவிஞர்களும் பிறருமெல்லாம், திருக்குறளின் கருத்துச் சொற் பொருட்சுவை நலங்களைப் பெரிதும் போற்றித் தத்தம் பாடல்களில் அமைத்து மகிழ்வாராயினர். ஆழ்வார்களும் நாயன்மார்களுமே திருக்குறளை வியந்து போற்றியுள்ளனர் எனின், திருக்குறளின் பெருமையினையும், அதனை இயற்றியருளிய திருவள்ளுவரின் மாட்சியினையும், நாம் அளவிட்டுரைத்தல் இயலுமோ! திருவள்ளுவரின் மாட்சிமை உணர்ந்து, திருக்குறளைக்கற்று, அதன் வழி நின்று நாம் அறம்பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பெரும் பேறுகளையும் எய்தும் வகையில், வையத்து வாழ் வாங்கு வாழ்ந்து நலமுற முயலுவோமாக!

(வெண்பா)

காலத்தால் வாடிக் கழியாது; பன்னலமார்
சீலத்தாற் குன்றாச் சுவைதிகழும்; ஏலத்தான்
ஊட்டிப் பசிபெருக்கும்; ஓங்குதிருவள்ளுவர்நூல்
மாட்சிக் கிணையுண்டோ? மற்று.

—ஆசிரியர்.

திருத்தேர் வெள்ளோட்டத் திருவிழா

வாழ்த்துச் செய்தி

[திரு. கே. எஸ். நரசிம்மன், B. A., B. L., I. A. S.]

தொண்டை நாட்டிலுள்ள திருமால் தலங்களுள் மதுராந்தகம் என்பது ஒன்று. அது சென்னைக்குத் தெற்கே ஏறத்தாழ 50 கல் தொலைவில் அமைந்துள்ளது. இத்தலம் ஆழ்வார்களால் திவ்வியப்பிரபந்தத்தில் மங்களாசாசனம் செய்யப்பெற வில்லையாயினும், வைணவ சமயப் பெருமக்களால் பெரிதும் மதித்துப் போற்றப்பெற்று வருகின்றது. வைணவ சமயத்தைப் போற்றி வளர்த்துப் பரப்பியருளிய பெருஞ் சான்றோராகிய இராமாநுசர் என்னும், எம்பெருமானுர்க்கு அவர்தம் குருவாகிய பெரியநம்பிகள் என்பவர், தாபம் புண்டரம் நாமம் மந்திரம் வாகம் என்னும் பஞ்ச சம்ஸ்காரங்கள் செய்தருளிய தலமாதல் பற்றி, இது பெரும் சிறப்புடையதாகப் போற்றப்பெற்று வருகின்றது.

பாண்டிய மன்னனை வென்று, மதுரை மாநகரைக் கைப்பற்றித் தன் ஆட்சியின் கீழ்ச் சேர்த்துக்கொண்ட முதற் பராந்தகன் (கி. பி. 907-950), மதுராந்தகச் சோழன் என்னும் சிறப்புப்பெயர் பெற்றான். அம்மதுராந்தகச் சோழ மன்னனின் நினைவாகவே இத்தலம் மதுராந்தகம் எனப் பெயர்பெற்றது முதற் பராந்தகசோழனுக்கு, வீரசோழன் என்றும், வீரநாராயணன் என்றும் வேறு சிறப்புப் பெயர்களும் உண்டு. அப்பெயர்களைத் தழுவி இவ்வூரிலுள்ள ஏரி வீரநாராயணவதி என்றும், வாய்க்கால் வீரசோழவாய்க்கால் என்றும், இங்கிருந்த கடைத்தெரு வீரசோழப்பேரங்காடி என்றும் பெயர் பெற்றிருந்தன என்று கல்வெட்டுக்களால் தெரிகின்றது. இத்தலத்திற்கு வகுளாரண்யம் என்றும், மகிழவனம் என்றும் தலபுராணங்களில் பெயர்கள் கூறப்படுகின்றன.

இத்தகைய சிறப்புமிக்க மதுராந்தகத் தலத்தில்உள்ள பெருமாள் கோயிலின் பெயர், **கோதண்டராமர் கோயில்** என்பது. கல்வெட்டுக்கள் **திருஅயோத்திப்பெருமாள்** என்று குறிப்பிடுகின்றன. இக்கோயிலில் உள்ள தாயாருக்குச் **சனகவல்லித்தாயார்** என்பது பெயர். சதுர் (நான்கு) வேதங்களையும் கற்றுத் தேர்ந்திருந்த அந்தணர்களுக்கு, இவ்வூர் இறையிலி (வரியில்லாத) முற்றூட்டாகச் சோழமன்னனால் வழங்கப் பெற்றது. ஆதலின் இதனை மதுராந்தகச் சதுர்வேதிமங்கலம் என்று கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. கோதண்டராமர் கோயிலில் உள்ள கல்வெட்டுக்களில், முதற்பராந்தக சோழன் (கி. பி 907-950), முதலாம் இராசேந்திர சோழன் (கி. பி. 1022-1044), விக்கிரமசோழன் (கி. பி. 1118-1135), இரண்டாம் குலோத்துங்க சோழன் ஆகிய பல சோழ அரசர்களின் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. ஆதலின் இக்கோயில் மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்தது என்னும் செய்தி புலனாகின்றது.

இராமபிரான் இலங்கையில் இராவண வதம் செய்து புட்பக விமானத்தில் அயோத்திக்குத் திரும்பும்போது இங்கு அமைந்திருந்த விபாண்டகமுனிவரின் ஆசிரமத்திற்கு எழுந்தருளினார் என்பதுவரலாறு. அப்போது விமானத்தினின்று இறங்கும் சீதைக்குக் கைகொடுத்து அணைத்து உதவி செய்யும் நிலையில், இங்கு இராமபிரானின் திருவுருவம் அமைந்துள்ளது. இதனை **"அஸ்த வாலம்பன தரிசனம்"** என்று பெரியோர்கள் கூறுவர். இது வேறெங்கும் காணமுடியாத சிறப்புக் காட்சியாகும்.

இங்குள்ள கோதண்டராமரைப் பக்தர்கள் 'ஏரிகாத்த பெருமாள்' என்றும், அன்புடன் போற்றி வருகின்றனர். மதுராந்தகம் ஏரி சுமார் 3000 ஏக்கர்களுக்குப் பாய்ச்சல் வசதி அளிக்கும் சிறப்புடையது. சிலசமயங்களில் மழைக்காலத்தில் மழை மிகுதியினால் பெருவெள்ளம் நிகழ்ந்து, இவ் ஏரியின் கரைகள் உடைந்து, சுற்றுப்

புக்கங்களிலுள்ள கிராமங்களுக்குப் பெரும் சேதம் விளைவிப்பது உண்டு.

அங்ஙனம் அடுத்தடுத்துச் சில ஆண்டுகள் நிகழ்ந்து வந்தது. கிழக்கிந்தியக் கம்பெனியாரின் ஆட்சியில் மாவட்டத் தலைவராக விளங்கியிருந்த **லயனல் பிளேசு (Lionel Place)** (*1795-1798*) என்பவர் காலத்தில், அங்ஙனம் பெருமழையினால் ஏரியின்கரைகள் உடைந்து விடுமோ என்ற பேரச்சம் உண்டாயிற்று. அப்போது குடிமக்கள் கோதண்டராமப் பெருமானை ஏரியின் கரைகள் உடைபடாமல் இருக்கும்படி செய்ய, பெரிதும் வேண்டிக்கொண்டனர். அஃதறிந்த மாவட்டத் தலைவராகிய லயனல்பிளேசு என்பவர் ஏரியின் கரைகள் உடைபடாமலிருந்தால், தாமும் பெருமாளின் அருளாற்றலை நம்புவதாகவும், அதன் அடையாளமாகக் கோயிலுக்குத் திருப்பணி செய்து உதவி புரிவதாகவும் குடிமக்களுக்கு உறுதி கூறியிருந்தார். அதன்படியே பெருமழை பொழிந்து மிகு வெள்ளம் ஏற்பட்டபோதிலும் கரைகள் உடையாமல் இருந்தன. இராமரும் இலக்குவரும் வில்லேந்திய கையினராய் அக் கரையைக் காத்துவருவதுபோல ஓர் அருட்காட்சி அவ்வெள்ளையருக்குத் தோன்றியது. அதனால் அவர்பெரிதும் மகிழ்ந்தார். தாம் கூறியபடியே அக்கோயிலுக்குத் திருப்பணி செய்ததுடன், சனகவல்லித் தாயாருக்குத் தனியே ஒரு சந்நிதியும் அமைத்துக் கொடுத்து மகிழ்ந்தார். இன்றும் அச்சந்நிதியில், "இந்தத் தருமம் கும்பினி கலெக்டர் கர்னல் லயனல் பிளேசு துரை அவர்களது" என்னும் எழுத்துக்கள் பொறித்த கல்வெட்டைக் காணலாம். இந்நிகழ்ச்சியின் பயனாக "ஏரிகாத்த பெருமாள்" என்று இங்குள்ள கோதண்டராமரைப் பக்தர்கள் அனைவரும் போற்றி வருகின்றனர்.

பழமையும் பெருமையும் மிக்க இக்கோயிலில் புதியதாக ஒரு திருத்தேர் பெருஞ்செலவில் செய்து அமைக்கப்பெற்று, 4-6-73 அன்று காலை 9·15 மணிக்கு வெள்ளோட்டவிழா சிறப்புற நடத்தப் பெற்றது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இவ்வெள்ளோட்ட விழாவைத் தரிசித்துப் பெரிதும் மகிழ்ச்சியுற்றனர்.

புதிய திருத்தேரை மிகவும் நல்ல முறையில் பெருஞ் செலவில் குறுகிய காலத்திற்குள் செம்மையாகச் செய்து முடித்து, பக்தர்கள் அனைவரும் தரிசித்து மகிழும்படி வெள்ளோட்டவிழாவும் நிகழுவதற்குத் துணைபுரிந்த அறங்காவலர் பெருமக்களுக்குப், மற்றும் தொடர்புடைய அன்பர்கள் அனைவருக்கும், என்னுடைய மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சனகவல்லித்தாயார் உடனுறை கோதண்டராமபிரானின் திருவருளால், உலகில் பசியும் பிணியும் பகையும் நீங்கி, வசியும் வளனும் சுரந்து, மக்கள் அனைவரும் அன்பினால் ஒன்றுபட்டு இன்புற்று வாழ, மனமொழிமெய்களினால் பணிந்து வணங்குகின்றேன்.★

கற்பார் இராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ?
புற்பா முதலாப் புல்லெறும்பு ஆதியொன் றின்றியே,
நற்பால் அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்
நற்பாலுக் குய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே.

— நம்மாழ்வார்.

உடலும் உயிரும்

மாட்சிமிகு. திரு. எஸ். மகராசன் அவர்கள், B.A., B.L.,
நீதிபதி, உயர்நீதி மன்றம், சென்னை.

மனித வாழ்க்கையில் உயிருக்கும் உடம்புக்கும் உள்ள உறவு இருக்கிறதே, அது மிக மிக விசித்திரமானது. இந்த உறவைப் பொய்யுறவு என்று சிலர் வெறுத்துத் தள்ளியிருக்கிறார்கள்; மெய் யுறவு என்று கண்டு வாழ்த்தி யிருக்கிறார் திருமூலர். திருமூலருடைய கொள்கை யைப் பற்றிப் பேசுதற்கு முன்னால், ஃப்ராய்ட் (Freud) முதலிய மேல் நாட்டு மனோதத்துவ ஆசிரியர்கள், ஆல்டஸ் ஹக்ஸ்லி (Aldous Huxley) முதலிய பிரபல இலக்கிய கர்த்தர்கள், இந்த உறவைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று சற்றுப் பரிசீலனை செய்வோம் மனிதனுடைய ஆன்மாவுக்குத் தனியான சுதந்திரம் என்று ஒன்றுமில்லை; அது முற்றிலும் உடலுக்கு அடிமைப் பட்டிருக்கிறது; உடம்போ தன்னைச் சுற்றியிருக்கும் சூழலுக்குக் கட்டுப்பட்டிருக்கிறது. ஆகவே, ஆன்மா வானது அடிமைக்கு அடிமையாக இருந்து குற்றேவல் செய்கிற வஸ்துதான் என்று, மேற்சொன்ன இருவரும் வற்புறுத்து கிறார்கள்.

ஏதோ, உடலைப் பாதிப்பது ஓரளவு மனசையும், உயிரையும் பாதிக்கும் என்பது உண்மைதான். அஜீரணத்தினால் நமக்குக் கோபம் வருவது சகஜம். வெள்ளைக்காரக் கவர்னர்களிடம் தயவு எதிர்பார்த்துச் செல்லுகிறவர்கள், உடலை வாட்டுகிற சென்னை நகரத்திலே போய் அவர்களைப் பார்ப்பதில்லை. உடல் குளிர, உள்ளங் குளிர உதகமண்டலத்திலே இருக்கும் போது, அவர்களைப் பேட்டி கண்டு, வெற்றிகரமாக இராவ்பகதூர் திவான்பக தூர் பட்டமெல்லாம் பெற்று வந்திருக் கிறார்கள், நம் நாட்டு உள நூற்புலவர்கள்.

ஆனால், ஆன்மாவுக்குத் தன்னிச்சை யென்பதே கிடையாது. உடம்பு சொன்ன படி யெல்லாம் ஆடுகிறது என்ற கொள்கை யைத் தான் ஒப்புக்கொள்ள முடியவில்லை. வாஸ்தவந்தான். இந்த இரண்டு தத்து வங்களுக்கும் இடையே நடக்கிற போராட் டத்தைப் பார்க்கும்போது, நமக்கு ஓரளவு சோர்வு ஏற்படுகிறது; ஆன்மாவிடத்திலே நமக்கு அனுதாபங் கூட ஏற்படுகிறது. உயிரை அவமானப்படுத்தி, அதன் கொட் டத்தை யடக்க வேண்டுமென்றே இந்த உடம்பு நமக்கு ஏற்பட்டதோ என்று கூடச் சந்தேகிக்கின்றோம். தொண்டைப் புகைச்சல், ஜலதோஷம், காசம், பக்க வாதம்—இப்பேர்ப்பட்ட நோய்களை ஆயுத மாகக் கொண்டு, உடம்பு உயிர்மீது படை யெடுக்கிறது. இந்த யுத்தம், உலகம் தோன்றிய நாள் முதல், ஒருதலைப் பட்ச மாகவே முடிகிறது. இன்று, இல்லையேல் நாளை, உயிர் உடம்புக்கு இரையாகிறது. உணர்வு என்பது நீங்கி, மயக்கமும், அவஸ் தையும், வாயாலெடுப்புந்தான் மிஞ்சு கிறது. வாழ்க்கையில் ஆன்மாவுக்கு ஸ்தானம் இல்லை. எல்லாம் உடம்பும், அது செய்கிற அட்டூழியமுந்தான். இள மையில் மிகுந்த அழகோடு பொலிகிறது உடம்பு. முதுமையிலோ, மசகு போடாத வண்டியைப்போல, மொழிக்கு மொழி திணறிக்கொண்டு, கீச்சல் போடுகிறது. ஆகாயத்திலே கண்ணுக்குத் தெரியாமல் சஞ்சரித்துக் கொண்டிருக்கிற கிருமிகள், கொக்கரித்துக் கொண்டு. உடம்பிலே புகுந்து, விரைந்து பெருகி, அற்புதமான உடற் கருவிகளைப் புசித்து உயிர்ச்சத்தைக் குடித்து, உடம்பை த்வம்ஸம் செய்கின் றது. மிஞ்சுவது என்ன? ஒரு பிடி சாம்பல், அரைப்பிடி கந்தகம், கொஞ்சம் சுண் ணாம்பு, ஒரு ராத்தல் கரி. அரசியலைப் பற்றி அவன் பேசின வீரப்பேச்சுக்கள், தேனிலே குழைத்தது போன்ற அவன் குரலினிமை, சுத்தப் பிரம்மத்தைப் பற்றிய அவனது சித்தாந்த நுட்பங்கள், இட

றென்று கொப்புளித்து மறையும் அவன் புன்முறுவல், கடவுளிடத்திலே அவன் வைத்திருந்த அபார பக்தி—இவ்வளவும் மறைந்து, மிஞ்சுகிறது என்ன? ஒருபிடி சாம்பல், அரைப்பிடி கந்தகம், ஒரு ராத்தல் கரி...ஆன்மாவாவது! மண்ணுங்கட்டி யாவது!

ஆனால் இந்த மண்ணுங்கட்டிக்குள்ளே உயிர் எப்படி வந்து தொத்திக்கொண்டது? "அப்பத்தை எப்படிச் சுட்டாளோ, அதில் தித்திப்பை எப்படி வைச்சாளோ?" என்றாளே, அந்தக் குழந்தையைப் போல, கேள்விக்குப் பதில் தெரியாமல், அதிசயத்திலே கேள்வியையும் மறந்து விடுகிறோம். சலனமற்ற, அறிவற்ற, உயிரற்ற, அறுகு நுனி பனியனைய சிறிய துளி ஒன்று கர்ப்ப வாழ்க்கையை ஆரம்பிக்கிறது. சிறிது காலத்தில் பனித்துளி ஜவ்வு மாதிரி உரு வெடுக்கிறது பின்னல், புழுவைப்போல் நெளிய ஆரம்பிக்கிறது. சில நாட்கள் கழிகின்றன; இறக்கை முளைத்த மீன்போலக் காட்சி அளிக்கிறது.

இந்த விசித்திர வஸ்துவுக்குள்ளே, ஒரு இதயம், அதற்குள்ளே ஒரு துடி துடிப்பு, உணர்வு-ஒருநாள் இது பிறந்து, மீசை முளைத்த ஆண்மகனை வளர்ந்து, இன்ப துன்பத்தை நுகர்வதும், காதலிப்பதும், வெறுப்பதும் நினைப்பதும், சிந்திப்பதும், கற்பனைக் கோட்டைகள் கட்டுவதும் - என்ன விசித்திரம்! அன்று உணர்வில்லாத ஜவ்வாக இருந்த ஒரு பொருள், இன்று இறைவன் என்ற ஒரு பொருளைக் கற்பனை செய்து வணங்குகிறது. இறக்கை முளைத்த மீனாக இருந்த ஒரு பொருள், நன்மை தீமை என்ற இருவினைகளைச் சீர்தூக்கி எடை போடுகிறது. புழுவைப்போல நெளிந்து கொண்டிருந்த அது, இன்று சீதக்கதிர் மதி மேல் சென்று தேனுண்ணுகிறது; இசை யலைமேல் மிதந்து நாதப்பிரமத்தை நாடுகிறது; கவிதையை ரசித்துக் கட்டடங்காக் களிப்பெய்கிறது. இப்படியெல்லாம் செய்கிற ஆன்மாவிருக்கிறதே, ஏன் புழுவடையும் பாண்டத்தோடு, ஒரு பிடி சாம்பலாகக் காத்திருக்கும் உடம்போடு, உறவு கொண்டது? இந்தக் கேள்விக்கு ஒரு அற்புதமான விடையளிக்கிறார் வள்ளுவர்:

"அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு"

அன்பே வடிவமாக உள்ள ஒரு சக்தி உலகங்களையெல்லாம் இயக்கி வருகிறது. அந்தச் சக்திதான் இந்த எலும்புக்கூட்டோடு ஆன்மாவைக் கொண்டுவந்து இணைத்திருக்கிறது. ஆகவே, அன்பை அடித்தளமாகக் கொண்ட இந்த உறவு வெறுக்கத்தக்கதல்ல, பெரிதும் விரும்பத்தக்கது என்றார் குறளாசிரியர். வள்ளுவரின் வழித்தோன்றலாகிய திருமூலரும் இந்த மர்மத்தை யுணர்ந்தவர். ஆல்டஸ் ஹக்ஸ்லிக்கு ஏற்பட்ட சந்தேகம் அவருக்கும் ஏற்படாமலில்லை.

"உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்"

என்று சொன்னவர், அன்பின் திறத்தை உணர்ந்தவராகையால் உடலுக்குள்ளே ஒரு புதுமையைக் கண்டார்.

"உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்"

என்று ஓலமிடுகிறார். கிறிஸ்தவ சமயத்திலும், "The in-dwelling God" (உடலுக்குள் உறையும் இறைவன்") என்ற சித்தாந்தத்தை ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

உடலினுள் உத்தமன் கோயில் கொண்டிருக்கிறான் என்ற உண்மையைக் கண்ட மாத்திரத்திலேயே திருமூலர், உடம்பு உயிரைக் காட்டிலும் மேம்பட்டது, அதை உரிய முறையில் ஓம்ப வேண்டும் என்று பறைசாற்றுகிறார். உயிர் இந்த உடல்மூலம் பெறுகிற அனுபவங்களால் உயர்ந்த நிலையை யடைகிறது. உயிரை உய்விக்கும் கருவியாக உடலைக் கருதவேண்டும். உடம்பார் அழிந்துவிட்டால், உயிரார் அழிவார், அனுபவமும் அழிந்துவிடும். ஆகவே, உடம்பை வளர்க்கவேண்டும். மிருகத் திமிரை வளர்க்கும் முறையிலே உடம்பை வளர்த்தால், உயிருக்குப் பயனில்லை. ஆகையால், வளர்க்கும் உபாயம் அறிந்து உடம்பை வளர்க்கவேண்டும்.

"உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே"

என்பது திருமந்திரம்.

உயிருக்கு இதமான முறையிலே உடம்பை வளர்ப்பது எப்படி? என்பதைப்

பற்றிப் பல பாடல்கள் பாடியிருக்கிறார். இங்கேதான் "சாவியை இழந்துவிட்டோமே, அர்த்தம் புரியவில்லையே" என்று கையை விரிக்க வேண்டியிருக்கிறது.

ஆல்பெர்ட் ஷ்வைட்ஸர் (Albert Schweitzer) என்ற ஜெர்மன் தத்துவ ஞானி, உலகச் சமயங்களை யெல்லாம் இரண்டு வகையாகப் பிரிக்கிறார். ஒன்று, "கடவுள் மாத்திரமே உண்மை; வாழ்க்கை, உடம்பு-எல்லாம் பொய்" என்று கருதுவது. மற்றொன்று, "கடவுள் உண்மை; அவர் அமைத்த வாழ்க்கையும் உண்மை" என்று கருதுவது. எது சரி, எது தப்பு என்று சொல்வது கஷ்டமான காரியம். ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். வாழ்க்கை பொய்யென்று கருதுகிறவர்கள் இமயமலைச் சாரலிலேயுள்ள பனிக்குகைகளை நாடிச் செல்வார்களே யொழிய, வாழ்க்கையைத் திருத்தி அமைப்பதிலோ, மக்களுக்குச் சேவைசெய்திலோ, நோயோடும் வறுமையோடும் போராடுவதிலோ மனசை ஈடுபடுத்தமாட்டார்கள். வாழ்க்கை உண்மையானது, தன்னலமற்ற பரிபூரணமான வாழ்க்கை மூலந்தான் ஆன்மாவுக்கு விமோசனம் உண்டு என்று நினைக்கிறார்கள். சமூக சேவையிலே உற்சாகத்தோடு ஈடுபடுகிறார்கள். மேற்சொன்ன ஷ்வைட்ஸர் என்பவர், "மேல்நாடுகள் வறுமையையும் பிணியையும் வென்று உன்னதமான வாழ்க்கை நடத்திவர, கீழ்நாடுகளில் உயர்ந்த வாழ்க்கைத்தரம் இல்லாமலிருப்பதற்குக் காரணம், சமயக் கோட்பாட்டில் வேற்றுமைதான்" என்று சொல்லிவிட்டு, "ஆனால், தமிழ்நாட்டில் மாத்திரம் வாழ்க்கையின் உண்மையை அறிந்த பல ஞானிகள் இருந்திருக்கிறார்கள்" என்று "Indian Thought" என்ற நூலிலே ஒப்புக் கொள்ளுகிறார். அவர் ஒப்புக்கொள்ளுவதற்கிணங்க, திருமூலரும் மனிதனை நடமாடும் கோயில் என்றே கூறியிருக்கிறார். "படங்களும், சிலைகளுமுள்ள கோயிலிலே இறைவனைச் சேவிப்பதைக் காட்டிலும், நடமாடும் தெய்வமாயிருக்கும் மக்களுக்குச் சேவை புரிவதே மேல். மனித சமுதாயமே நான் வணங்கும் ஈசுவர சந்நிதானம்", என்று மிகுந்த துணிச்சலோடு பாடுகிறார்:—

"படமாடக் கோயில்
 பகவற்கு ஒன்று ஈயில்,
நடமாடக் கோயில்
 நம்பர்க்கு அங்கு ஆகா;
நடமாடக் கோயில்
 நம்பர்க்கு ஒன்று ஈயில்,
படமாடக் கோயில்
 பகவற்கு அது ஆமே"

அதிதீவிர நாஸ்திகப் புரட்சிவாதிகள் கூட சமூக சேவைக்கு இவ்வளவு அழுத்தம் கொடுத்ததில்லை. பெர்ட்ரன்ட் ரஸ்ஸல் (Bertrand Russel) போன்ற நாஸ்திகர் சொல்வதெல்லாம், "ஆன்மா, கடவுள் என்பதைப்பற்றிக் கவலையில்லை. தன்னலமற்ற சேவையில் தனியான இன்பம் இருக்கிறது. ஆகையினால், அதைச் செய்யவேண்டும்", என்பதே. இந்தக் கொள்கையிலே வறட்சியிருக்கிறது. சமூக சேவையினால், மனசிலே ஒரு இன்பம் மாத்திரமல்ல, ஆன்மாவுக்கு வளர்ச்சியும் ஏற்படுகிறது என்று திருமூலரோடு நாமும் நம்பினால், தொண்டு செய்வதிலே நாஸ்திகர்களைக் காட்டிலும் பன்மடங்கு உற்சாகமும் சோபையும் ஏற்படுமல்லவா?

இயற்கைக் காட்சியில் இன்பச்சுவை

திரு என். எஸ். தாத்தாச்சாரியார், தஞ்சை.

முன்னுரை :

பழகு தமிழ்ச் சொற்களில் சிறப்புள்ள சொல் 'அன்பு' என்ற சொல்லாகும். அன்பாகிய தாயிடத்தில் உண்டானது 'அருள்' என்ற சேயாகும். உற்றார் உறவினர்பால் காட்டும் பற்றை அன்பு என்றும், இன்னார் இனியரென்றில்லாது எவரிடத்தும் பரவி நிற்கும் பரிவை அருள் என்றும் கூறுவார்கள். உள்ளம கனியுங்கால் ஏற்படும் மெய்ப்பாடே அன்பாகும். அன்பும் அருளும் கலக்குங்கால் இறை சுவைக்கக் காண்கிறது. அன்பானது, நம்முடைய பெண்டிர் மக்கள்பால் சென்று, பின் இறைவனை நோக்கிச் செல்லும்பொழுது இறைவன் அருள் நம்மிடம் அலைபாயகிறது. உலக வளர்ச்சிக்கும் அன்பின் தொடர்பு இன்றியமையாதது.

அன்பின் வழி :

அன்பானது இரண்டு உயிர்களின் தனித்த நிலையில் உண்டாவதன்று. இரண்டு பொருள்களின் கூட்டுறவினால் நிகழ்வதாகும். அன்பில்லாத உயிர்வாழ்க்கை வன்னிலத்தில் பட்ட மரத்தை ஒக்கும். 'அன்பின் வழியது உயர்நிலை' என்ற திருக்குறளடியும், உயிர்நிலை பெறுவது அன்பின் வழியிலேதான் என்று உறுதிப்படுத்துகின்றது. அறம் தழைக்கவும், அவ்வன்பின் சார்பு வேண்டற்பாலது. ஏன்? மறத்திற்கும் அஃதே துணைபுரிகிறது. காய் பழமாவதுபோல், அன்பு பழுத்தால் அருளாகிறது. அத்தகைய அன்பே கடவுள். அன்புகொண்டே அவனைக் காணமுடியும். 'அன்பில் அன்றி ஆழியானை யாவர் காண வல்லரே' என்று சந்தவிருத்தமும் கூறிற்று. மேலும், நம்மாழ்வார் எம்பெருமானை விளிக்குமிடத்துக் 'கோலமலர்ப்பாவைக்கு அன்பாகிய என் அன்பே' என்று விளிக்கிறார். இத்தகைய அன்பைக்கொண்டு, இறைநிலையை அறிய முற்படும் மதமே, அன்பு மதமாகும். இக்கொள்கையின் அடிப்படையில் ஆழ்வார்கள் வைணவ சமயத்தை வளர்த்தனர். அவர்களின் அமுதன்ன அருளிச் செயல்களாகிய கற்பகக் கொடிகள், இந்த அன்பு என்னும் உரம் கொண்டே பரவிப் பூத்தன எனலாம். நூற்றந்தாதியில் அமுதனாரும், ஆழ்வார் திருவாக்கிற்கு மணமும் உண்டு என்று, "திருவாய்மொழி மணம் தரும் இன்னிசை மன்னும் இடந்தொறும்" என்ற அடியால் பணித்தார். இவ்வொழுக்கத்தையே 'தெய்வக் காதல் ஒழுக்கம்" எனவும் அழைக்கலாம். காதல் ஒழுக்கத்தையே இலக்கண நெறிகொண்டு வரையறுத்துக் கூறும் தனிச்சிறப்புத் தமிழ் மொழிக்கே தகைசான்றுளது. திருவருட்செல்வர்களான மெய்யடியார்களும் இந்த அக ஒழுக்கமாகிய அன்பு நெறிபற்றி, இன்பம் எய்த வழி கூறும் இலக்கணங்களும் இலக்கியங்களும் பல இயற்றியுள்ளமையால், இதனை இழிந்த காமம் என்று ஒதுக்குதல் பொருந்தாது. இதனைத் திருவாய்மொழி உரையிலே பரக்கக் காணலாம். பேரின்பத்தைச் சொல்லால் விளக்குதற்கு இதுவே சிறந்த வழி என மெய்யடியார் கொண்டுள்ளனர்.

அகமாவது "ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியும் கூடுங்காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறு இருந்ததெனக் கூறப்படாததாய் யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பம் உறுவதோர் பொருளாதலின் அதனை அகம் என்றார்" எனத் தொல்காப்பிய உரைநூலும் கூறிற்று. அந்த அகம் (அன்பு) களவியல், கற்பியல் என இருவகையாகப் பிரிந்து பின் ஏழுவகை உறுப்புக்களைக் கொண்டு நின்றது. இதில் கற்பியல் என்னும் பகுதியிற் காணப்படும் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்ற ஐவகை ஒழுக்கங்களிலும் மருத நிலத்துக்குரிய ஊடலே சிறப்புடைத்து. "ஊடலினாலே கூடல் இன்பம் சிறந்தது" என்பது முதுமொழியாகும்.

அகவழி நின்ற ஆழ்வார்கள் :

தொண்டர்க்கு அமுது கொலோ", "பார்பரவு இன் கவி", "அடியார்க்கு இன்ப

மாரி'' என்றெல்லாம் புகழ்ந்து போற்றப் பட்ட ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் இத்தகைய அக ஒழுக்கத்தின் விரைவும் நிறைவும் எழுத்துக்கள் தோறும் சூழல் கொண்டிருக்கும். அகத்தின் நிறைவில் அமைந்து பாடிப்பரவிய ஆழ்வார், ஞானத் தில் தன் பேச்சும், பிரேமையில் பெண் பேச்சுமாகவே பேசினர் என்பதைத் திவ்வியப்பிரபந்தத்திற் பழகும் உள்ளம் நன்கறியும். ஆழ்வாரின் அடங்காக் காதல் நிலையைப் பற்றி ஈட்டில் "எம்பெருமான் பக்கல் பிறந்த ஆசை முதிர்ந்து, நினைத்தபடி பெருவிட்டவாறே சோகமோகங்கள் பிறக் கும். இப்படியுள்ள கலவியாலும் பிரிவா லும் ஆழ்வார்க்கு வந்ததசை"... எனக் கூறப்பட்டமை காண்க! முதன் முதலில் 'உன்னைக் காணுமோர் ஆசையினால்'' என்றும், "கோலத் திருமாமகளோடு உன்னைக் கூட்டாதே'' என்றும் பேசி, "ஒருநாள் காணவாராயோ'' என்றும் இரங்கி நிற்பர். அவன் உருக்காட்டினதும், "ஆவிக்கோர் பற்றுக்கொம்பு நின்னலால் அறிகின்றிலேன்'' "களைவாய் துன்பம்' என்றெல்லாம் கெஞ்சியும் கொஞ்சியும் பேசி மகிழ்வர். இவருடைய அடங்காக் காதலைத் தணியவிட்டாலல்லது சமநிலை பெருது என்று திருவுள்ளம் கொண்ட எம்பெருமான் சிறிது புறம் காட்டி நிற்பான். அந்தோ இந்நிலை பொறுக்கவொண்ணுது ஆழ்வாரின் உள்ளத்தை நீர்ப்பண்டமாய் உருக்கிவிடும். உடனே ஊடல் தொடங் கும். 'உன்னுடைய சுண்டாயம் நான் அறிவேன்'' "பந்தும் கழலும் தந்துபோகு நம்பி'' என்று பேசுவர். இதே துறையில் திருமங்கை ஆழ்வாரும் "மறுத்துப் புறமே வந்து நின்றீர் ஏதுக்கு இது! என்னிது! என்னிது'' என உள்ளம் விள்ள நிற்பார். குலசேகராழ்வாரும் "மார்வுதழுவுவதற்கு ஆசையின்மை அறிந்து அறிந்து அறிந்தே உன்றன் பொய்யைக் கேட்டு'' என்று இப்புடையிலே அலமந்தார். பொதுவாகக் கூறின் நம்மாழ்வார் "மின்னிடை மடவார்'' பதிகத்திலும், குலசேகரர் 'ஏர்மலர்ப் பூங்குழல்'' பதிகத்திலும், திருமங்கை மன்னன் "காதில் கடிப்பு'' என்ற பதிகத் திலும், இவ்வாறு ஊடல் நிலையில் உயிரிட்ட பாசுரங்களே திவ்வியப் பிரபந்தங் களுக்கு உயிர் நாடிகளாயின. இவர்களின் ஊடல்நிலை உள்ளடங்காமல், புறத்தே பெருகிக் காண்பன தோறும், கேட்பன தோறும் ஊடுருவிப் பாய்ந்தது. ஒரு பாசுரத்தை ஈண்டுக் காணலாம்.

குளத்திலே ஊடல் :

பதியே பரவித்தொழும் திருமங்கை யாழ்வார், திருநறையூர் நம்பியைக் காண விழைகிறார். வயலும், வரப்பும், சோலை யும், சாலையும் சூழ்ந்தது சோழ நாட்டுப் பாதை. நம்பியைக் காண ஆயிரம் கண்கள் வேண்டுமே, இரண்டு கண்களைத்தானே அந்தோ! பிரமன்படைத்தான் என்று எண்ணமிட, தெய்வக் காதல் வெள்ளத் திலே கருத்தமிழ்ந்து ஓட, நம் நாற்கவிப் பெருமாள் போய்க்கொண்டிருக்கிறார். நறையூர் என்ற நாச்சியார்கோவில் கிட்டு கிறது. ஊரின்மருங்கே, அருளாளர் உள்ளம்போல் தெளிந்த நீர் வழிநின்ற பொய்கை ஒன்று தென்படுகிறது. பொய்கையில் ஒருபக்கம் ஆம்பலும், மற்ருேர் பக்கம் தாமரையும் பூத்துத் துலங்குகின்றன. அங்கொரு காட்சி. இதனைத் திருக்கண் சார்த்திய கலியன் உள்ளம் ஒத்ததன்மை கொண்டு, அக் காட்சியில் பதிந்தது. இயற்கைக் காட்சியில் இன்பச் சுவையை வடித்துக் காட்டியது. உடனே ஆழ்வார் உள்ளத்திலிருந்து பெருக் கெடுத்தது ஒரு செந்தமிழ் வெள்ளம்.

"பள்ளிக் கமலத் திடைப்பட்ட
பகுவா யலவன் முகம்நோக்கி
நள்ளியூடும் வயல்சூழ்ந்த
நறையூர் நின்ற நம்பியே''

என்பதே அவ்வமுதத்தமிழ். இவ்வடிக்குப் பட்டர் என்ற ஆசாரிய வள்ளல் அருளிச் செய்த உரைநயம் ஈடும் எடுப்பும் அற்றது:-

"ஒரு ஆம்பல் மலரிலே இரண்டு நண்டுகள் தம்பதிகளாக இனிது வாழ் கின்றன. நள்ளி என்ற பெண் நண்டு கருவுற்றது. கருவுற்ற காலத்தில் பெண் களுக்கு ஏற்படும் மசக்கை அதாவது ஆசை என்ற நிலை அதற்கும் ஏற்பட்டது. நறுமணத்தேன் பருகவேண்டும் என்பதே அந்த ஆசை. இதனைக் குறிப்பால்

உணர்ந்த ஆண் நண்டான அலவன், தேன் உள்ள தாமரைமலரை நோக்கி விரைகிறது. தாமரை மலர்புக்குத் தேனைப் பெரியவாயினால் முற்றும் பருகிற்று. நேரம் போனதும் தெரியவில்லை. மாலை வந்தது. இயற்கையாகத் தாமரை மூடிக்கொண்டது. அதனுள்ளே அகப்பட்ட அலவன், தாமரையை மலர்த்திக்கொண்டு எப்படியாவது வெளியே வரவேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தது ஆனால் அது தனக்குக் தேன் தந்த அம்மலரைச் சிதைக்கவிரும்பவில்லை. இங்குக் காதல் கரைகடந்தது இரவெல்லாம் அம்மலருக்குள்ளேயே கிடந்து, தலைவியின் பிரிவால் புரண்டு ஏங்கி விழித்து நின்றது. பொழுது விடிந்தவாறே தாமரையும் மலர்ந்தது. மலர்ந்த தாமரையிலிருந்து வெளிப்பட்டுத் தாதும், சுண்ணமும் உடம்பிலே நிழலிட்டுத் தோற்றத் தன் மனைக்கு விரைந்துவந்து கொண்டிருந்தது. பகற்பொழுதானபடியால் குடியிருந்த ஆம்பல்மலர் மூடிக்கொண்டது. இதற்கிடையில் பெண் நண்டு தன்னைப் பிரிந்த தலைவனைக் காண இரவெல்லாம் ஏங்கிநின்று, வரக்காணவில்லை. காலையில் விரைந்துவரும் தன் காதலனைக் கண்டு களிப்புற்றது. காதலனின் உடலைத் தொலைவிலேயே உற்று நோக்கியது. ஆ! கூடலின்பம் கொழிக்கும் பெண் நண்டின் உள்ளத்திலே ஊடல் ஊற்றம் பெற்றது. தலைவனின் உடல் நிலையையும் களைப்பையும், கண்களில் காணும் கலக்கத்தையும், தவறாக நினைத்துவிட்டது. பரத்தையரின் புணர்வினால் ஏற்பட்ட நிலைமாற்றம் என்று உறுதிகொண்டது. உடனே சட்டெனக் கதவைத் தாளிட்டது. ஆம்பல் தாளாக மூடிக் கொண்டதனை இவ்வாறு இன்பச் சுவையிலே மிழற்றுகிறது ஆழ்வார் திருவாக்கு. இவ்விடத்து, பெரியவாச்சன் பிள்ளையின் உரைநடை :

“பகுவாய் அலவன் கமலத் திடைப் பள்ளி பட்டது; நள்ளியானது கர்ப்பதாரணத்தாலே கேதித்திருக்க, அதுக்கு இனிய இடம்வேணும் என்று மதுவுக்காகப் போந்த அலவனானது, தாமரைப் பூவிலே வந்திழியக்கொள்ள, போது அஸ்தமிக்கையாலே உடம்பைக்கொண்டு அங்கேயிங்கே புரண்டு, இராத்திரி அதிலேதங்கி, அதில் தாதும் சுண்ணம் உடப்பிலே நிழலிட்டுத் தோற்றப் போதுவிடிந்தவாறே வந்தது. இதுபோனபோதே தொடங்கிச் கதவைக் திறந்து வரவு பார்த்துக் கொண்டு நின்ற நள்ளியானது, இதைக் கண்டு இராத்திரி தங்கினபடியாலும், உடம்பில் சுவடு இருந்தபடியாலும் இது வெறுமனல்ல என்று முகம்மாறிக் கதவையடைத்து உள்ளே போய்ப்புக்கது.”

இந்த இன்சுவை ததும்பும் கருத்தைப் பட்டர் அருளிச் செய்ததும், பிள்ளை திருநறையூர் அரையர் என்ற மகான் “ஆராய்ந்து குற்றம் நிரம்பினால் பிள்ளையன்றோ தண்டிப்பது” என்ன “என் செய்வோம்! கேள்வியில்லாதபடி பெண்ணரசு நாடாய்த்தே” எனப்பட்டர் சோதிவாய் திறந்து மாற்றம் பணித்தார். இவ்வாறு பட்டர் பெருமான் உரைத்தது ஏன் எனில்!' திருநறையூருக்கு நாச்சியார் கோயில் என்றே திருநாமம். அவ்வூரில் வில்லிபுத்தூரைப்போல் எம்பெருமானை விட நாச்சியாருக்குத்தான் சிறப்பு. அது ஒரு பெண்ணரசு நாடு. இன்றும் அங்குத் திருவீதிப் புறப்பாடுகளில் நாச்சியார் முன்னே எழுந்தருளுவதும், எம்பெருமான் பின்னே எழுந்தருளுவதுமான பழக்கம் உண்டு. ஆகவே ஆணரசு நாடென்றால் நாம் கேட்கலாம். அது பெண்ணரசு நாடாயிற்றே! எனப் பட்டர் உரைத்தது இன்சுவை. இவ்வாறே, இன்சுவை வடிவெடுத்த பாசுரங்கள் பல உண்டு.

★

ஆலயங்கள் ஆற்றிடும் அரும்பணிகள்

[மாண்புமிகு திரு மு. கண்ணப்பர் அவர்கள், அறநிலைய அமைச்சர்]

வரலாற்றுச் சிறப்பையும், வழிபடுவோர் போற்றும் சமயச் சிறப்பையும் ஒருங்கே பெற்று ஒளிர்கின்ற கற்றளிகளும் கவின்மிகு திருக்கோயில்களும் நாளும் நற்றமிழ் வளர்த்திடும் நன்மடங்களும் நிறைந்து விளங்குவது தமிழ்நாடு!



முடியுடை மூவேந்தர் காலம் தொடங்கி இன்றளவும் முறைமையான ஓர் வரலாறு கிடைத்திடத் தமிழர்க்கு உறுதுணை பயப்பவை தமிழகத் திருக்கோயில்கள் தாம். வரலாற்றுச் சான்றுகளாகவும். வழிபடுவோர் தம் குறை நீக்கும் இறைவன் உறைவிடங்களாகவும் கருதப்படும் கலைமாட்சி மிக்க இத்திருக்கோயில்களைப் பேணிப் பாதுகாத்து, இனி வரும் சந்ததியினருக்கு அளிக்க வேண்டிய பொறுப்பை நிறைவேற்றிடும் வழியில், இந்து சமய அறக்கட்டளைகள் துறை செயல்பட்டு வருகிறது என்பதை நாடறியும்

திருக்கோயில்கள் தமிழ் நாட்டில் எழுந்த முறைகளையும், அவைகளை எழுப்பிய மன்னர் தம் மன நிலைகளையும், அத்திருக்கோயில்களும் அறநிறுவனங்களும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் நின்று பயன் அளித்திட அவர்கள் ஏற்படுத்திய 'நிவந்தங்களையும்'' அவைகளை இன்றளவும் பறைசாற்றிக் கொண்டிருக்கும் கல்வெட்டுச் சான்றுகளையும் விரிவாக உணர்ந்ததன் அடிப்படையில், தமிழ்நாடு அரசு இத்துறையில் பெரும் கவனம் செலுத்திக் கடந்த சில ஆண்டுகளாகப் பல்வேறு பணிகளைச் செய்து வருகிறது.

தமிழ்நாடு அனைத்துமாக இவ்வாண்டுத் தொடக்கம் வரை இத்துறை 157 திருமடங்களும், 12,038 திருக்கோயில்களும், 832 குறிப்பிட்ட அறக்கட்டளைகளும் ஆக 13,027 அறநிலையங்களைத் தனது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுள்ளது. இவ்வனைத்து அறநிலையங்களின் மொத்த வருவாய் ரூ. 6,75 00,000 என்று மதிப்பிடப்படுகிறது. இதில் திருக்கோயில் நிலங்களைக் கண்டறிந்து இத்துறையோடு இணைக்குமாறு நியமிக்கப்பட்ட சிறப்புப் பணியாளர்களின் ஆய்வின் காரணமாக இவ்வாண்டில் 2,162 திருக்கோயில்கள் இத்துறையின் கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ள எண்ணிக்கையும் அடங்கும்.

1973-ம் ஆண்டில் திருக்கோயில்களின் எண்ணிக்கை 15 000-க்கு மேலாக உயரும் என்றும், அவைகளின் மொத்த வருமானம் சுமார் ரூ. 7,50,00,000 உயருமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

வருவாய் வாயில்கள் பெருகியதன் காரணமாக மிகை நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் நிதியிலிருந்து வானுற எழுந்து நிற்கும் இந்தத் திருக்கோயில்களில் காலத்தால் பழுதுபட்டும், கலைமாட்சியறியாதோர் கைப்பட்டுச் சிதைவுற்றதுமான பலவற்றைத் திருத்தியமைத்து அவை அழகு கெடாமல் பாதுகாக்கப் படுகின்றன.

குறிப்பாகவும் சிறப்பாகவும் தமிழகத்துச் சிற்பங்களின் கை வண்ணத்தையெல்லாம் தம் மெய் வண்ணத்தாலே பறைசாற்றி வரும் அரிய சிற்பங்கள், காலத்தால் அழியா வண்ணம் காப்பாற்றப்படுவதோடு, திருமதில்கள் ஓரங்களிலும் கருவறை பெற்ற சுற்றுச் சுவர்களிலும் கணக்கின்றி இருக்கும் கல் வெட்டுகளையும், பல்வேறு இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட கல்வெட்டுகளையும், செப்புப் பட்டயங்களையும், பிற சான்றுகளையும் முறைமையாகப் பாதுகாக்கத்தக்க வகையிலும், காப்போரின்றிச் சிறு கிராமங்களில் கிடக்கும் அழகுச் சிற்பங்களையும் பாதுகாப்பதற்கான வகையிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுத் தமிழ் மண்ணுக்குரிய சிற்பங்களும், சிலைகளும், அயலார் கரத்தைச் சென்றடையா வண்ணம் காக்கப்படுகின்றன.

பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கப்பட்ட செப்பு ஐம்பொன் சிலைகளும், கற்சிலைகளும் காண்போர் கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தளிக்கும் வகையில் அழகுற அமைக்கப்பட்டுப் பாதுகாக்கப் படுகின்றன. இவ்வாறு அமைக்கப்பட்ட கலைக்கூடங்கள் கீழ்க் காணும் இரண்டு இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

(1) அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

(2) அருள்மிகு ஜம்புகேசுவரர் திருக்கோயில், திருவானைக்காவல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்).

தஞ்சை மாவட்டம் திருவாரூரில் உள்ள அருள்மிகு தியாகராசர் திருக்கோயிலில் அந்த மாவட்டத்தில் அண்மையில் கிடைக்கப்பெற்ற பல்வேறு சிலைகள் திருக்கோயிலுக்கு வருவோரின் பார்வைக்காக வைக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தமிழ் நாட்டின் மற்ற திருக்கோயில்களில் காணப்படும் கவின்மிகு சிலைகளையும் சிற்பங்களையும் பாதுகாத்திடும் வகையில் அவைகளின் அழகு குன்றாமலும், காண்போருக்குத் தடையில்லா வகையிலும் இரும்புக் கம்பிகளால் காப்புச் செய்யப்பட்டுள்ளன. விலைமதிக்கொணாத் தமிழ் நாட்டுச் சிற்பங்களையும் சிலைகளையும் காப்புச் செய்வதில் இத்துறை மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.

1973-ஆம் ஆண்டில் இன்னும் அதிகப்படியான திருக்கோயில்களைத் திருப்பணிக்கு எடுத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டிருக்கிறது. முக்கியமாக, கிராமப் பகுதிகளில் உள்ள சுமார் 1,500 திருக்கோயில்களில் திருப்பணி நடைபெற வேண்டும் என்ற முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதே போல 1967—68-ஆம் ஆண்டு தொடங்கி, திருக்கோயில் திருப்பணிகளுக்காக அரசின் உதவித்தொகை ரூ 3 இலட்சம் என்று இருந்த நிலையை மாற்றி 1968-69 முதல் ரூ. 4 இலட்சமாகவும், 1972-73ல் ரூ.5 இலட்சமாகவும் தற்போது ரூ. 6 இலட்மாகவும் உயர்த்தி இருப்பது எண்ணிப் பார்க்கத் தக்கது.

1967-ஆம் ஆண்டு வரையில் தமிழ் நாட்டுத் திருக்கோயில்களின் சார்பில் கட்டப்பட்டுள்ள மொத்தத் திருமண மண்டபங்களின் எண்ணிக்கை 14 ஆகும். ஆனால், 1967-க்குப் பிறகு 1972 டிசம்பர்த் திங்கள் வரை தமிழ் நாட்டுத் திருக்கோயில்களின் சார்பில் துவக்கப்பட்ட திருமண மண்டபங்களின் எண்ணிக்கை 169 ஆகும். இவற்றில் 41 திருமண மண்டபங்கள் முழுமையாக முடிவுற்றுப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன: மற்றவற்றை முடிக்கும் வகையில் விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

திருமணம் நடத்த வசதியான இடமின்றித் தவிக்கின்றவர்களின் துயரம், இதன் மூலம் பெருமளவில் களையப்பட்டு வருகிறது.

திருக்கோயில்கள் மிகை (உபரி) நிதியிலிருந்து நிறைவேற்றப்படும் சமுதாயப் பணிகள்: தமிழ் நாட்டுத் திருக்கோயில்களின் தோற்றுவாயை உணர்ந்தால் அவைகள் வெறும் வழிபாட்டு இடங்களாக மட்டும் அமையாமல் சமுதாயப் பணிகளை நிறைவேற்றிடும் அமைப்புகளாகவும் சிற்பம், கலை, கல்வி, மருத்துவம், ஓவியம், நாட்டி

யம் போன்ற கலைகளை வளர்க்கும் அறநிலையங்களாகவும், காப்பகங்களாகவும், அமைந்தன என்பது தெளிவாகும். எனவே, இவற்றின் அடிப்படையிலேயே பின்வரும் சமுதாயப் பணிகளை இத்திருக்கோயில் மூலம் இத்துறையினர் நிறைவேற்றி வருகின்றனர்.

கேடில் விழுச் செல்வமாம் கல்விச் செல்வத்தை வாரி வழங்கும் வகையில் தமிழ் நாட்டில் பெருவருவாய் உள்ள திருக்கோயில்களின் சார்பில் தற்போது 6 கல்லூரிகள் தமிழகத்தில் கீழ்க்காணும் பகுதிகளில் அமைந்து செயல்பட்டு வருகின்றன,

(1) அருள்மிகு பழனி ஆண்டவர் கலைக்கல்லூரி, பழனி.

(2) அருள்மிகு பழனி ஆண்டவர் செந்தமிழ்ப் பெண்கள் கல்லூரி, பழனி.

(3) அருள்மிகு பழனி ஆண்டவர் பெண்கள் கலைக்கல்லூரி, பழனி.

(4) அருள்மிகு தேவி குமாரி பெண்கள் கல்லூரி. குழித்துறை (கன்னியாகுமரி மாவட்டம் தேவஸ்தானம் வாரியத்தினரால் நடத்தப்படுகிறது).

(5) அருள்மிகு பராசக்தி பெண்கள் கல்லூரி, குற்றாலம்.

(6) அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோவில் கல்லூரி, இராமேசுவரம்.

அண்மையில் நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த திருநெல்வேலி அருள்மிகு காந்திமதி அம்பாள் திருக்கோவில் சார்பில் மகளிர் கல்லூரி ஒன்றும், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் சார்பில் ஒரு மகளிர் கல்லூரியும் தொடங்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது. செங்கை மாவட்டத்தைச் சேர்ந்த திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் நிதியிலிருந்து அங்குத் தொடங்கப் பட்டிருக்கும் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கலைக்கல்லூரிக்கு ரூ. 5 இலட்சம் நன்கொடை வழங்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இவைகளன்றி மதுரை மாவட்டத்தைச் சார்ந்த பழனியில் அமைந்துள்ள அருள்மிகு தண்டபாணி சுவாமி திருக்கோயில் சார்பில் திரு பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரியும், தஞ்சை மாவட்டம் திருவெண்காட்டினை அடுத்த மேலையூரில் பூம்புகார்ப் பேரவைக் கல்லூரியும் செயல்படடு வருகின்றன.

இந்திய மெய்விளக்கத் துறை மற்றும் பண்பாடுகளில் பட்டப் படிப்பிற்கும் மேலான படிப்பிற்குக் கல்லூரி ஒன்று 1972-ஆம் ஆண்டில் பூம்புகாரில் தொடங்கப்பட்டது என்பதும் இங்கு நினைவு கூர்தற்குரியது.

உயர்நிலை ஆரம்பப் பள்ளிகள்: தற்போது தமிழ்நாட்டில் திருக்கோயில்களின் நிதியிலிருந்து 13 ஆண்கள் மற்றும் மகளிர்க்கான உயர்நிலைப் பள்ளிகள் நடத்தப் படுகின்றன. இவற்றில் மூன்று பள்ளிகள் 1972-73-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன மேலும் 1973-74-ஆம் ஆண்டில் தஞ்சைமாவட்டம் திருக்கடையூர் பிச்சைக் கட்டளை சார்பில் ஓர் உயர்நிலைப்பள்ளியும், முகவைமாவட்டம் பள்ளத்தூரில் அறக்கட்டளை யொன்றின் சார்பில் ஓர் உயர்நிலைப் பள்ளியும் தொடங்கப்பட இருக்கின்றன.

நாதசுரப் பள்ளிகள் : மங்கல ஒலி கூட்டி மக்களுக்கு இன்பம் சேர்க்கும் நாதசுரக் கலையைப் பேணி வளர்க்கும் வகையில் திருக்கோயில்களின் நிதியிலிருந்து கீழ்க்காணும் இரு இடங்களில் நாதசுரப் பள்ளிகள் உருவாக்கப்பட்டுத் தக்க விற்பன்னர்களைக் கொண்டு மாணவர்கள் முறையாகப் பயிற்றுவிக்கப படுகின்றனர்.

1. பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நாதசுரப் பள்ளி.

2. தஞ்சை மாவட்டம் வலிவலம் அருள்மிகு இதயக்கமல நாதசுவாமி திருக்கோயில் நாதசுரப் பள்ளி.

இவற்றில் பழனியில் 20 மாணவர்கள் நாதசுர இசையிலும், 10 மாணவர்கள் தவில் இசையிலும், தஞ்சை வலிவலத்தில் 15 மாணவர்களும் பயிற்சி பெற்று வருகின்றனர்.

ஊமையர் மற்றும் செவிடர்களுக்கான பள்ளிகள் : இயற்கையின் படைப்பில் ஊமைகளாய்ச் செவிடர்களாய்ப் பிறந்து விட்டோர்க்குப் பயிற்சி அளித்துப் பேசவும், எழுதவும், இரு பயிற்சிப் பள்ளிகள் திருவரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், மற்றும் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் ஆகியவற்றின் சார்பில் தற்போது செம்மையாகச் செயல்பட்டு வருகின்றன.

அன்பு இல்லங்கள் :— பேணுவோர் இல்லாமையால் பெருந் தொல்லைக்குட்பட்டு இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்படும் அனாதைகளைக் காப்பதற்கு அன்பு இல்லங்கள் கீழ்க்காணும் 10 திருக்கோயில்களின் சார்பில் நடத்தப்பட்டு வருகின்றன.

1. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருத்தணி.

2. அருள்மிகு நவநீதேசுவரர் திருக்கோயில், சிக்கல். நாகப்பட்டினம் வட்டம் தஞ்சை மாவட்டம்.

3. அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில், சீர்காழி வட்டம் தஞ்சை மாவட்டம்.

4. அருள்மிகு சீநிவாசப் பெருமாள் திருக்கோயில், நாச்சியார் கோயில் கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம்.

5. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

6. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி.

7. அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி.

8. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.

9. அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் திருக்கோயில் அய்யன்பாளையம், பல்லடம் வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.

10. அருள்மிகு திருமலைக் குமார சுவாமி திருக்கோயில், பண்பொழில், தென்காசி வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.

சிறுர் காப்பகங்கள் : பள்ளிப் பருவத்தை அடைவதற்கு முன்பே தாய் தந்தையரை இழந்து வாடும் சிறுர்களுக்கும் காலையிலே தொழிலுக்குச் செல்லும் தாய் தந்தையரால் கவனிக்க முடியாத சிறுர்களுக்கும் கீழ்க்காணும் 5 இடங்களில் சிறுர் காப்பகங்கள் நடத்தப்படட்டு வருகின்றன. இங்கெல்லாம் சிறுர்களுக்கு இந்து சமய நெறிமுறையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

1. அருள்மிகு வேதநாராயணப் பெருமாள் திருக்கோயில், திருநாராயணபுரம், முசிறி வட்டம், திருச்சி மாவட்டம்.

2. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், குமாரவயலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3. அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில, காரமடை, அவிநாசிவட்டம் கோயம்புத்தூர் மாவட்டம்.

4. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், இளம்பிள்ளை, சேலம் மாவட்டம்.

5. அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில், பழனி.

முதியோர் இல்லம் : சென்றஆண்டில் திருக்கோயில்களின் மிகை நிதியிலிருந்து முதியோருக்காக இல்லம் நடத்தும் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு, அதனடிப்படையில் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் சார்பில் 30 முதியோர்களைச் சேர்த்துக்கொள்ள வழிவகை மேற்கொள்ளப்பட்டு, இவ்வில்லம் 15-2-1973-லிருந்து செயல்பட்டு வருகிறது. தற்போது மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயில், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் ஆகிய இரு திருக்கோயில்களின் சார்பில் 20 பேர்களைப் பேணிக்காக்கும் இரண்டு இல்லங்கள் 15-3-1973 முதல் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

மருத்துவ மனைகள்; வழி பாட்டுக்காக வரும பயணிகள் உட்படப் பொது மக்களின் நலனுக்காக மருத்துவ மனைகளையும், மருந்தகங்களையும் தொடங்க வேண்டியதன் அவசியம் கருதி 23 சித்த வைத்திய மருத்துவ மனைகளும், ஆங்கில முறை மருத்துவமனை ஒன்றும் திருக்கோயில்களின் சார்பில் நடத்தப்படுகின்றன. சித்த வைத்திய மருத்துவமனைகளின் அவசியம் காரணமாக இன்னும் அதிகமான அளவில் இவைகளைத் துவக்க வேண்டுமென்று திருக்கோயில் அறங்காவலர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

நூலகங்கள்:—பொது அறிவினை வளர்ப்பதோடன்றி இந்து சமய நெறியினை நன்குணர்ந்து பயன்பெறும் வகையில் 204 திருக்கோயில்களில் நூலகங்கள் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன. மேலும் நிதி வசதியுள்ள திருக்கோயில்களில் நூலகங்களைத் தொடங்கத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

வழிபடுவோருக்கான வசதிகள்: அருள் தலங்கள் என்றுபோற்றப்பட்டுநாடோறும் பெருகிவரும் வழிபாட்டுப் பயணிகள் கூடுகின்ற திருக்கோயில்களின் சார்பில் வழிபாட்டுப் பயணிகள் மற்றும் வழிபடுவோர்களின் நலனுக்காக ஓய்வு விடுதிகளையும், பயணிகள் விடுதிகளையும் கட்டும் திட்டம் ஒன்று இருந்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ்ப் பல்வேறு திருக்கோயில்களின் சார்பில் வேலைகள் மேற்கொள்வதற்கான வகையில் மதிப்பீடுகள் அனுமதிக்கப் பட்டுள்ளன.

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களின் மிகை நிதியிலிருந்து சென்ற ஆண்டில் இரு பெரும் சமுதாய நற்பணிகளுக்காக ஒரு பெருந்தொகை செலவிடப்பட்டது. அவற்றில் ஒன்று பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்காகத் திருக்கோயில்கள் நிருவாகிகள் தாங்களே முன்வந்து ரூ. 3,49,616,00 அளித்துத் தம் பங்கினையாற்றியுள்ளனர்.

விழியற்றோர்க்குக் கண்ணொளி வழங்கும் திட்டத்தின் கீழ்ப் பல்வேறு இடங்களில் திருக்கோயில்களின் சார்பில் ரூ. 2,27,552,00 கொடுக்கப்பட்டதுடன், திருக்கோயில்களுக்குச்சொந்தமான இடத்திலும் இத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் மிகைநிதி மிகுந்த திருக்கோயில்களின் சார்பில் ஏழை எளிய மக்களுக்கு இலவசமாகத் திருமணம் செய்து வைக்கப்படும் திட்டம் சென்ற ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனடிப்படையில், திருக்கோயில்களின் வருவாய்க்குத் தக்கவகையில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்குக் குறையாமல் இலவசத் திருமணங்களைச் செய்விக்கவும், ஒரு திருமணத்திற்கு ரூ. 150-க்கு மிகாமல் செலவழிக்கவும் திட்டமிடப் பட்டுள்ளது. மணமக்களுக்கு இத்தொகையிலிருந்து, வேட்டி, புடவை, தாலி முதலியவை இலவசமாக அளிப்பதுடன் திருமணமும் திருக்கோயிலிலேயே இலவசமாக நடத்தி வைக்கப்படுகிறது. ஏழை எளியோருக்கு உதவும் இத்திட்டம் பொது மக்களிடையே நல்ல வரவேற்பினைப் பெற்று வருகிறது.

சின் முத்திரை

"சின் முத்திரை" என்னும் சொற்றொடர், ஞான அடையாளம் எனப் பொருள்படும். சித்—ஞானம். முத்திரை—அடையாளம். எனவே ஞானப் பொருளின் அடையாளக் குறிப்பாகத் திகழ்வது சின்முத்திரை யெனலாம். தென்முகக் கடவுளாகிய தட்சிணாமூர்த்தி, தம் திருக்கையால் சின்முத்திரையைக் காட்டிக் கொண்டிருக்கின்றார். வலதுகைக் கட்டை விரலும் சுட்டுவிரலும் ஒன்றையொன்று வளைந்து சார்ந்து நிற்க, ஏனைய மூன்று விரல்களும் விலகித் தனித்துச் சேர்த்து நின்று கொண்டிருக்கும் நிலை சின்முத்திரையாகும். நடுவிரல், மோதிர விரல், சுண்டு விரல், என்னும் மூன்றும் முறையே, ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களைக் குறிப்பனவாகும். நடுவிரல் நீண்டு முனைந்து நிற்பதனால் ஆணவ மலத்தைக் குறிப்பதாக உள்ளது. அதற்கு அடுத்த விரல் மாயா மலத்தைக் குறிப்பது என்பதனைப் புலப்படுத்தவே, மாயா மல சம்பந்தமான பொன் முதலியவற்றால் இயன்ற மோதிரத்தினை அதன்கண் நாம் அணிந்து கொள்கின்றோம். ஏனைய மலங்களைக் காட்டிலும் அநுபவித்துத் தீர்ப்பதனால் விரைவில் அழிந்தொழிந்து போகும் தன்மையது கன்ம மலமாதலின், அது சுண்டு விரலால் குறிக்கப்படுவதாயிற்று. ஆணவ மலம் நெல்லுக்கு உமியும், செம்பிற் களிம்பும்போல, உயிருள்ள அன்று முதல் தொன்றுதொட்டு இருந்து வருவது ஆதலின், அது சகசமலம் எனப்படும். ஏனைய மாயா கன்ம மலங்கள் உயிர்க்கு இடையில் வந்து சேர்வனவாதலின் ஆகந்துக மலம் எனப்படும். இவ்வுண்மையினையும், இவ்விரல்களின் வரிசை முறை தெரிவிப்பதாக உள்ளது.

பெருவிரலின் உதவியின்றி நாம் எதனையும் எடுத்தல் பிடித்தல் முதலியன செய்தல் இயலாது. ஆதலின் அது சின் முத்திரையில் பதியினைக் குறிக்கின்றது. சுட்டுவிரல், தன்னியல்பில் ஏனைய மூன்று விரல்களோடு சேர்ந்து பெருவிரலைப் பிரிந்து நிற்கின்றது; அது பசு எனப்படும். உயிரானது ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்களின் சேர்க்கையால் பதியாகிய கடவுளின் தொடர்பைப் பெறாமல், பிறப்பு இறப்புத் துன்பத்துட்பட்டு உழலுதலை உணர்த்தும். உயிர் சுட்டறிவு ஒன்றே உடையதாகலின், அதனைக் குறிக்கும் விரலும் பொருள்களைச் சுட்டி உணர்த்தும் விரலாகச் சுட்டு விரல் எனப் பெயர் பெற்றமை பொருத்தமாக உள்ளது.

கட்டை விரலின் அடியில் சுட்டு விரல் சென்று சேர்ந்து படிந்து நிற்பது, முத்தி நிலையில் உயிர்கள் சிவத்தின் திருவடிகளில் சென்று ஒன்றி நிற்றலைப் புலப்படுத்துகின்றது. உயிர்கள் பிறப்பு இறப்புத் துன்பங்களினின்று விடுபடுதல் வேண்டுமாயின், மும்மலங்களின் தொடர்பை விட்டுப் பதிப்பொருளின் திருவடிகளை அடையப்பெறுதல் வேண்டும். அதனை விளக்கவே 'சின்முத்திரையில்' சுட்டு விரலானது, தான் சேர்ந்துள்ள ஏனைய மூன்று விரல்களைப் பிரிந்து, கட்டை விரலின் அடியில் சென்று வளைந்து பணிந்து தொட்டுக் கொண்டிருக்கிறது. 'சின்முத்திரை' விளக்கும் இந் நுண்பொருள்களைப் பின்வரும் பாடல்கள் உணர்த்துதல் காணலாம்:

"பதிபசு பாசம் என்னப்
படும்ஒரு மூன்றுள் சுத்தம்
பதிநிலை ஒன்றற் கொன்று
பயில்வியாப் பியமாம்; இன்னும்
பதியொடு பசுக் கலக்கும்
பண்புமின்று எனறுஒர் செங்கைப்
பதிவிரல அளவிற சேர்ப்பிற்
பகவற்கு அடிமை செய்வாம்.

—திருநாகைக்காரோணப் புராணம்.

"செம்மலர் நோன் தாள்சேர ஒட்டாமல்
உயிரைஎலாம் தியக்கம் செய்யும்
அம்மலங்கள் கழீஇ, மிகுநல் அன்பரொடு
மருவிநீர் அடையும் முத்தி
இம்முறையாம் எனநால்வர்க்கு இருவிரற்சின்
முததிரையால் இயம்பி ஆல்கீழ்
மன்மதன்மேல் நுதற்கண்கிழீஇ வீற்றிருந்த
குருபரனை வணக்கம் செய்யவாம்,

—திருவாவடுதுறைப் புராணம்

மூவகை அடியவர்

தாங்கரும்போர் மாலிபடப் பறவை ஊர்ந்து
தராதலத்தோர் குறைமுடித்த தன்மையானை,
ஆங்கரும்பிக் கண்ணீர்சோர்ந்து அன்பு கூரும்
அடியவர்கட்கு ஆரமுதம் ஆனான் தன்னை,
கோங்கரும்பு சுரபுன்னை குரவார் சோலைக்
குழாவரிவண்டு இசைபாடும் பாடல் கேட்டு,
தீங்கரும்பு கண்வளரும் கழனி சூழ்ந்த
திருக்கோவலூர் அதனுள் கண்டேன் நானே.

ஆழ்வார்களுள் ஏனைய எல்லோருக்கும் காலத்தால் பிற்றோன்றிய திருமங்கையாழ்வார் திருக்கோவலூர்க்கு எழுந்தருளி, அருளிச் செய்த பதிகத்தில் வரும் ஒரு பாசுரம் இது. இதன்கண் திருமங்கை ஆழ்வார் தமக்கு முன்னே விளங்கியவர்களும், திருக்கோவலூரில் ஒருவரை ஒருவர் சந்தித்து மகிழ்ந்தவர்களும் ஆகிய முதலாழ்வார்கள் மூவரையும் நினைவுகூர்ந்து, அவர்களைப் போற்றிச் சிறப்பிக்கும் முறையில், பல குறிப்புக்கள் கொண்ட இப்பாசுரத்தைத் திருவாய் மலர்ந்தருளினார்.

இப்பாசுரத்தில் "ஆங்கு அரும்பிக் கண்ணீர் சோர்ந்து அன்பு கூரும் அடியவர்கட்கு ஆரமுதம் ஆனான்" எனவரும் பகுதி மிகவும் சிறப்புடையதாகும். 'ஆசார்ய இருதயம்' என்னும் சிறந்த வைணவப் பெருநூலில், மணவாளமா முனிகள் என்னும் பேராசிரியர், இவ்வரியின் பொருளை அழகுற விரித்துள்ளார். அவரது கருத்தின்படி இவ்வரியை "அடியவர்—அன்பு கூரும் அடியவர்—ஆங்கு அரும்பிக் கண்ணீர் சோர்ந்து அன்பு கூரும் அடியவர்" என்று மூன்று வகையாகப் பகுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

(1) அதன்படி, "அடியவர்" என்பது பேயாழ்வாரைக் குறிக்கும். 'இன்றே கழல் கண்டேன்' 'பொன் முடியான் அடி இணைக்கே பூரித்து என் நெஞ்சே புரி'- 'முயன்று தொழு நெஞ்சே! தண்ணலங்கல் மாலையான் தாள்'—'வாழும் வகையறிந்தேன் எங்கள் பெருமான் அடி சேரப் பெற்று' என்று, பல இடங்களிலும் திருமாலின் திருவடியையே சிக்கெனப் பற்றியவர் பேயாழ்வார். அடியையே பற்றி நின்றவராதலின், பேயாழ்வார் 'அடியவர்' எனப் புகழப்பெற்றார்.

(2) இனி, "அன்பு கூரும் அடியவர்" என்பது பூதத்தாழ்வாரைக் குறிக்கும். 'அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக' என்று தொடங்கிப் பாசுரம் பணித்தருளியவர் பூதத்தாழ்வார். "விளவின் காய் கன்றினால் வீழ்த்தவனே! என்றன் அளவன்றால் யான் உடைய அன்பு' என்று, தொடக்கத்திற் போல முடிவிலும்கூட அன்பை வியந்து வியந்து பேசி மகிழ்ந்தவர் இவர். ஆதலின், பூதத்தாழ்வாரை, 'அன்பு கூரும் அடியவர்' என்றல் பொருந்தும்.

(3) இதன்மேல், 'அரும்பிக் கண்ணீர் சோரும் அடியவர்' எனப் பாராட்டப் பெற்றிருப்பவர் பொய்கையாழ்வார் ஆவர். 'பழுதே பல பகலும் போயின என்று அஞ்சி அழுதேன்' என்று தாமே கூறியுள்ளபடி, இறைவனைப் பணியப் பெறாமல் பகல் பல போயினமை குறித்து அழுது வருந்தியவராதலின் பொய்கையாழ்வாரை அரும்பிக் கண்ணீர் சோரும் அடியவராகக் கொள்ளுதல் பொருந்தும்.

இங்ஙனம் திருமங்கையாழ்வார் தமது திருக்கோவலூர்ப்பாசுரத்தில், அத்தலத்தில், தமக்கு முற்பட்டு வாழ்ந்து தம்முட் சந்தித்து மகிழ்ந்த முதலாழ்வார்கள் மூவரையும் பற்றி, நினைந்து வியந்து புகழ்ந்து போற்றியதாக அமைந்துள்ள குறிப்புக்கள், நாம் அறிந்த சுவைத்தற்கு உரியனவாகும்.

—ஆசிரியர்.

"துயக்கன் மயக்கன்"

மாயன்என் நெஞ்சின் உள்ளான்
மற்றும் யவர்க்கும் அஃதே
காயமும் சீவனும் தானே
காலும் எரியும் அவனே
சேயன் அணியன் யவர்க்கும்
சிந்தைக்கும் கோசரம் அல்லன்
தூயன துயக்கன் மயக்கன்
என்னுடைத தோள்இணை யானே.

என நம்வாழ்வார் அருளிச்செய்த திருவாய் மொழிப் பாசுரத்தில் வரும் 'துயக்கன் மயக்கன்' என்னும் தொடரின் பொருளை விளக்குவதற்கு, ஒரு சுவைமிக்க நிகழ்ச்சியினை, நம்பிள்ளை என்னும் வைணவப் பேருரையாசிரியர், தமது ஈடடுரையில் பின் வருமாறு விவரித்துரைக்கின்றார்.

வைணவப் பெருஞ் சான்றோர்களுள் ஒருவர் ஆகிய பட்டர் என்பவரின் திருவோலக்கத்துக்குச் சாத்திரி ஒருவரும், வைணவராகிய அன்பர் ஒருவரும், பலகாலும் வருவதுண்டு. சாத்திரியார் பல நூல்களையும் கற்றுப் பெரும் புலமை பெற்றிருந்தவர். வைணவ அன்பரோ, கல்வி அறிவு சிறிதளவே யுடையவர். ஆயினும் சாத்திரியார் வருவதைக் காணுந்தோறும், 'வந்தாயோ? போகின்றாயோ? என்றே பட்டர் பொதுவாகவினவி உரையாடுவர். ஆனால் வைணவராகிய அன்பர் தம்மைச் சேவிக்க எழுந்தருளும் போதெல்லாம் அவரைக் கண்டால்மிகவும் அருள்செய்து பாராட்டிப் பெரிதும் ஆதரித்துக் கொண்டு, மகிழ்ச்சியுற்று எழுந்தருளி யிருப்பர்.

இவ்வியல்பைப் பலகாலும் கண்டு வந்த ஒருவர், பட்டர் பக்கலில் சேவித்து நின்று, "சுவாமி! தேவரீர் திருவோலக்கத்துக்கு வருகிற சாத்திரி பிரசித்தனுயிருப்பவன். அவன் வந்தால் சாமான்யமாக விளித்து உரையாடுகின்றீர். ஒரு சாது வைணவர் வந்தார் என்றால், அவரை மிகவும் பிரதிபத்தி பண்ணியருளுகின்றீர். இஃது இரண்டையும் எனக்கருளிச் செய்ய வேணும்" என்றார்.

அதற்குப் பட்டர், 'அங்ஙனமாயின் அவர்கள் இரண்டுபேரும் எப்போதும் போலே, நாளையும்வருவார்கள். அப்போது நீர் எப்போதும் போலே பார்த்திரும். இரண்டும் சொல்லுகிறோம்' என்றார்.

அவரும் அப்படியே பார்த்திருக்க, மற்றை நாள் காலை அந்தச் சாத்திரி முதலிலே வந்து சேவிக்க, பட்டர் எப்போதும் போலே உரையாடியருளி, அவரை நோக்கி, 'நீர் யாரைத்தான் பரதத்துவம் என்று நினைத்திருக்கிறது' என்று உசாவினர். அதற்கு அந்தச் சாத்திரியார் 'சிறிது பிரமாணங்கள் பிரம்மாவைப் பரதத்துவம் என்று சொல்லுகின்றன; சிறிது பிரமாணங்கள் திரமாலைப் பரதத்துவம் என்று சொல்லுகின்றன. ஆனபின்பு நாலே நம்மாலே நிச்சயிக்கப் போமோ?' என்று கூறினர்.

அதுகேட்ட பட்டர் 'நல்லது' என்றிருந்து, அவர் போன பிறகு, வைணவ அன்பர் எழுந்தருளிச் சேவிக்க, அவரைப் பெரிதும் தண்ணளி செய்தருளி, "தேவரீர் யாரைத்தான் பரதத்துவம் என்று கருதியிருக்கின்றீர்" என வினவினர். அதற்கு 'தேவரீர் திருமகள் கேள்வனை நாராயணனே பரதத்துவம் என்றருளிச் செய்வீர்களே அஃதொழிய, அடியேன்' வேறு ஒன்று அறியேன்' என்றார். அது கேட்ட பட்டர், 'இன்னமும் உமக்குத் தஞ்சமாக நினைத்திருப்பது எதனை? என்றார். அதற்குத் தேவரீர் எம்பெருமானார் திருவடிகளே உபாய உபேயம் என்று பிரசாதித் தருளுவீர்களே அதையே தஞ்சமாக நினைத்திருப்பன்' என்று அவ்வன்பர் விடை பகர்ந்தார்.

அதைச் செவிமடுத்த பட்டர் திருவுள்ளம் உகந்து, 'அபசாரத்தை பொறுத்தருள்க; திருமாளிகைக்கு எழுந்தருள்க' என்று அருளிச் செய்து விடை கொடுத்து அவரை அனுப்பிவிட்டு, பார்த்திருந்தவரை நோக்கி "கண்டீரே இருவர்க்கும் உண்டான தாரதம்மியம்; அகையாலே, இவரை வணங்கவோ? அவனை வணங்கவோ? அவன் பல நூல்கள் கற்றிருந்தும், பயனின்றி, பரதத்துவம் உணராது, இதுவோ? அதுவோ? என்று துயக்கனும் மயக்கனுமாகவே வீணிற் காலத்தைக் கழித்துக் கொண்டு வறிதே கிடக்கின்றான்; இவரோ, நூலறிவு சிறிதே உடையவராயினும், திருமகள் கேள்வனை நாராயணனே பரதத்துவம் என்னும் தெளிவும் உறுதியும் நம்பிக்கையும் உடையவராகத் திகழ்கின்றார். எம்பெருமானார் திருவடிகளே உபாயமும் உபேயமும் ஆவன என்று, திஞ்சமாக நினைந்து ஆசாரிய பத்தி மிக்கவராக விளங்குகின்றார். இருவர்க்கும் இடையேயுள்ள இவ்வேறுபாட்டு நிலையை உணர்ந்தே, அவரவர்க்குத் தக்கபடி யாம் நடந்து கொள்ளமுற்பட்டோம்" என்று, ஐயுற்று வினவிய அன்பரைத் தெளிவு பெறச் செய்தார் என்பது அரும்பதவுரை.

நிரம்பக் கற்றிருந்தும், கல்வியினாலாய பயன் எய்தாமல், இறையுணர்வில் துயக்கும் மயக்கும் உடையவராகவே வீண்காலம் கழித்து, வாணாளை வீணாளாகக் கழித்து வருபவர் மதிக்கத்தக்கவர் அல்லர். கல்வி பெரிதும் இல்லாதவராயினும், கடவுளுணர்வும் பத்தியும் ஒழுக்கமும் உடையவராக விளங்குபவர் பெரிதும் மதித்துப் போற்றத்தக்கவர் என்பது, இதனால் விளங்கும்.

—ஆசிரியர்.

திருவிடைமருதூர் திருமுறைக் கருத்தரங்கம்

திருவிடைமருதூர் அருள்மிகு மகாலிங்க சுவாமி திருக்கோயிற் கண்காணிப்பாளர் விடுத்துள்ள அறிக்கை:

திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான அருள்மிகு மகாலிங்க சுவாமி திருக்கோயிலின் ஆதரவில் நிறுவப்பெற்ற திருமுறைக் கருத்தரங்கத்தில் முதல் மாநாடு 1971-லும், இரண்டாவது மாநாடு 1972-லும், சீரிய முறையில் நடைபெற்றதை இத்துறையில் ஈடுபாடுடைய பல்லோர் அறிவர். மூன்றாவது திருமுறைக் கருத்தரங்கம் நிகழும் மே மாதத்தில் நடைபெறுவதாக இருந்தது. ஆனால், பொதுவாக யாண்டும் உள்ள மின் தட்டுப்பாடு, இவ்வூர்ப் பகுதியில் மிகையாக உள்ளதாலே, ஆயிரக்கணக்கான அன்பர்கள் விழைவோடு நாடும் இப்பெரு விழாவை இச்சூழ்நிலையில் நடத்துவது கடினமெனக் கருதி, இவ்வாண்டு செப்டம்பர் மாதத்தில் நடத்தலாமென்று, இத்திருக்கோயிலின் பரம்பரை அறங்காவலராகிய துறைசை ஆதீனம் திருப்பெருந்திரு மகா சந்நிதானம் அவர்கள் திருவருள் பாலித்தருளியுள்ளார்கள்.

ஆக, மூன்றாவது திருமுறைக் கருத்தரங்கத்தை வருகிற செப்டம்பர் மாதத்தில் சிறந்த முறையில் நடத்த ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ளோம். தொடர்ந்து மூன்று நாட்கள் நிகழவிருக்கும் அப்பெருவிழா அப்பரடிகளது திருப்பதிகங்களைப் பல கோணங்களில் ஆய்ந்துணரும் கருத்தரங்கமாக அமையும். இத்துறையில் வல்ல அறிஞர் பெருமக்கள் அக் கருத்தரங்கத்தில் பங்கேற்று உரையாற்றுவதையும், திருமுறைகளில் ஈடுபாடுடைய அன்பர்கள் பெருமளவில் வந்திருந்து கேட்டுப் பயன் பெறுவதையும் விரும்புகிறோம். பங்கேற்று உரையாற்ற விரும்பும் அறிஞர்கள், திருக்கோயில் கண்காணிப்பாளரோடு கடிதம் மூலம் தொடர்பு கொள்ளலாம். விழா நடைபெறும் தேதிகளில் ஓரிரு மாதங்களுக்கு முன்னதாக நாளிதழ்களில் அறிவிக்கப்படும்.

முதல் கருத்தரங்கத்தில் சொற்பொழிவுகளை நூல்வடிவில் வெளியிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்சொன்ன மின் தட்டுப்பாடு காரணமாக இவ்வெளியீட்டின் அச்சுவேலையில் தாமதம் நேர்ந்துள்ளது. இவ் வெளியீட்டுக்கு முன்பணம் அனுப்பிய அன்பர்கள் மேலும் சிறிது காலம் பொறுத்திருக்க வேண்டுகிறோம்.

தமிழக ஆடற்கலைத்திறன்

திரு. செ. வைத்தியலிங்கம், M. A., M. Litt.,

(தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)

உலகத்தில் தொன்மையதாக இயல்பாய்த் தோன்றிச் சிறந்ததே ஆடற்கலையாகும். இஃது உள்ளத்திற்குக் களிப்பையும் உடலுக்கு வலிவையும் தந்து மக்களுடைய பண்பாட்டை அறியத் துணை நிற்கின்றது. நாட்டு மக்களின் ஒருமைப் பாட்டுணர்விற்கு ஆடற்கலையும் துணையாகும் என்று அறிஞர்கள் இயம்புகின்றனர். வாழ்க்கையிலிருந்து உருவாகி அமைக்கப்பட்ட கலையே ஆடற்கலை என்பதைவிட, வாழ்க்கையே ஆடற்கலை எனக் கூறி விடலாம். இதனால்தான் மக்களால் சிறப்பாக வழிபடப்படும் தெய்வங்களும் ஆடற்கலையுடன் தொடர்பு கொண்டுள்ளன போலும்:

ஆடலின் அமைப்பு ;

உயர்ச்சியின் உந்துதலினால் உயிர்கள் தம் உறுப்புக்களை இசைவுபட அசைக்கின்றன; அத்தகைய அசைவுகளே ஆடலாக வெளியில் புலப்படுகின்றன. ஈடுபாட்டுடன் பிறர்கண்டு மகிழ்தற்கேற்ற முறையில் தாளத்திற்கும் இசைக்கும் பொருந்திச் சில வரையறைகள் கொண்டு இயங்கும் போதுதான் ஆடலானது கலைத்திறனைப் பெறுகின்றது. நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, சமநிலைச்சுவை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆடல் நிகழலாம். என்றாலும், உவகை அல்லது வெகுளியை அடிப்படையாகக் கொண்டு-பொங்கிய உணர்ச்சியுடன்-ஆடும் ஆடலே காண்போரின் நாட்டத்தை மிகக் கவர்வதாக அமைகின்றது. சிறப்பாகக் களிப்புணர்ச்சியே ஆடற் கலையின் மாட்சிக்குத் துணை நிற்கும். "நெஞ்சுமலி யுவகையர் உண்டு மலிந்தாட" எனப் பதிற்றுப்பத்து இயம்புதல் காணலாம் சிறப்பாக உளங்குளிர்ந்த போதெல்லாம் உவந்து உவந்து ஆடியும் பாடியும் மகிழ்ந்தவர்கள் தமிழர்கள் எனலாம்.

ஆடலுக்கு இசை துணை நிற்கும் என்றாலும், ஆடலுக்கு ஏற்ப அமையும் இசை எவ்வாறிருத்தல் வேண்டுமென்ற வரையறையிருந்தது இசைக் கருவிகளுள் முழவானது ஆடற்கலைக்குப் பெரிதும் தேவைப்பட்டது. மேலும், மந்தகதியிலி யங்கும் முழவு ஆடற்கலைக்கு அமைப்பாயிருந்தது. 'தூங்கு கொளை முழவின்' எனும் பகுதிக்குத் 'தூங்கலோசைத்தாகிய பாட்டிற்கேற்ப முழங்கும் முழவினையும்; தூங்கலோசை, மத்திம சுருதியை ஆதாரமாகவுடைய இசை; மந்தகதியையுடைய ஆடற்கேற்ற முழவு' எனப் பழையவுரை (பதிற்றுப்பத்து) அமைதல் காண்க. 'அந்த முமாதியு மாகிய வண்ண லாரழ லங்கை யமர்ந்திலங்க மந்தமுழவ மியம்ப மலைமகள் காண நின்றாடி" எனவரும் திருவேட்களப் பதிகமும் (ஞான சம்பந்தர்) காண்க.

"வாயினால் பாடப்பட்ட இசைப் பாட்டுக்குச் 'செந்துறைப் பாட்டு' என்றும், ஆடற்கலைக்குரிய பாட்டுக்கு 'வெண்டுறைப் பாட்டு' என்றும் பெயர் உண்டு" என்பர் மயிலை சீனி. வேங்கடசாமி. எனவே, இசைப் பாடலிலும் ஆடற்கென அமைக்கப்பட்ட பாடலிருந்தமையை உணரலாம். இக்காலத்தே, பரத நாட்டியத்தில் வரும் 'பதம்' எனும் இசைப் பாடலை ஈண்டு நினைவு கூரலாம். ஆடற் கலைக்கு ஓவியப் புலமை, இசைப் புலமை முதலியன அடிப்படைத் தேவையாயின. காண்போருள்ளத்தைக் கவரும் வண்ணம் மகிழ் பூத்த இயல்பினராய் ஆடல் நங்கையர் விளங்கு

தல் வேண்டும். இதனைப் பதிற்றுப் பத்து, ''சுடர் நுதல் மடநோக்கின் வாணகை யிலங்கெயிற் றமிழ்து மொழி துவர்வா யசைநடை விறலியர்'' எனக் கூறுதலால் உணரலாம். இசை இயங்கும்போது, வல்லபம் புரியும் கைவழியே கண்ணும், கண் வழியே மனமும் செல்லுமாறு நுண்ணிடைப் பெண்கள் ஆடிய குறிப்பினைக் கம்பர்,

நெய்திரள் நரம்பில் தந்த
மழலையின் இயன்ற பாடல்
தைவரு மகர வீணை
தண்ணுமை தழுவித் தூங்கக்
கைவழி நயனஞ் செல்லக
கணவழி மனமுஞ்செல்ல
ஐயநுண் ணிடையார் ஆடும்
ஆடக அரங்கு கண்டார்''

எனக் கூறிக் களிக்கின்றார்.

குறிப்பிட்ட எழிற் பருவங் தாண்டியதும் ஆடிமுதிர்ந்த ஆடல் நங்கையர் வாரம் பாடும் தோரிய மடநதையராகத் தொடர்ந்து கலைப்பணியாற்றினர். சிற்ப நூற்புலமையும் ஆடற்கலைப் புலமையும் ஒன்றற்கொன்று துணை நின்று கலையுலகிற்கு எழில் கூட்டின. சிதம்பரம் தஞ்சை முதலிய கோயில்களில் நடனச் சிற்பங்கள் இன்றும் தமிழகக் கலைமாட்சியைப் புலப்படுத்துதல் காண்க. கூத்தியர், விறலியர், மதங்கியர், என ஆடல் நங்கையர் அழைக்கப்பட்டனர். ஆடற் கலையானது, கூத்து, நடம், நாட்டியம், நிருத்தம், ஆடல், ஆட்டம், நாடகம், கோலம், முதலிய சொற்களால் அமைக்கப் பட்டது. நாடகம் என்பது கதை தழுவி வரும் கூத்து என்பதாக அடியார்க்கு நல்லார் விளக்கம் தந்திருப்பினும் ஆராய்ந்து பார்க்கின், நாடகம் என்பது ஆடலைக் குறிக்கவும் பலவிடங்களில் (சங்க இலக்கியங்களிலும்) புலவர்கள் கையாண்டுள்ளனர். நடன மாதர்களை நாடக மகளிர் எனவே அழைத்துள்ளனர்.

பொதுவாகத் தமிழர்களின் வாழ்க்கையிலே பிறந்ததுமுதல் பல்வேறு வாழ்வுச் சூழல்களிலும் சிறப்பாகத் திருவிழாக் காலங்களிலும் இசையைப் போன்ற சிறப்பினை ஆடற்கலையும் பெற்றிருந்தன எனலாம். மொழி அடிப்படையின் நோக்கினும் இயலுக்கும் இசைக்கும் அடுத்துவரும் நிலையில் கூத்தானது இடம் பெறுகின்றது. உள்ளத்தினைப் பெரிதும் பொறுத்துள்ள இயலினையும் நாவினைப் பெரிதும் பொறுத்துள்ள கூத்தினையும் நோக்கும்போது, வாழ்வின் பெரும் பயனாகி நிறைவு கொள்ளுகின்ற இடம் கூத்துக்கலையிலேயுள்ளதை உணரலாம்.

ஆடல் நூல்களும் கொள்கைகளும் :

ஆடலின் பல்வேறு கூறுகளையும் உணர்த்துகின்ற சயந்தம், கூத்தநூல், குணநூல், மதிவாணர் நாடகத்தமிழ் நூல் போன்ற நூல்கள், காலத்தின் கோலத்தால் அழிந்து போய்விட்டன. எனவே, கூத்தினைப்பற்றிய பல நுட்பங்களை நாம் முற்றிலும் அறிய வாய்ப்பில்லை. என்றாலும், சிலப்பதிகாரம் திருவிளையாடற்புராணம் போன்ற சில தமிழ் நூல்களாலும், ஓரளவு நம் ஆடற்கலைத் திறனைப் புரிந்து கொள்ள வாய்ப்பினைப் பெற்றுள்ளோம். தமிழிலக்கியங்கள் பலவற்றுள் பரத நூல் பற்றிய குறிப்பினைக் காண்கின்றோம். எனவே பரத நூலே பண்டைத் தமிழர் தம் ஆடற்கலையுணர்த்தும் நூலெனவும் கூற முற்படுகின்றனர். அக்கருத்து ஆராய்ச்சிக்குரியது.

தமிழகத்திற்கு வடபாலுள்ள வடுகர் முதலியோர் தொடர்பாலும், தென்கிழக்கேயுள்ள சிங்களவர் தொடர்பாலும் வடமொழியாளர் தொடர்பாலும் தமிழர் பண்பாட்டிலே தவிர்க்கவியலாத ஒரு கலப்பு ஏற்பட்டது. அதன் காரணமாகத் தமிழர் கலைகளிலும் கலப்பு ஏற்படாமலில்லை. சிற்றூர்ப் புறங்களிலே கலையின் தனித்தன்மையும் நுண்மையும் தமிழர்களால் போற்றப் பட்டன. நகர்ப் புறங்களிலே புதுமை விரும்பும் மக்களால் பிறபண்பாட்டுத் தூண்டுதல்களுக்கு இடந்தராமலிருக்க முடியவில்லை; பண்பாட்டுக் கலப்பிலே ஓர் இன்பம்! பரதமுனிவன் எழுதிய நாட்டிய சாத்திரப்படிப் பிரமனே ஆடற்கலைக்கு மூல காரணனாகக் கருதப்பட்டான்.

ஆடற்கலைக்கு முதலாசிரியனாகக் கருதப்படுபவன் சிவனே; அவிநய முத்திரைகளைக் கண்ட சிவன், தன் சீடர்களுள் ஒருவராகிய தண்டு என்பாருக்கு ஆடற்கலை நுட்

பத்தைக் கூறியதாகவும், தண்டு தாம் கற்ற கலை நுணுக்கத்தைப் பரதனுக்கு விளக்கியதாகவும், அந்தப் பரதனே நாட்டிய சாத்திரத்தை உண்டாக்கியதாகவும் கூறுவர். தன் ஆசிரியர் (தண்டு) நினைவாக ஆடவர் ஆடும் ஆடற்கலையினைத் 'தாண்டவம்' என்றே பரதன் பெயர் இட்டிருக்கலாம். 'தாண்டவம்' எனும் சொல் 'தாண்டு' எனும் திராவிட வேர்ச் சொல்லடியாகப் பிறந்ததென்பர் சிலர். இத்தகைய தாண்டவம் 108 நிலைகளில் ஆடப்பட்டதென்பர். அகத்தியர் பரத சூத்திரத்தில் சிவதாண்டவம் 108 எனக் குறிப்புளதாகக் கூறப்படுதலால், தமிழ்கண்ட அகத்தியரே ஒரு பரத நூலினையும் இயற்றியிருப்பரோ என ஐயம் எழலாம். நாட்டியத்திற்கு உயிரான பாவமும் இராகமும் தாளமும் உணர்த்திடப் 'பரதம்' என்ற சொல்லினைக் கையாளுதலின் பரதனேயன்றிப் பிறரும் பரதம் எழுதியிருக்கலாம். எவ்வாறேனு, நந்திகேசுவரர், அகத்தியர், வசிட்டர், பரதர், சாரங்கதேவர் முதலிய பலராலும் பரதநூல்கள் மிக விளக்கமாக எழுதப்பட்டுப் பயிலப்பட்டுள்ளன. என்றாலும், ஒவ்வொன்றிற்கும் அபிநய நுட்பங்களில் சில வேறுபாடுகள் உள்ளன என்பர். நாட்டிய சாத்திரத்தையொட்டியே நந்திகேசுவரனின் அபிநயதர்ப்பணம் இருப்பினும், பரதநூலில் கூறப்படாத சில விரல் நுட்பங்கள் இதில் உள்ளன என்பர். காலத்துடன் கொள்ளுகின்ற கலைவளர்ச்சியை மக்கள் மறுக்கமுடியவில்லை.

நாட்டியத்தின் ஒரு பிரிவான இலாசியமானது மெல்லியல்புடன் கண்கவர்பாங்கினதாக அமைந்தது; மகளிர் ஆடுதற்கெனவே, ஆடல்வல்லான் மனைவியாம் பார்வதியால் தோற்றுவிக்கப்பட்டது. பார்வதி, நடன மங்கையர்களாகிய ஊர்வசி மேனகை முதலியோர்க்கு இந்த ஆடற்கலையை விளக்கியதாகவும், பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு வாணாசுரன் மகள் உழை இதனில் பெருந்தேர்ச்சி பெற்று விளங்கியதாகவும் கூறுவர். நாட்டியத்தின் இரு கண்களாக விளங்கிய தாண்டவமும் இலாசியமும் மக்களால் தெய்வவுணர்வுடன் போற்றப்பட்டன. ஆடவரும் மகளிரும் நடனத்தில் தேர்ச்சி கொண்டு விளங்கினும், ஆடவரினும் மகளிரே வனப்பாலும் ஆடற்கலை நுட்பத்தாலும் மக்களுள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தனர்.

புராணக் கூற்றுப்படி, அசுரர்களாகிய மதுகைடவர்களை வென்று நின்ற திருமாலே நாட்டியத்திற்கு முதற்காரணமாக எண்ணப்படுகின்றார். திருமாலின் கவினார் ஆடலைக்கண்டு திருமகள் மயங்கி அதனைத் தானும் கற்றுக்கொள்ள விரும்பி வேண்டினாள்; அவள் விருப்பப்படியே திருமாலும் நாட்டிய நுட்பத்தைப் போதித்தருள இருவருமே மகிழ்ந்து ஆடினர். பிறகு திருமால் இக்கலையின் மாட்சியை அனைவரும் புரிந்து மகிழுதற்காகத் தம் மகன் பிரமனுக்குக் கூறினார்; பிரமனும் இக்கலை நுணுக்கத்தைச் சிவனுக்கு எடுத்தியம்பினான். சிவன் தன் கற்பனைமாட்சியால் நாட்டியக் கலையைத் திறம்பட வளர்த்து வாழ்வித்தான்; இது காரணமாகவே, கடவுளரால் நடேசுவரன் எனப் பாராட்டப்பெற்றான் எனக் கூறுவர்.

வைணவத் தொடர்புபடுத்தி மேலும் கூறும்போது கண்ணனே கோபியர்களுடன் ஆடல் புரிந்தானென்றும், இஃது இராசக்கிரீடை, இராசலீலை என்றும் அழைக்கப்படுவதாக வைணவக் கலைஞர்கள் இயம்புவர். கோபியர்களைச் சீவான்மாகவும், கண்ணனைப் பரமான்மாவாகவும் கூறி, இவ்வாறு இணைந்து ஆடுதல் பிறவிப் பேற்றின் பெரும்பயன் என்றும் விளக்கம் கூறுவர். இவ்வாறாக, ஆடற்கலையை வளர்க்க மக்கள் சமய நம்பிக்கையை வாயிலாகக் கொண்டனர். தெய்வ நம்பிக்கையானது, இன்றைய பரதநாட்டிய அரங்கிலும் முறையாகப் போற்றப்படுகின்றது. தெய்வத்திற்குப் புரியும் மலாவணக்கமாக எண்ணப்படும் அலாரிப்பு என்பதைக் கொண்டே நடனம் தொடங்குகிறது. இதனைக் காண்கையில், தெய்வங்களை முன்னிலையாகக்கொண்டு பணிந்து பரவும் தேவபாணியை நினைவு கூர்கிறோம்; சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் தரும் உரை விளக்கப்படி அமைந்த தேவபாணியானது நாளடைவில் மாறிச் சந்த அமைப்புடன் மட்டும் விளங்கும் அலாரிப்பாக இன்று விளங்குகிறதோ என எண்ணத் தோன்றுகின்றது.

அலாரிப்பினை யடுத்து, சதி, சுரம், சப்தம், வர்ணம், பதம், தில்லானு என்ற உருப்படிகளை முறையே ஆடுகின்றனர். இத்தகைய பரதநாட்டியத்தினை ஊன்றிப் பார்க்கையில், இந்திய நாட்டுப் பல ஆடல்களுக்கு அமைந்த ஊற்றுக்களும் இதனில் உள்ளதை உணரலாம். இசையொன்றிப் புடனும் கடும் பயிர்சியுடனும் காலடி நுட்பம் சிறிதும் பிறழாது ஆடப்பெறுவது 'கதக்' எனும் வடநாட்டு ஆடலாகும்; புராணக் கதை நிகழ்ச்சியைக் கருவாகக் கொண்டு, செண்டை முதலிய கடியதாள இசைக்கருவியுடன், பழைமைப்பகட்டுடன் வண்ண வொப்பனை புரிந்து பெரும் பயிற்சியுடன் ஆடப் பெறுவது 'கதகளி' எனும் தென்னாட்டு (கேரள) ஆடலாகும், இவை இரண்டுமே பரதநாட்டிய சாத்திரத்திற்கு மிகவும் கடமைப்பட்டுள்ளன என்று கலையாராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். கேரள நாட்டிற்கே சொந்த உரிமையாகக் கருதப் படும் 'கதகளி' என்பது, கதையும் களியுமாகிய சொற்களின் திரட்சியே' எனத் தமிழர்கள் கூறலாம்.

சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லாருரையில் காணப்படும் ஒற்றைக் கையாகிய பிண்டிக்கையும், இணைக்கை (இரட்டைக் கை) யாகிய பிணையலும், முகக் குறிப்புக்களும் பற்றிய விவரங்கள் பரத நூல்களுடன் ஒத்துவருதலால், தமிழர் ஆடற்கலையானது பரதநாட்டியமே என அறிஞர்கள் கூறுவர். என்ருலும், சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர் கூறும் விவரங்களை மேலும் ஆராய்தல் வேண்டும். அஃதாவது, இளங்கோவடிகளின் கருத்தினை உரையாசிரியர் எவ்வாறு புரிந்துகொண்டு தத்தம் கூற்றுக்களுக்கு வலிவான சான்றுகளை மரபுடன் ஒட்டிக் காண்கிருர்கள் என்றெல்லாம் சிந்தித்தல் வேண்டும்.

இயற்கையிலும் செயற்கையிலும் ஆடற் கூறுகள் :

அரிய கலைப்படைப்புக்களால் தன்னளவில் மனநிறைவு கொள்ளாத கலைஞன், பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைகின்ற நிறைவினை இயற்கையிலும் செயற்கையிலும் காண விழைகின்ருன்; கலைக் கூறுகளை அங்கங்கும் கண்டு காட்டுகிருன். இயற்கைவளம் நிறைந்த திருப்பரங்குன்றத்திலே விண்ணகத்தை வரவழைத்துக் காட்டுகிருர் நக்கீரர்; திருமுருகாற்றுப் படையில்,

> ''சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடிச்
> சூரர மகளிர் ஆடுஞ் சோலை''

என வருதல் காண்க.

பறவைகளுள் மயிலானது கார்மேக வரவுகண்டு தோகையை விரித்துக் களித்தாடும் சிறப்பியல்புடையது. கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி அது போல ஆடிநிற்க இயலாதன்ருே? அழகுற ஆடிடும் மயிலைக் கண்ட புலவர்கள், அதனை ஆடும் கூத்தியாகவே கொண்டு இலக்கியம் படைத்துள்ளனர்.

> ''கழைவள ரடுக்கத் தியலி யாடுமயில்
> நனவுப்புகு விறலியிற் ருேன்றும் நாடன்''

எனவரும் அகநானூற்றுப் பகுதி காண்க. மருதநில நங்கையின் அரசவையில் மயிலாட்டரங்கினைக் கூறும் கம்பர்,

> தண்டலை மயில்களாடத்
> தாமரை விளக்கம் தாங்கக்
> கொண்டல்கள் முழவி னேங்கக்
> குவளைகண் விழித்து நோக்கத்
> தெண்டிரை யெழினி காட்டத்
> தேம்பிழி மகர யாழின்
> வண்டுகள் இனிது பாட
> மருதமவீற் றிருக்கும் மாதோ

என இயம்பிக் களிக்கின்ருர்.

பண்டைத் தமிழர் ஆடல்கள் :

இந்திரன் சிறந்த போகங்களுக்குரியவன்; எனவே அவன் மகன் சயந்தன் அவ்வழித் தோர்ந்தவனுயிருப்பன் எனக் கொண்டு, அவனை முன்னிறுத்தி அவனுக்கு அடையாளமாகத் 'தலைக்கோல்' நாடடிப் போற்றினுர்கள் இத்தகைய வழிபாட்டுடன் தமிழ்நாட்டில் இந்திரவிழா பெருத்த சிறப்புடன் கொண்டாடப் பட்டதைச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. தலைக்கோலிப் பட்டத்தினை ஆடல்பாடல் அழகு நிறை மகளிர் பெற்றமை குறித்துச் சிலப்பதிகாரமும் தமிழ் நாட்டுக் கல்வெட்டுக்களும் செப்பும். ஆடல்மகளிருக்கு ஆடற் பயிற்சியளிக்கும் ஆசான் (நட்டுவன்) பற்றியும் ஆடற்கலையைப் புரந்த வள்ளல்கள் பற்றியும் ஈண்டு விரிக்கிற் பெருகும்.

தமிழர்களின் வளமார் வாழ்வானது கலையார்வத்தைத் தூண்டிக் கற்பனையுடன் வளர்த்தது; தமிழர்களின் சமயவுணர்வும் கலைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துப் பொறுப்புடன் வளர்க்கச் செய்தது. எனவே, ஆடற்கலையும் பல்கிச் சிறக்க வாய்ப்புண்டாயிற்று.

குரவைக்கூத்து :

பொதுமக்கள் வாழ்வில் குரவைக் கூத்திற்குத் தனிச் சிறப்பிருந்தது. இதனை விநோதக்கூத்துள் ஒன்றாகவும் வரிக்கூத்து உறுப்பாகவும் கூறுவர். மகளிர் வட்டமாகக் கைகோத்து நின்றுகொண்டு ஆடும் ஆடலாக எண்ணப்பட்ட குரவைக் கூத்தினைக்,

> ''குரவை என்பது எழுவர் மங்கையர்
> செந்நிலை மண்டலக் கடகக் கைகோத்
> தந்நிலைக் கொட்பநின றாடலாகும்''

எனும் சூத்திரத்தான் அறியலாம். ஆய்ச்சியர் குரவையை நோக்குங்கால், மகளிர் குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் எனும் ஏழிசைப்பெயர் தாங்கியதையறியலாம்; குரல் எனப்பட்டவள் கண்ணனாகவும்; இளி எனப்பட்டவள் பலதேவனாகவும் கருதப்பட்டனர்; இதனால் இந்த ஆடலுக்கு இசையடிப்படை தரப்பட்டதும், மகளிரே ஆடவர்வேடம் புனைந்து ஆடியதும் அறியலாம். மகளிருக்கெனத் தோன்றிய இவ்வாடலை ஆடவரும் ஆடியுள்ளனர் என்பதற்குச் சங்க இலக்கியங்களே சான்றுதரும். "குரவைக் கூத்து குன்றக் குரவையென்றும் ஆய்ச்சியர் குரவை என்றும் இருவகைப்படும்'' என்பர் மயிலை சீனி வேங்கடசாமி. ஆனால், குறிஞ்சி நிலத்தோராடும் குன்றக்குரவையும், முல்லை நிலத்தோர் ஆடும் ஆய்ச்சியர் குரவையு மல்லாமல், பலரும் குரவைக் கூத்தாடி மகிழ்ந்துள்ளனர். நெய்தல் நிலத்தோர் ஆடும் குரவையைப்பற்றித்,

> ''தெண் கடற்றிரை மிசைப்பாயுந்து
> திண்டிமில் வன்பரதவர்
> வெப்புடைய மட்டுண்டு
> தண்குரவைச் சீர் தூங்குந்து''

என்று புறநானூறு கூறும். மருத நிலத்தோர் ஆடிய குரவைக் கூத்தினை,

> ''மகிழ்நன் பரத்தைமை பாடி அவிழிணர்க்
> காஞ்சி நீழற் குரவை யயரும்
> தீம்பெரும் பொய்கைத் துறைசேழ் ஊரன்''

எனவரும் அகநானூற்றுப் பகுதியால் உணரலாம்.

போர்க்களத்துப் பகைவென்ற மன்னன் தேர்த்தட்டில் நின்று, வென்ற வீரர்களுடன் கைகோத்தாடும் முன்தேர்க்குரவையைத் தொல்காப்பியம்,

> ''தேரோர் தோற்றிய வென்றியும் தேரோர்
> வென்ற கோமான் முன்தேர்க் குரவையும்''

எனக் குறிப்பிடுகிறது. கொற்றவை தன் பேய் மகளிரோடு தேர்க்குப் பின் நின்றாடும் பின்தேர்க்குரவையை, 'ஒன்றிய மரபிற் பின்தேர்க் குரவையும்' என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இதற்கு மேற்கோட் செய்யுளாகப் புறநானூற்றுச்(371) செய்யுளை இளம்பூரணர் எடுத்துக்காட்டுதலும் காண்க. குரவைக் கூத்தானது கைகோத்துத் தழுவி ஆடப்படுதலின் 'தழூஉ' என்றும் அழைக்கப்பட்டது.

துணங்கைக் கூத்து :

இக்கூத்தினைப் பெரும்பாலும் பெண்களும் பேய்மகளிருமே ஆடுவர்; சில வேளைகளில் ஆடவரும் ஆடுதலுண்டு.

> ''பழுப்புடை யிருகை முடக்கி யடிக்கத்
> தொடககிய நடையது துணங்கை யாகும்''

என்பதால் இதன் இலக்கணம் உணரலாம். துணங்கையைச் 'சிங்கி' என்றும் கூறுவர். கைகோத்தும் தோளோச்சியும் துணங்கை யாடுகின்ற முறையும் உண்டு; மன்னர்களும் துணங்கைக் கூத்திற்குச் சிறப்பிடம் தந்தனர்; 'தலைக்கை தருதல்' பற்றிச் சங்க நூல்களில் காணலாம். திருவிழாக் காலங்களிலும் போர்வென்ற மகிழ்ச்சியிலும் துணங்கையாடப்பட்டது. 'கொன்றுதோளோச்சிய வென்றாடு துணங்கையைப் பதிற்றுப்பத்தில் காண்க; 'வென்றாடு விறற் களம் பாடித்தோள் பெயரா, நிணந்தின் வாயள் துணங்கை தூங்க' எனவரும் திருமுருகாற்றுப்படையும் காண்க. துணங்கையில் ஈடுபாடுகொண்ட கொற்றவையைத் 'துணங்கையஞ் செல்வி' என்றே பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகிறது.

வள்ளிக் கூத்து:

இக் கூத்தானது சிறப்பாகக் குறிஞ்சி நிலத்திலே நடைபெற்றது. வளமிக்கநாட்

டிலே மக்கள் வள்ளிக் கூத்தாடித் திளைத்த னர்.

''வாடா வள்ளியின் வளம்பல தரூஉம்
நாடு பல கழிந்த பின்றை''

எனவரும் பெரும்பாணாற்றுப் படைக் குறிப்பினை ஓர்க.

அமலை:

போர்க்களத்தில் பட்ட பகை மன்னனைச் சுற்றி நின்று கொண்டு வீரர்கள் நெருங்கி ஆடும் கூத்தே 'அமலை' எனப் பட்டது. இதனை அகநானூறு,

'' கூட்டெதிர் கொண்ட வாய்மொழி மிஞிலி
புள்ளிற் கேம மாகிய பெரும் பெயர்
வெள்ளத் தானை அதிகற் கொன்றுவந்து
ஒள்வாள் அமலை ஆடிய ஞாட்பின''

எனக் கூறிக் காட்டுகிறது.

கழல்நிலைக் கூத்து:

போரிற் புறங்கொடாத இளைய வீரனொருவனைக் கண்டு வியந்த வீரர்கள், அவனுக்கு வீரக்கழலணிவித்துப் புகழ்ந்தாடும் ஆடலாகும்.

ஆரியக் கூத்து:

கழைக்கூத்து, கழாய்க்கூத்து, காலிந்தம் என்றும் இதனைச் சுட்டுவர். ஆரியக் கூத்தானது மூங்கிற் கழிகளை நிறுத்திக் கட்டப்பட்ட கயிறுகளின் மீது ஆரியர் ஆடும் கூத்தாகும். இது 'சேதம்' என்னும் வகையினைச் சேர்ந்ததென்பர்.

வெறியாட்டு:

வெறி என்றால் தெய்வம் என்றும் பொருளுண்டு 'காந்தள்' என்றும் கூறுவர்.

''வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட்டு அயர்ந்த காந்தளும்''

எனும் தொல்காப்பியம் காண்க. பெண்பாற் பக்கமாகிய வெறி, குறிஞ்சி நிலத்துள்ளார் வென்றி வேண்டி ஆடும் வெறி என்ற இரண்டும் வெறியாட்டில் அடங்கும். வென்றி வேண்டி ஆடும் வெறி யென்னும் போது, சிலப்பதிகாரத்துள் வரும் 'வேட்டுவ வரி' யினை நினைவு கூறலாம். பெண்பாற் பக்கமாகிய வெறியினை ஈண்டுச் சிறிது காண்போம். தம்மகளிர் காதல்நோயால் வாடியிருப்பதை அறியாத பெற்றோர்கள், தெய்வமணங்கிய தெனக் கொண்டு கட்டுவிச்சியை வரவழைத்துக் குறிகேட்பர்; பிறகு வேலன் வெறியாட்டிற்கு ஏற்பாடு புரிவர். ஊரிலுள்ள பூசாரி ஊனும் குருதியும் அளைந்த பெரும்படையலிடுவான்; வேலினைக் கையில் தாங்கிக் கழற்சிக் காய்களைக் கோத்துத் தன் உடலில் அணிந்து கொள்வான்; இசைக் கருவிகளொலிக்கப் பூக்கள் சிதற வெறியாடல் புரிவான். இந்த ஆட்டுக்கு வரையறை செய்த விதிகளில்லாமையின், மக்கள் பலரும் பலவிதமாக ஆடியுள்ளனர் இந்த வெறியாட்டினைக் குறித்து ஐங்குறுநூற்றில், 'வெறிப்பத்து' என்றே ஒரு பகுதியுள்ளது.

வேலன் வெறியாடலே யன்றித் தலைமகளும் வெறியாடியுள்ளதைப் பற்றிப் புறப்பொருள் வெண்பாமாலை, குறிப்பிடுகிறது. ஆக, இந்த வெறியாட்டு 'விநோதக்கூத்து' வகையில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

சிலப்பதிகாரத்தாலும் அடியார்க்கு நல்லார் உரையாலும் அறியலாகும் பதினோராடல்களைப் பற்றிய ஆராய்ச்சியை ஈண்டு விரிக்கிற்பெருகும். அவை தமிழர் பண்பாட்டினையும் கலைமாட்சியையும் எவ்வாறு அறியத் துணைபுரியும் என்பதைத் தனியாராய்ச்சியில் காணுதல் நல்லது. இன்றைய தமிழகத்தில் காணலாகும் கரக ஆட்டம், காவடியாட்டம், கும்மி, கோலாட்டம் பொய்க்கால்குதிரையாட்டம், பொம்மலாட்டம் போன்றவையெல்லாம் தமிழர் தம் பண்டைய ஆடற்கலையை நினைவுபடுத்துவனவாய்ப் பண்பாட்டாராய்ச்சிக்குத் துணை நிற்கின்றன.

தெய்வத் தொடர்பு கொண்டு மதிக்கப்பட்ட ஆடற்கலை, இடைக்காலத்தில்-குறிப்பாகச் சமணர்காலத்தில்-அறவோரால் இழிந்ததாகக் கருதப்பட்டது. அதற்கேற்ப ஆடலில் ஈடுபட்டோரும் இழிகாமத்திற்குத் துணைநின்றனர். தாசியாட்டம், சின்னமேளம் என்றெல்லாம் அழைக்கப்பட்ட ஆடற்கலையின் நிலைமாறி, இக்காலத்தில் வாழ்க்கையில் உயர்படிகளிலுள்ள உயர் குடும்பத்தினரும் ஆடல் புரிந்து ஆதரவு தர முன்வந்து விட்டனர். அரசியலாரும் ஆடற்கலைக்கு ஆக்கமும் ஊக்கமும் தர முன்வந்துள்ளனர். எனவே, பண்டைய கலைமாட்சியுடன் ஆடற்கலை பொலிவுறத் தொடங்கிவிட்டதென நாமும் களிப்புக் கூத்தாடலாம்.★

தஞ்சை மாவட்டக் கோயில்களின் வரலாறு

(ஆசிரியர்)

முன்னுரை :

இந்திய நாட்டில், அயலவர் படையெடுப்புக்களாலும், உள்நாட்டுப் பூசல்களாலும் சீரழிவுற்ற பிற பகுதிகளைப் போலல்லாமல், தனது முன்னைய நிலையிலேயே பழுதின்றிப் பாதுகாப்பாக விளங்கிவரும் பழமையான சிறந்த பகுதி, தென்னிந்தியாவாகும். காவிரியாறு பாய்ந்து வளப்படுத்தும் தஞ்சை மாவட்டம், சோழப்பேரரசின் ஆட்சிப் பீடமாய், தென்னகத்தின் நெற்களஞ்சியம் என்ற புகழ்பெற்றுத் தொன்றுதொட்டுச் சிறந்து விளங்கி வருகின்றது. இத்தகைய சிறப்பும் செழிப்பும் மிக்க தஞ்சை மாவட்டத்தில், பழமையும் பெருமையும் மிக்க இந்துக் கோயில்கள் மிகுதியாக உள்ளன. புகழ் பெற்றனவும், முதன்மை வாய்ந்தனவுமாகத் தமிழ் நாட்டின் 14 மாவட்டங்களிலும், சுமார் 10,05[illegible] கோயில்கள் உள்ளன. இவைகளில் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 1,809 கோயில்கள் இருக்கின்றன. இவற்றுள் 24 கோயிலகள் பல்லவர் காலத்தைச் சேர்ந்தவை; 400 கோயில்கள் சோழ மன்னர் காலத்திலும், நாயக்கமன்னர் காலத்திலும் தோன்றியவை. இவைகளுள் 2000 ஆண்டுகளுக்குக் குறையாத பழமைமிக்க கோயில்கள் 36 ஆகும். பின்வரும் அட்டவணையில், சிவபிரான் திருமால் முருகர் விநாயகர் முதலியவர்களுக்குரிய கோயில்களின் எண்ணிக்கை கணக்கிட்டுத் தரப்பெறுகின்றது.

கோயில்கள்

எழுந்தருளியுள்ள கடவுளர்	அறநிலையத் துறையின் ஆட்சியில்	தருமை ஆதீனத்தின் ஆட்சியில்	திருவாவடுதுறை ஆதீனத்தின் ஆட்சியில்	அறநிலையத் துறைக்குப் புறம்பே	மொத்தம்
1. சிவபிரான்	827	21	15	51	914
2. திருமால்	401	...	1	24	426
3. முருகர்	52	...	...	5	57
4. கிராம தேவதைகள்	154	...	...	19	173
5. விநாயகர்	112	...	...	15	127
6. பிறதெய்வங்கள்	104	...	...	8	112
மொத்தம்	1,250	21	16	122	1,809

இக் கோயில்களுள் பெரும்பாலானவை ஏராளமாக மானியங்கள் பெற்றவை. இவற்றின் முதன்மையான வருவாய் நிலவுடைமையிலிருந்து கிடைக்கின்றது. பின் வரும் அட்டவணையில், இந்தப் பல்வேறு கோயில்களுக்கு அசையாப் பொருளில்இருந்து கிடைக்கும் வருவாய் பற்றிய விவரங்கள் தரப்பெறுகின்றன

கோயில்கள்

ஆண்டு வருவாய்	அறநிலையத் துறையின்கீழ்	தருமபுர ஆதீனத்தின் கீழ்	திருவாவடு துறை ஆதீ னத்தின் கீழ்	அறநிலையத் திற்குப் புறம்பே	மொத்தம்
500-ம் அதற்குக் கீழும்	447	..	..	84	531
501 முதல் 1000 வரை	394	..	..	23	417
1001 ,, 5000 ,,	546	5	5	12	568
50001 ,, 10000 ,,	113	1	3	2	119
பததாயிரம் ,, ஐமபதாயிரம்	127	8	5	..	140
ஐமபதாயிரம்,, இலட்சம் ,,	16	.	1	1	18
இலட்சத்திற்கு மேல்	7	7	2	..	16
மொத்தம்	1,250	21	14	122	1,809

மிகப்பல கோயில்கள் குறிப்பிடத்தக்க அளவு விலைமதிப்புள்ள சிறந்த அணிகலத் தொகுதிகளைப் பெற்றுள்ளன. பின்வரும் அட்டவணையில் கோயில்களில் உள்ள அணி கலன்களின் விலைமதிப்புப் பற்றிய விவரங்கள் தரப்பெறுகின்றன.

கோயில்கள்

ஆண்டு வருவாய்	அறநிலையத் துறையின்கீழ்	தருமபுர ஆதீனத்தின் கீழ்	திருவாவடு துறை ஆதீ னத்தின் கீழ	அறநிலையத் திற்குப் புறம்பே	மொத்தம்
500-ம். அதற்குக் கீழும்	366	1	6	20	393
501 முதல் 1000 வரை	107	..		..	107
1001 .. 5000 ',	106	1	2	6	115
5001 ,, 10000 ,,	29	1	.	1	31
பத்தாயிரம் ,, ஐம்பதாயிரம்	46	6	4	1	57
ஐம்பதாயிரம் ,, இலட்சம் ,,	9	3	...	...	12
இலட்சம் ,, ஐந்துஇலட்சம்	17	4	3	...	24
ஐந்து இலட்சம்,, பத்து இலட்சம்	...	...	...	...	...
பத்து லட்சத்திற்கு மேல்	...	1	...	...	1
மொத்தம்	630	17	15	23	7

இம்மாவட்டத்திலுள்ள 24 கோயில்களில் ஒவ்வொன்றன் அணிகல மதிப்பும், இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டது. சீர்காழி வட்டம், வைத்தீசுவரன் கோயிலில் உள்ள அருள் மிகு வைத்தியநாதசுவாமி கோயிலின் அணி கலத் தொகுதியின் மதிப்பு 10,56,000 என்று மதிப்பிடப் பெற்றிருக்கின்றது.

கோயில்களின் காலம் :

பொதுவாகக் கோயில்களிலுள்ள கல் வெட்டுக்கள், கோயில்களில் கட்டப்பெற்ற காலத்தைக் குறிப்பிடுவதில்லை. கோயில் களின் காலத்தை, அவைகள் கட்டப்பெற் றுள்ள அமைப்பைக் கொண்டும், அங்குக் கிடைக்கின்ற கல்வெட்டுக்களில் சுட்டப் பெறுகின்ற அரசர்களது நிகழ்ச்சிகளைக் கொண்டும்தான் நாம் ஒருவாறு அறிய வேண்டி யிருக்கின்றது. தமிழில் மிகமிகத் தொன்மை வாய்ந்த தொல்காப்பியம் என் னும் நூலில் கோயில்கள் இருந்தமை பற்றியோ, அவைகளின் அமைப்புக்கள் பற்றியோ எத்தகைய குறிப்பும் காணப்படுவ தில்லை. "இல்லொடு கிளக்கின் இயற்கை யாகும்" என்னும் நூற்பாவில், 'கோயில்'

என்னும் சொல்லுக்கு இலக்கணம் குறிக்கப் பட்டிருந்தாலும், அஃது அரசனுடைய அரண்மனையை மட்டுமே குறிப்பதாகக் கொள்ளக் கிடக்கின்றது. அதனால் தொல் காப்பிய நூற்காலத்தில், கோயில்கள் இருந் தன என்றோ, இருந்திருக்க வில்லை என்றோ திட்டவட்டமாகக் கூறுதற்குரிய தெளிவான சான்றுகள் கிடைத்தில. எனினும் பழமை மிக்க தமிழ்ப் பண்பாட்டில், சமயவியற் கூறும் இடம் பெற்றிருந்தது என்பதில் ஐய மில்லை. தமிழிலக்கண நூல்களில் முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலை எனத்திணை கள் வகுக்கப்பெற்றுள்ளன. காடும் காடு சார்ந்த இடமும் ஆகிய முல்லை நிலத்திற்குத் தெய்வம் திருமால். மலையும் மலையைச்சார்ந்த இடமுமாகிய குறிஞ்சி நிலத்திற்குத் தெய் வம் முருகன். வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய மருத நிலத்திற்குத் தெய்வம் இந்திரன். கடலும் கடல் சார்ந்த இடமு மாகிய நெய்தல் நிலத்திற்குத் தெய்வம் வருணன். மணல் வெளியும் அதனைச் சார்ந்த மணற்பரப்பும் ஆகிய வறண்ட பாலை நிலத்திற்குத் தெய்வம் கொற்றவை. (துர்க் கை, காளி). இங்ஙனம் தெய்வமும் வழி பாடும் பற்றிய குறிப்புக்கள் சில, தொல்காப் பியத்திற் காணப்பட்டாலும், பண்டைக் கோயிலின் அமைப்புக்கள் பற்றிய குறிப்பு ஏதும் தொல்காப்பியத்தின்கண் காணப்பட வில்லை. காவிரியாறு பாயும் மருத நிலப் பரப்பிற்குத் தெய்வம் இந்திரன் என்பது, சிலப்பதிகாரத்தில் காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திரவிழாக் கொண்டாடப்பெற்ற செய்தி யினல் அறியப் படுகின்றது. தொல்கப் பியத்திற்குப் பின்னர்த் தோன்றிய சங்க இலக்கியங்களில் ''ஆலமர் கடவுள்'' ''மன்ற மராஅத்த பேமுதிர் கடவுள்'' என் பன போன்ற தொடர்கள் வருகின்றன. அவற்ருல், மரங்களின் நிழற்கீழ்க் கோயில் கள் அமைந்திருந்தமை புலனுகின்றது. இப்பொழுதும் கூட, ஆலமரம் அரசமரம் போன்ற பெரிய மரங்களின் கீழ்ச் சிற்சில சிற்றூர்களில் கோயில்கள் அமைந்திருத்தல் காணலாம். இது நம் பண்டைய முன்னோர் களின் பழக்கத்தைத் தழுவிய மரபேயாகும்.

காவிரிப்பூம் பட்டினத்தில் தற்பொழு துள்ள பல்லவனீச்சுரம் என்னும் கோயில். சோழநாட்டில் உள்ள கோயில்களுள், ஒரு வகையில் பழைமை வாய்ந்தது எனலாம். அக் கோயில், செங்கல்லாலும் சுதையாலும் அமைந்துள்ளது. பிற்காலச் சோழர்கள் கட்டிய கோயில்களைப்போல, மிகப் பெரிய தாக இல்லா விட்டாலும், போதிய அளவு திட்டமாக அமைந்திருக்கின்றது. பல்லவர் கள் காலத்தில்தான் கோயில்கள் பெரிய அளவில் விரிவாகக் கட்டத் தொடங்கப் பெற்றன என்று தோன்றுகிறது. சோழப் பேரரசர்களின் ஆட்சியில், அது மேலும் திருத்தமும் விரிவும் அடைந்தது. விசய நகர ஆட்சிக் காலத்தில் கோயில்கள் மிக உயரிய முறையில், அழகிய வேலைப்பாடுகள் செய்யப்பெற்றன.

சிலப்பதிகாரத்தில் வானளாவிய கோயிற் கோபுரங்களைப் பற்றிய குறிப்புக் கள் சில காணப்படுகின்றன. அவற்ருல் ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்னரே உயர்ந்த கோபுரங்களையுடைய சிறந்த பெரிய கோயில்கள் பல, தமிழகத்தில் இருந் தன என்று தெரிகிறது. ஆனுல் அவைகள் இத்துணை நெடுங் காலத்தில பற்பல மாறு தல்களை அடைந்திருக்கின்றன. தொடர்ந்து அவ்வப்போது செய்யப்பெற்ற திருப்பணிகள் கோயில்களின் மூலமுதலமைப்பைப் பெரி தும் மாற்றிவிட்டன. அதனுல் முற்காலத் தில் இருந்த அமைப்புக்களையும், பிற்காலத் தில் நேர்ந்த மாறுதல்களையும், இவை என்று பிரித்து அறிவது கடினமாக உள்ளது. கோயிலின் வெளிப்புறப் பகுதிகள் மட்டும் தற்காலத்தனவாகவும், உள்ளகப் பகுதிகள் அனைத்தும் பழமையானவையாகவும், மரபு நெறியைத் தழுவி அமைந்து இருக்கக்கூடும் என நாம் ஒருவாறு உன்னிதது உணரலாம்.

வரலாற்று நூல்களின்படி, பல்லவ மன்னர்கள்தான், முதன்முதற் பெரிய அள வில் கோயில்களைக் கட்டியவர்கள் ஆவர். தஞ்சை மாவட்டத்தில், பல்லவர்கள் கட்டிய கோயில்களின் மூலமுதற் படிவங்களின் மாதிரிகைகள் பல காணக்கிடைக்கா விட்டா லும், காவிரிப்பூம் பட்டினத்தில் உள்ள பல்லவனீச்சுரம் எனும் கோயிலில், தற்போது எஞ்சியுள்ள பல்லவர் காலத்துக் கட்டிடக் கலையின சிற்சில கூறுகளை, ஆராய்ச்சி நோக்குடைய அறிஞர்கள் உன்னித்து உணரமுடியும். தஞ்சை மாவட்டத்தில் சோழப் பேரரசு ஏற்பட்ட பிறகு, கோயில்

அமைப்புக்களில் மிகப்பெரிய சிறந்த புதிய பாணிகள் தோன்றுவனவாயின. சோழர் காலத்துப் பாணியினைத் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் தெளிவாகக் காணலாம். அது கோயில்களைப் பற்றிய முழு நிறைவான கருத்தையும், முதிர்ந்து சிறந்த பாணியினையும் கொண்டு விளங்குகின்றது. சோழப் பேரரசை அடுத்துப் பாண்டியர் ஆட்சி ஏற்பட்டபோது, அந்தப் பாணியே பெரும் பாலும் தொடர்ந்து கையாளப் பெற்றது. ஆனால் சோழர் காலத்தை விடப் பிற்காலத்தில் கோபுரங்கள் மிகவும் உயர்ந்தனவாகக் கட்டப்பெற்றன. அடுத்துத் தோன்றிய விசயநகர ஆட்சியில், மிகப் பெரிய அளவில், கோயில்கள் எடுப்பிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தக் காலத்தில்தான் எல்லாக் கோயில்களும், விமானங்களும், கோபுரங்களும், மண்டபங்களும், மிகஆடம்பரமான முறையில், அழகிய இழைப்பு வேலைகள் செய்யப்பெற்றன இவைகள்மிகச் சிறப்பாகவும், கவர்ச்சிமிக்க அழகிய முறையிலும் அமைந்த கலையியல் நுட்ப வேலைப்பாடுகள் என்பதில் ஐயமில்லை. சோழர் ஆட்சிக் காலத்திற்கும், விசயநகர மன்னர் ஆட்சிக்காலத்திற்கும் இடைப்பட்ட காலத்துப் பாணியில், தாராசுரம் கோயில் ஓர் எல்லைக்கல் போன்றதாகும்.

பாண்டியர் காலத்துக் கோபுரங்களுடன் ஒப்பிடும்போது, கட்டிடக்கலை அமைப்பில் மட்டுமின்றி ஏனைய பிறபல கூறுகளிலும் கூட, திட்டவட்டமான மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. தாராசுரம்கோயில் பல்லவர்களும் சோழர்களும் எடுப்பித்த சிறந்த அழகிய கோயில்களின் அமைப்புக்களினின்றும், மிகப்பெரிய அளவில் சிறந்த நுண்ணிய அழகிய புதிய பாணிகள் ஏற்பட்டமையினை, இனிது உணர்த்துகின்றது. சிறந்த உயிர்த்துடிப்பு, புதிய கலைப்பாணி, நுண்ணிய கருத்துக்களைத் திண்ணிதின் வெளியிடும் கலையார்வ எழுச்சி, காண்போர் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து உள்ளங்களை யெல்லாம் கொள்ளை கொள்ளும் கவின் கலையுணர்ச்சித் திறம், என்பனவற்றைத் தாராசுரம் கோயிலின் அமைப்புக்கள் காட்டுகின்றன. எனவே வளம்மிக்க சோழர் காலத்து முதிர்ச்சிக்கும், விசயநகர காலத்து நுண்ணிய அழகிய கலைச்சிறப்புக்கும் இடையே, ஒரு நடுவான நிலையைத் தாராசுரம் கோயில், கட்டிடக்கலையின் வளர்ச்சியில் தெளிவுற உணர்த்துகின்றது. விசயநகர காலத்துக் கோயிலின் அமைப்புக்கள், திட்பமும் நுட்பமும் சிறப்பும் வாய்ந்தவை. அக்காலத்துத் தூண்களும் விட்டங்களும் மிகப்பலவாகவும் முதன்மையாகவும் வளர்ந்து பெருகின. அவைகளிற் செதுக்கப்பட்ட அழகிய சிற்ப உருவங்கள, ஒன்றுடன் ஒன்று முழுமையாகப் பொருந்தி, கல்லின் அமைந்த, நாடகக் காப்பியமோ என, உயிர்த்துடிப்பும் உருவழகும் அமைந்து பெருநிறை வெய்திப் பிறங்குகின்றன. விசயநகர ஆட்சிக் காலத்துக் கட்டிடக்கலையில் முதன்மை மிக்க சிறந்த பகுதியாக, நூற்றுக்கால் மண்டபங்கள் இடம்பெற்றன. இவற்றின் பெரிய பெரிய தூண்கள், வரிசை வரிசையாக நிறுத்தி அமைக்கப்பெற்ற மண்டபங்கள், கட்டிடக்கலையின் நடுமையக் கூறாகத் திகழ்ந்தன. இத்தூண்களில் குதிரை யானை சிங்கம் யாளி முதலிய பற்பல அழகிய சிற்ப உருவங்கள் செதுக்கப் பெற்றன. கடவுளரின் திருவுருவங்களும், இதிகாச புராண கதை நிகழ்ச்சிகளும், மற்றும் வியத்தகு சிற்பங்கள் பலவும், இத்தூண்களில் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன. இவைகள் அனைத்தும் தனித்தனியே ஒவ்வொருவரும் நேரிற் கண்டுணர்ந்து அறிதற்குரியனவேயன்றி, இவற்றின் கலையழகை வெறும் சொற்களில எவரும் எழுதிக் காட்ட இயலாது.

விசயநகரப் பேரரசின் ஆட்சி, கி. பி. 1565-ல் திடும் என முடிவடைந்தது. அடுத்துத் தென்னகத்தில் முஸ்லிம் ஆட்சி ஏற்பட்டது. இந்தக் காலத்தில் மதுரை நாயக்க மன்னர்களே, தஞ்சை மாவட்டத்தையும் கூட ஆண்டு வந்தனர். நாயக்க மன்னர்கள், தஞ்சை மாவட்டத்தில் பழமையாக இருந்த கோயில்களைப் போற்றிப் பாதுகாத்ததுடன், கோயில்களைப் புதுப்பித்தற்கும் பெரிதும் ஆதரவளித்தனர். நாயக்கர் காலத்துக் கோயிற் கட்டிடக் கலையின் மாதிரிகையினைத் திருவாரூர்க் கோயிலிற் காணலாம். நாயக்கர்களின் காலத்தில் அழகு வேலைப்பாடுகள் உச்சநிலையை அடைந்தன. கோயில் விமானங்களும் கோபுரங்களும் தூண்களும் எல்லாம், சிறப்பாகவும் மிகுதி

யாகவும் அழகுபடுத்தப்பட்டன. புதிய ஏராளமான சிற்பச் செறிவுமிக்க வேலைப் பாடுகளைச் செய்தபோதிலும், பழைய அமைப்புக்குச் சிறிதும் முரண்படாமல், அவற்றுடன் முழுமையாகப் பொருந்தும் வண்ணம், தமது அழகிய அரிய கலையியற் கற்பனைத்திறனை வெளிப்படுத்தியுள்ள, சிற்பிகளின் அரும்பெரும் திறமை அனைவரும் வியந்து போற்றற்பாலதாகும். தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் உள்ளேயுள்ள, முருகப்பெருமான் கோயிலின் கட்டிடக் கலையியற்பாணி, மற்றொரு சிறந்த எடுத்துக் காட்டாகும். அது கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் கட்டப்பெற்றது. அக்கோயில் கட்டப்பட்டுள்ள பாணி, அழகுபடுத்தப் பெற்றுள்ள முறை யாவும், முதன்மைக் கோயிலாகிய பெருவுடையார் கோயிலின் முதிர்ந்த கம்பீரமான கட்டிட அமைப்பு, செய்வினைத்திறன் ஆகியவற்றிலிருந்து, தெளிவுற வேறுபட்டுத் திகழ்கின்றது.

தென்னிந்தியக் கோயிற் கட்டிடக் கலையின் பாணி பற்றியும், அஃது எவ்வாறு காலப்போக்கில் விரிவடைந்து வளர்ச்சியுற்றது என்பது பற்றியும், ஒரு சிறிதேனும் இங்குச் சுருக்கமாகக் குறிப்பிடுதல், கோயில்களின் கலையியல் வேலைப்பாடுகளை உணர்ந்து சுவைப்பதற்குத் தொடக்கநிலையிலுள்ள பொது மக்களுக்குப் பெரிதும் பயன்படும்.

தென்னிந்தியக் கட்டிடக்கலை :

இவ் ஆய்வுத் துறையில் வல்லவரும் பிரஞ்சு நாட்டுப் பேரறிஞரும் ஆகிய துப்ருவெல் என்பவரின் கருத்துப்படி, தென்னிந்தியக் கட்டிடக் கலையின் முதன்மையான சிறப்பியற் பண்புகள் பின்வருவனவாகும்.

(1) இது மிகவும் பழமையானது.

(2) உலகின் பிறபகுதிகளைச் சேர்ந்த கட்டிடக்கலை வளர்ச்சியின் தொடர்பினால் எத்தகைய மாற்றமும் எய்தாமல், இது தனித்து நின்றே நிலைபெற்று விளங்கி வருகின்றது.

(3) வெளிநாட்டுத் தொடர்புகள் ஏதுமின்றி, இது தனியாகவே காலப்போக்கில் வளர்ச்சியுற்று விரிவடைந்துள்ளது.

இத்தகைய நிலைமை, பண்டைக்காலத்தில் தமிழ்நாட்டிற்குப் பிற நாடுகளுடன் தொடர்பின்மை காரணமாக ஏற்பட்டதொன்றன்று. சோழப்பேரரசின் காலத்தில், தென்னிந்தியச் சிற்பிகள், உலகின் பிறபகுதிகளுக்குச் சென்று வரக்கூடிய வாய்ப்புகளைப் பெற்றிருந்தபோதிலும், தமக்குரிய கட்டிடக் கலையின் நெறியையே பெரிதும் போற்றி நின்றனர். ஒவ்வொரு தலைமைச் சிற்பியும் தானே ஒரு நிறுவனமாக விளங்கினர். அவர்கள் தம்முடைய முன்னோர்கள், தமக்குக் கற்பித்த கலைப்பண்புகளையே சிறிதும் மாற்றாமலும் சிதையாமலும் போற்றிப் பாதுகாத்தனர்.

இவ்வகையில் பதின்மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக, அயல் நாட்டுக் கலைகளினின்று சிறிதும் கடன்வாங்காமல், தானே தனித்து நின்று, மிகவும் வியக்கத்தக்க வகையில், திராவிடக்கலை வளர்ந்ததை நாம் காண்கின்றோம். திராவிடக் கலை தனித்து நின்று வளர்ந்த போதிலும், இயற்கை வளர்ச்சி நெறி பிறழாமல், தொடர்ந்து பலவகைகளில் விரிவடைந்து வந்தது. ஒரு நூற்றாண்டிற்கும் மற்றொரு நூற்றாண்டிற்கும் இடையில், அது விரிவடைந்து மாறுதலுற்று வளர்ந்துள்ள வகைகளையெல்லாம், ஊன்றி நோக்குவோர் யாவரும் இனிதுணரலாம். பண்டைக் காலத்து திராவிட நினைவுச் சின்னங்களில், தற்காலப்பாணிக்குரிய முந்தைய அழகு வேலைப்பாடுகளின் கலைப்பண்புகளையெல்லாம், நாம் நுனித்து நோக்கி நன்கினிது உணரமுடியும். ஆனால் மொத்தத்தில் திராவிடக் கலையானது, பிற நாட்டுப் பாணிகளில் தொடர்பேதும் இல்லாமலே, தானாகவே பற்பல மாறுதல்களை அடைந்து விரிவுற்று வளர்ந்துள்ளது. அறிஞர் துப்ருவெல் அவர்கள் தென்னிந்தியக் கட்டிடக் கலையில் பொறியியல் நுட்பங்கள் அதிகமாக இல்லை என்று கருதுகின்றார். தமிழகத்தின் மிகப்பெரிய கோயில்களும், மிக உயர்ந்த கோபுரங்களும், வெறும் கற்களின் குவியல்களே என்று துப்ருவெல் நினைக்கின்றார். மிக விரிவான மண்டபங்களும், மிகப்பெரிய விமானங்களும், மிக உயர்ந்த கோபுரங்களும் கட்டுவதற்கு, இயற்கைத் தாய் தென்னிந்தியச் சிற்பிகளுக்குப் பெரும் பாறைக் கற்களை வழங்கியிருக்கின்றாள். ஆதலின் வெறும் கற்களைக் குவித்து அடுக்கி இக் கோயில்களைத் தென்னிந்தியர் கட்டியுள்ள

னர் என அவர் எண்ணுகின்றார். எனினும், தமிழகக் கோயில்களிற் பொறியியல் நுட்பத் திறமைகள் இல்லாமற் போகவில்லை. தஞ்சைப் பெருவுடையார் கோயிலில், 80 டன் எடையுள்ள ஒரு பெரும் பாறைக் கல்லினை, 200 அடி உயரமுள்ள விமானத்தின் மீது பண்டைத் தமிழர்கள் இந்நாளைய பொறியியற் கருவிகளின் உதவி ஏதும் இல்லாமலே ஏற்றி இருப்பது, பெரிதும் விந்தைக்குரியதாகும். மேலும் தஞ்சைப் பெருவுடையார் கோயில் விமானத்தின் உட்குழிந்த பொள்ளல் அமைப்பினை நோக்குவோமாயின், தமிழகக் கோயிற் கட்டிடக் கலையிற் பொறியியல் நுட்பம் ஏதும் பெரிதும் இல்லை என்னும் துப்ருவெலின் கருத்து ஏற்றுக்கொள்ளற்பாலதன்று எனத் துணிந்து கூறலாம். ஐரோப்பியர்கள் மிகப்பெரிய கட்டிடங்கள் கட்டுவதற்குக் கட்டுப் பொருள்களில் சிறுசிறு துணுக்குகளைப் பயன்படுத்த வேண்டியிருந்தது. அதனால், அவர்கள் மிகப்பெரிய கம்பீரமான கட்டிடங்களைக் கட்டுவதற்குச் சிறுசிறு செங்கல் துண்டுகளின் உதவியை நாடவும், அவற்றை இணைத்து அமைக்கவும், விரிவான பல நுணுக்கமுறைகளைப் பின்பற்ற வேண்டிருந்தது. தென்னிந்தியச் சிற்பிகள் மிகப்பெரிய கருங்கற் பாறைகளையும் தூண்களையும் இயற்கையிலேயே பெற்றிருந்தனர் என்னும் காரணம் பற்றி, அவர்கள் எளிதாகவும் பெருமுயற்சி இல்லாமலும் பெரிய கோயில்களைக் கட்டிவிட்டனர் என்றுரைத்தல் பொருந்தாது. ஐரோப்பியர்களைப் போல, வெவ்வேறான அமைப்புகளையும் வடிவங்களையும் புதியனவாக உருவாக்க வேண்டிய கடப்பாடு தென்னிந்தியச் சிற்பிகளுக்கு உண்டாகவில்லை என்று வேண்டுமானால் கூறலாம். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, இந்நாளைய பொறியியல் வசதிகள் ஏதும் வாய்க்கப்பெறாத நிலையில், பெரிய பெரிய தூண்களை எடுத்து நிறுத்தியிருப்பதும், மிகப்பெரிய கோபுரங்களை எடுப்பித்ததும், 200 அடிக்குமேல் 80 டன் எடையுள்ள பெரும் பாறைக்கல்லை ஏற்றுவித்ததும், ஆகிய அருஞ்செயல்களைக் கருதுங்கால், தென்னிந்தியக் கட்டிடக்கலையில் பொறியியல் திறமை எத்தகைய சிறப்பிடம் பெற்றிருந்தது என்பதனை, யாவரும் எளிதின் எண்ணியுணரலாம்.

தென்னிந்தியக் கட்டிடக் கலையினைப் பின்வரும் ஐந்து காலங்களாகப் பிரிக்கலாம்;

(1) பல்லவர் காலத்துக் கட்டிடக்கலை (கி. பி. 600-850)

(2) பழைய சோழர் காலத்துக் கட்டிடக்கலை (கி. பி. 850-1100)

(3) பிற்காலச் சோழர் காலத்துக் கட்டிடக்கலை (கி. பி. 1100-1350)

(4) விசயநகர ஆட்சிக்காலம் (கி. பி. 1350-1600)

(5) தற்காலம் (கி. பி. 1600 முதல்)

மிகப்பழைய காலத்துக் கோயில்களுக்கும், தற்காலத்துப் புதிய கோயில்களுக்கும் இடையே கலைப்பண்புகளில், காலப்போக்கில் நேர்ந்திருக்கக் கூடிய சில நுணுக்கங்களைத் தவிர, வேறுபாடு ஏதும் பெரிதும் இல்லை. காலப்போக்கில், கட்டிடத்தின் சில பகுதிகள் பெரிதும் மாறுதலுற்றன. அதே சமயத்தில் ஒரு சிலவற்றின் அமைப்பிலோ உருவத்திலோ மாறுதல் ஏதும் நிகழவில்லை. ஒரு நினைவுச் சின்னத்தின் காலத்தைத் தோராயமாக ஆராய்ந்துணர்தற்கு, மிகவும் சிறப்பியல்பான முறையில் அதற்கெனவே உருவான கலைப் பண்பினைத் தனிச்சிறப்பாக ஆராய்வது இன்றியமையாததாகும். இத்தகைய உருமாற்றங்களை ஆராய்வதன் மூலமே, நாம் ஒரு குறிப்பிட்ட நினைவுச் சின்னத்தின் தரத்தினை மதிப்பிடவும், அல்லது அதன் காலத்தை வரையறுக்கவும் இயலும். கோயில்களைக் கட்டுவதற்குரிய விதிமுறைகளைக் கூறுகின்ற சிற்ப நூல்கள் அனைத்திலும், கலையியற் பண்பிற்குரியதொரு பட்டிகை வகுக்கப்பட்டிருந்த போதிலும், பல்வேறு வகையான பாணிகளில் கட்டப்பட்டிருக்கின்ற கோயில்களை மட்டுமேயன்றி, இவ்வமைப்பு முறைகளுக்கும், பாணிகளுக்கும் சிறிதும் ஒவ்வாத முறையில் அமைந்துள்ள கோயில்களையும் கூட, நாம் பொதுவாகக் காண முடிகின்றது. ஆராய்ச்சியாளர் ஒருவர், "இந்தியக் கட்டிடக்கலையானது எந்த ஒரு தெளிவான முறைக்கும் திட்டத்திற்கும் ஒத்துச் செல்லக் கூடியதாக இல்லாமல், வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு வகைகளில் ஒருவகை

ஒழுங்கு முறையுமின்றி அமைந்து கிடக்கின்றது'' என்று சொல்லும் அளவுக்குக் கூடச் செல்லுகின்றார். உதாரணமாகத் திருவாரூரில் அமைந்துள்ள தியாகராச சுவாமி கோயிலைச் சொல்லலாம். திருவாரூர், சோழப்பேரரசின் தலைநகரமாவதற்கு முன்னைய நிலையில், ஒரு சிறிய சிற்றூராக இருந்தபோது, அங்கிருந்த சிற்றூர்க் கோயிலே இப்போதுள்ள பெரிய கோயிலின் கருவறையாகத் திகழ்கின்றது. உள்ளேயுள்ள இக்கருவறையனைச் சுற்றிலும், பிற்காலத்தில் வெவ்வேறு சமயங்களில் சிறியவும் பெரியவுமான பல அளவுகளையுடையசிறுசிறு கோயில்களும், சந்நிதிகளும் தோன்றுவனவாயின. ஒவ்வொரு சோழஅரசனும், தான் மேற்கொண்ட போரில் வெற்றிபெற்றுத் திரும்பி வந்தபோதெல்லாம், தன்னுடைய பக்தியின் விளைவாகவும், தன்னுடைய வேண்டுதல் நிறைவேறியது குறித்தும், தான் பெற்ற வெற்றியின் சின்னமாகவும், ஒரு வேளை இத்தகைய சுற்றுக் கோயில்களையும் சந்நிதிகளையும் அவ்வப்போது எடுத்திருத்தல் கூடும். இங்ஙனம் திட்டமிடப்படாமல் பல வகை அளவுகளில் சிறியனவும் பெரியனவுமாக அவ்வப்போது எடுப்பிக்கப்பெற்றதன் விளைவாக, ஏற்றத்தாழ்வுகளையுடைய பல வகைக் கதம்பநிலையினவாக, இக்கட்டிடங்கள் இலங்குகின்றன. ஆனால் இத்தகைய தாறுமாறான தற்செயல் வளர்ச்சி, சோழப் பேரரசின் தலைநகரங்களிலுள்ள கோயில்களில் மட்டுமே காணப்படுகின்றது. மற்றைய எல்லாக் கோயில்களிலும் ஒருவகை ஒழுங்கமைப்பு, தெளிவுறக் காணப்படக்கூடிய நிலையில் திகழ்கின்றது; அதிலும் சிறப்பாக இப்பொழுது கோயில்கள் கட்டப்படுகின்ற முறைகளிலேயே, பழைய காலத்துக் கோயில்களும், ஒருவகை ஒழுங்கமைப்பும் வரன்முறையும் கொண்டு விளங்கியிருந்தன என்று எண்ணுதற்கு இடமுள்ளது.

பல்வேறு கோயில்களின் கோபுரங்களையும் ஆராய்ந்தோமானால், அவற்றில் சிற்சில பாணகளையும் பட்டிகைகளையும் நாம் திறனாய்ந்து கண்டு தெளியமுடிகின்றது. பல்லவர் காலத்தில் கோயில்கள் உயரமாக இல்லை. சோழப்பேரரசர்கள்தான் உயரமான கோபுரங்களைக் கட்டுவதற்குத் தொடங்கினர். நம்முடைய கோபுரங்களின் பொதுவான அமைப்பைப் பற்றியும், வட இந்தியக் கோயில்களின் பாணியிலிருந்து இவை வேறுபடுதலைப் பற்றியும், நாம் ஓரளவு நன்குணர்ந்திருக்கின்றோம். கோபுரங்கள் எவ்வளவுக்கெவ்வளவு பழமையானவையோ, அவ்வளவுக்கவ்வளவு அவற்றின் அழகிய வேலைப்பாடுகள் நுண்ணியனவாகவும், பல்வேறு வகையினவாகவும், கலையியற் பட்டிகைக் கூறுகளினால் மனநிறைவு அளிப்பனவாகவும் விளங்குகின்றன.

பெரும்பாலான கோயில்களின் சுவர்களில் கல்வெட்டுக்கள் அமைந்திருக்கின்றன. கோயில்களுக்கு நன்கொடையாக வழங்கப்பெற்ற சொத்துக்களைப் பற்றியே, இக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. எனினும், அவ்வக் கோயில்களின் காலத்தை ஆராய்ந்து அறிந்து கொள்ளுதற்கும் இவைகள் துணைபுரிகின்றன. ஒரு கோயிலில், ஒரு சிறிய நந்தாவிளக்குத் தானமும்கூடக் கல்வெட்டிற் பொறிக்கப்படுகின்றது. எனவே கல்வெட்டுக்களின் காலத்தையே கோயிலுக்குரிய காலம் என்று நாம் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. கோயில்களில் திருப்பணிகள் செய்யும்போது, பழைய சுவர்கள் இடிக்கப்பட்டுப் புதிய சுவர்கள் கட்டப்பெற்றிருக்கலாம். அந்நிலையில் நாம் பிற்காலத்தில் கட்டப்பெற்ற சுவர்களையே காணமுடியும். எனவே அப்புதிய சுவர்களில் காணப்படும் கல்வெட்டுக்களைக் கொண்டு, பழமையான அக்கோயிலின் காலத்தை நாம் கணித்தல் இயலாது. போர் நிகழ்ச்சிகளாலும், அயலவர் படையெடுப்புக்களாலும், கோயில்கள் சிதைந்து சீரழிக்கப்படுவதினின்று தென்னிந்தியாவானது தப்பித்துக் கொண்டபோதிலும், அவ்வப்போது செய்யப்பெற்ற திருப்பணிகளால், முன்னைய மூலமுதற் கோயில்கள், சிறுசிறு மாறுதல்களை அடைந்து வந்திருக்கின்றன. இதன் விளைவாகத்தான், 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டன என்று வரலாற்றின்படி நாம் துணிதற்குரிய கோயில்களிலும்கூட, நாம் அண்மைக்காலத்துக் கட்டிடக்கலையின் இயல்பையே காணுகின்றோம். தலபுராணங்கள் கூறுகின்றபடி அக்கோயில்கள் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டே இருந்திருக்கலாம். அதில் தவறு ஒன்றுமில்லை. வரலாற்றுப்படி மிகப்பழமை வாய்ந்த அக்கோயிலில், இன்று நாம் காண்

பது முன்பிருந்த பழைய அமைப்பை யன்று. காலப்போக்கில் அவ்வப்போது நேர்ந்து விட்ட மாறுதல்களின் விளைவையே நாம் காண்கின்றோம். இவ்வுண்மையை உணர்ந்தால் தலபுராணக்கூற்றுக்கும், கட்டிடக்கலையின் மரபு நெறிக்கும்இடையே காணும் முரண்பாட்டினை, நாம் போக்கிக் கொள்ளலாம்.

தென்னிந்தியக் கட்டிடக்கலையானது, ஏனைய பிறநாட்டுக் கலைகளுடன் தொடர்பு கொள்ளவும், கடன் வாங்கவும் முற்படாமல் வளர்ச்சி குன்றித் தேக்கமடைந்து விட்டது என்று துப்ரூவெல் குறிப்பிடுகின்றார். இதற்குக் காரணம் தென்னிந்தியாவானது இந்திய நாட்டு வரலாற்று நிகழ்ச்சிகளாகிய முதன்மைப் பெருவெள்ளத்திற்கு ஒதுக்கமாக நெடுந்தொலைவில் விலகித் தொடர்பின்றித் தனித்து நின்றுவிட நேர்ந்ததேயாகும் எனலாம். சோழப்பேரரசர்கள் ஜாவா சுமத்திரா முதலிய வெளிநாடுகளிலும் தம்முடைய ஆட்சியின் எல்லையை விரித்துப் பரப்பி, அங்கெல்லாம் இந்துக் கட்டிடக்கலை தழைத்தோங்குமாறு செய்தனராயினும், அவ் அயல் நாடுகளின் கட்டிடக்கலையைத் தாம் தழுவிக் கொள்ளக் கருதிற்றிலர். சயாமிலுள்ள போராபோதூர்அங்கோர்வாட் என்னுமிடங்களிலுள்ள இந்துக் கோயில்கள் இந்தச் சிற்பக்கலைக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். போராபூதூர் என்னும் இடத்திலுள்ள இந்துக்கோயிலானது கட்டிடக்கலை அமைப்பில் ஈடும் எடுப்புமின்றிச் சிறந்தோங்கித் திகழ்வதனால், அத்தகைய தொரு சிறத்த கோயிலை இந்தியாவிலோ அல்லது வேறுபிற எந்த நாட்டிலோ எங்குமே காண்பதரிது என்று ஆராய்ச்சியாளர்கள் உண்மையிலேயே வியந்து கூறியுள்ளனர். இவ்வாறே அங்கோர்வாட் என்னும் இடத்திலுள்ள கோயிலும், மிகச் சிறப்பும் செழிப்பும்மிக்க கற்பனையுடன், பெரிதும் அழகுறக் கட்டப்பெற்றிருக்கின்றது.

இந்துக் கட்டிடக்கலை வளர்ச்சியின் விளைவாகிய இவற்றோடு, சோழப் பேரரசர்கள் தொடர்பு கொண்டிருந்தனராயினும், அவைகளைப் பின்பற்றித் தழுவிப் படிச்சந்தம் செய்துகொள்ளச் சோழப் பேரரசர்கள் முற்பட்டிலர். அதற்குக் காரணம் தென்னிந்தியக் கட்டிடக்கலைப் பாணியானது, இவற்றை விடச் சிறப்பு வாய்ந்தது, செய்நேர்த்தியுடையது. ஆதலின் பிறநாட்டுக் கலைகளைத் தழுவிப் படிச்சந்தம் செய்து அதன் தூய்மையை மாசுபடுத்த வேண்டுவதில்லை என்று சோழப் பேரரசர்கள் ஒருகால் கருதியிருத்தல் கூடும். ஜாவா நாட்டுக் கோயில்களிலிருந்து கற்றுக்கொள்ளத்தக்கது ஏதும் இல்லை என்று சோழப் பேரரசர்கள் கருதியதற்குக் காரணம், பேரரசர்களுக்குரிய செருக்குணர்ச்சியன்று; தம் நாட்டுப் பாணியில் கட்டப்பெற்ற கோயில்களே நெடுங்காலம் நீடித்து நிற்கக்கூடியவை, காலப்போக்கில் அழிந்து படாதவை, கலைச் சிறப்புடையவை என்று அவர்கள் கருதியதே ஆகலாம். அதற்கு ஏற்ப, கற்களால் மட்டும் சுதையும் சுண்ணும்புமின்றி அடுக்கிக் கட்டப்பெற்ற ஜாவா நாட்டுக் கோயில்கள், சிதைந்து குலைந்து சீரழிந்து போக, அம்முறையிற் கட்டப்பெற்ற தஞ்சைப்பெருவுடையார் கோயில் இன்றும் நின்று நிலைபெற்று விளங்குதலைக் காண்கின்றோம்.

சமண மதம் :

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சமணமதமானது தமிழ்நாட்டில் பெரிதும் பரவியிருந்தது; பெரும்பாலான மக்கள் அதனைப் பின்பற்றி ஒழுகினர் என்பது அனைவரும் அறிந்தது. சமணத் துறவியர் பொதுமக்களிடையிற் கல்வியைப் பரப்புதலில் பெரும் தொண்டாற்றினர். கற்றோர்களுக்கு மட்டுமே உரியதாக இருந்த இலக்கிய அறிவினை எளிய பொதுமக்களும் பெறுதற்குரிய வகையில் பற்பல தமிழ் நூல்களை இயற்றினர். சமணத் துறவியரால் இயற்றப் பெற்ற தமிழ்நூல்கள் பலப்பல. இந்துக்களைப் போலவே சமணர்களும் உருவ வழிபாடு உடையவர்கள். அவர்களும்கூடத் தம்முடைய கடவுளர்களுக்குக் கோயில்கள் எடுத்தனர். மகாவீரரின் சிலைகளை நிறுவினர். அத்தகைய கோயில்களும் சிலைகளும் வட இந்தியாவில் ஏராளமாக இருக்கின்றன. ஆனால் வியக்கத்தக்க வகையில் தமிழ்நாட்டில் சமணர்களுடைய கோயில்களையோ சிலைகளையோ மிகுதியாக நாம் காணமுடியவில்லை. தஞ்சை மாவட்டத்தில் சமணக் கோயில்களும் சிலைகளும் பின்வரும் இடங்களில் உள்ளன.

தஞ்சாவூர்
கருந்திட்டைக்குடி
கும்பகோணம்
மன்னார்குடி
தீபங்குடி
வேதாரண்யம்

பௌத்தமதம்:

பௌத்த மதம் பற்றியும் பௌத்தத் துறவிகள் பற்றியும் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பற்பல குறிப்புக்கள் காணப்படுகின்றன. ஆனால் தஞ்சை மாவட்டத்தில் தற்போது பௌத்தமதக் கோயில்கள் எதுவும் இல்லை. ஒருகாலத்தில் தமிழ்நாடு முழுவதும் பரவியிருந்த பௌத்த மதத்தின் எஞ்சிய சின்னங்களாக ஒருசில புத்தபிரானின் சிலைகளும், போதிசத்துவரின் சிலைகளும் மட்டுமே, தஞ்சைமாவட்டத்தில் காணப்படுகின்றன. புத்தரின் வெண்கலப் படிமங்கள் சில உள்ளன. அவைகள் பின்வரும் இடங்களில் காணப்படுகின்றன.

1. சீர்காழிவட்டம், காவிரிப்பூம் பட்டினத்து மேலையூர்.

2. தஞ்சை வட்டம் மதகரம்.

3. கும்பகோணம் வட்டம் திருவலஞ்சுழி.

4. தஞ்சாவூர் வட்டம் எலையூர்.

5. தஞ்சாவூர் வட்டம் மானம்பதி.

6. நாகை வட்டம் நாகபட்டினம்.

தஞ்சைப்பெருவுடையார் கோயிற் சுவர்களில் புத்தரின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சி ஒன்று சிற்பமாக வடிக்கப்பெற்றுள்ளது. அதனால் சோழர்காலத்தில் பௌத்த மதமானது இந்துமதத்திற்கு வேறானது என்றே கருதப்படவில்லை என்று தெரிகின்றது. நாகப்பட்டினத்தில் காணப்படும் போதிசத்துவரின் வெண்கலப்படிமம் 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. அஃது இப்போது சென்னைப் பொருட்காட்சிக் கலைக் கூடத்தில் உள்ளது. அக்கலைக் கூடத்தில் 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புத்தரின் சிலை ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

பௌத்தமதத்தின் தொன்மை நெறிமரனது, வடஇந்தியாவில் அழிந்துமறைந்து விட்ட காலத்திற்குப் பின்னரும்கூட, தஞ்சை மாவட்டத்தில் பல நூற்றாண்டுகள் எஞ்சி நிலவி வந்தது என்று தெரிகின்றது. இவ்வுண்மை சோழர் காலத்துச் செங்கோண வடிவமுடைய பற்பல புத்தர் சிலைகளால் தெற்றென உணரப்படுகின்றது. அண்மையில் காவிரிப்பூம்பட்டினத்தில் செய்யப்பெற்ற அகழ்வாராய்ச்சிகளில் கண்டுபிடிக்கப்பெற்ற பௌத்தப் பள்ளியும், நாகப்பட்டினத்தில் கண்டெடுக்கப்பெற்ற பௌத்த வெண்கலப் படிமங்களும், பௌத்தமதமானது வட இந்தியாவில் அழிந்த பின்னரும்கூட, தென்னிந்தியாவில் உயிர்ப்புடன் நிலவி வந்தது என்பதனை வலியுறுத்துகின்றன. தஞ்சை மாவட்டத்தில் பேலையூர் மதகரம் திருவலஞ்சுழி எலையூர் என்னும் இடங்களில் புத்தர் சிலைகள் காணப்படுகின்றன. சுந்தரசோழன் காலத்திய பௌத்தமதச் செப்புசாசனங்கள் வேதாரண்யத்திற்கு அருகில் கிடைத்துள்ளன. அவைகள் முதலில் வேதாரண்யத்திற்கோ, கோடிக்கரைக்கோ உரியனவாக இருந்திருத்தல் வேண்டும். முதலாம் இராசராச சோழன், முதலாம் இராசேந்திர சோழன் ஆகியவர்களின் காலத்தில், சைலேந்திர (சுமத்திர) அரசர்களால் எழுப்பப்பெற்ற பௌத்த விகாரைகளுக்குரிய இடங்களில், பௌத்தமதத்தின் மகாயானப் பிரிவுக்குரிய 350 பௌத்தச் சிலைகள் நாகப்பட்டினத்தில் இருந்து கிடைக்கப்பெற்றன. அவைகள் முன்னைச் சோழர் காலத்துக்கு உரியனவாகும் (கி பி 87 -1070). ஏனைய பல சிலைகள் பின்னைச் சோழர்காலத்துக்கு உரியன கி. பி. 1070-1250). ஏராளமான இந்தத் தென்னிந்திய வெண்கலப் படிமங்கள், பீடம் தவிர ஏனைய பகுதி முழுவதும் பொள்ளலின்றி, முழு அளவில் கனமாக வெண்கலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான தென்னிந்திய உலோகப் படிமங்கள் சிறிதளவு கலப்பு உலோகங்களுடன் செம்பிலேயே செய்யப்பெற்றுள்ளன. அவைகளை வெண்கலம் என்று சொல்லுதல் பொருத்தமாகத் தோன்றவில்லை. சிற்ப நூல்களின்படியும், மரபு நெறிகளின்படியும் படிமங்கள் செம்பு வெள்ளி பொன் தகரம் ஈயம் என்னும் ஐந்து உலோகங்களினாலேயே செய்யப்படுதல் வேண்டும்.

★

(தொடரும்)

மதிப்புரைகள்

(1) **தமிழகக் கோயிற் கலைகள்:** தமிழ்நாடு அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையின்சார்பில், இந்நூல் வெளியிடப்பட்டிருக்கின்றது. தமிழகக் கோயில்களில் இடம்பெற்று வளர்ந்துவரும் கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, நடனக் கலை முதலிய கலைகளைப்பற்றியும், கோயில்களின வகைகள் இலக்கணங்கள், வரலாறுகள் கோபுரங்கள் சிற்பங்கள், செப்புத்திருமேனிகள் என்பன பற்றியும் 8 கட்டுரைகள். இதன் கண் தொகுத்துத் தரப்பெற்றிருக்கின்றன. அழகிய படங்கள் பல சேர்க்கப்பெற்றிருக் கின்றன.

(2) **கல்வெட்டியல்:** தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறையின் சார்பில் வெளியிடப்பெற்றுள்ள இந்நூலின்கண், தொல்லெழுத்தியல் தமிழ்எழுத்து தமிழ் எழுத்து வட்டெழுத்து கிரந்தஎழுத்து பிறஎழுத்துக்கள், கல்வெட்டின் அமைப்பு தமிழ்க் கல்வெட்டுகள், வடமொழி கல்வெட்டுகள் செப்பேடுகள் நடுகல் என்னும் தலைப்பு களில் பதினைந்து கட்டுரைகள் அடங்கியுள்ளன. இவ்விரு நூல்களும் ஆராய்ச்சியாளர் களுக்குப் பெரிதும் பயன்படும். இவ்விருநூல்களும் கிடைக்குமிடம்: தொல்பொருள் ஆய்வுத்துறை, மங்தைவெளி, சென்னை-4.

(3) **கிருஷ்ணமாரி குறவஞ்சி:** தொண்டை நாட்டில், திருவேற்காடு என்னும் தேவாரப் பாடல்பெற்ற தலத்தில் எழுந்தருளியுள்ள, திருவருட் சிறப்புமிக்க அருள் மிகு தேவிகருமாரி அம்மையின்மீது, அருட்கவி தேவிகருமாரிதாசர் இயற்றியுள்ள நல்ல சிறந்தநூல் இது இந்நூலாசிரியர் முன்னரே, அருள்மிகு தேவிகருமாரியம்மன் புராணம், பிள்ளைத்தமிழ், சதகம், குறம் என்னும் பல இலக்கிய நூல்களை இயற்றியவர். இப் பொழுது இயல்இசை நாடகம் என்னும் முத்தமிழின் சிறப்பும் ஒருங்கே அமைந்த இந் நூலை இயற்றியளித்துள்ளார். அருட்திரு சுவாமி இராமதாசர் அவர்கள், இந்நூலுக்கு ஆசியுரை வழங்கியுள்ளார், சூப்பர்பவர் பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தார், இந்நூலை மிகச் சிறப்பானமுறையில், உயரிய தாளில், செவ்விய முறையிலும் திருத்தமாகவும் வெளி யிட்டுள்ளனர். இந்நூல் தேவிகருமாரியம்மனின் பக்தர்களுக்குப் பெரிதும் பயன்படும். ஆசிரியரின் அரிய புலமையும், பக்தியும் பெரிதும் போற்றுதற்குரியன. கிடைக்குமிடம்: சூப்பர்பவர் பப்ளிகேஷன்ஸ், 21 சுங்குராமசெட்டிததெரு, சென்னை- 1. விலை ரூபா 3.00.

(4) **சகலகாரியசித்தியும். சைவத் திருமுறைகளும்:** இந்நூல், 'சித்தாந்தவித்தகர்' கயப்பாகம் திரு சோமசுந்தரம் செட்டியார் அவர்களும், சிவபுராண ஞானபூசகர் திரு ஆங்கிரச வேங்கடேச சர்மா அவர்களும் தொகுதது இயற்றிய உரையுடன் கூடியது. ஆதீனகர்த்தர்களும், சைவசமயப் பெரியோர்களும் ஆகிய பலர், அணிந்துரைகள் வழங் கியுள்ளனர். அன்புடன் ஓதுபவர்களுக்கு விரும்பிய பயனை அளித்து வரும் திருமுறை திருப்பதிகங்கள் பற்பலவும், அவற்றின் உரைவிளக்கமும், இதன்கண் தொகுத்துத் தரப் பெற்றுள்ளன. பல தலங்களின் வரலாறு, இருப்பிடம், சிறப்பு முதலியனவும் விளக்கப் பெற்றுள்ளன. அழகிய படங்களும், பயன்மிக்க அனுபந்தங்கள் பலவும் சேர்க்கப்பட் டிருக்கின்றன. தூய சிறந்த நல்ல பதிப்பு. பக்தர்களுக்குப் பெரிதும் பயன்படும் நல்ல இனிய அருள் நூல். விலை ரூபா 4.00. கிடைக்குமிடம்: திலிட்டில் பிளவர் கம்பெனி, அரங்கநாதன்தெரு, சென்னை--17.

-ஆசிரியர்,

சிங்கப்பிரான் பெருமை

''சிங்கபிரான் பெருமை
ஆராயும் சீர்மைத்தே''

— நம்மாழ்வார்

முன்னுரை :

சென்னையைச் சார்ந்த பேட்டைகள் பலவற்றுள், சைதாப்பேட்டை என்பது ஒன்று. 'பூவை அட்டாவதானம் கலியாண சுந்தர யதீந்திரர்' என்னும் தமிழ்ப் பேரறிஞர், தாம் பாடிய திருவான்மியூர்த் தல புராணத்தில் 'சதயூ' என்னும் அரசன் ஒருவன் ஆண்டதனால், இதற்குச் சைதாப் பேட்டை எனப் பெயர் அமைந்தது என்னும் கருத்துப்படப் பாடியுள்ளார். ஒரு சிலர், சைதன்ய முனிவர் வழிபட்டு அருள் பெற்ற தலம் என்றும் பொருள் கூறுவர். தொழிலால் சிறப்புற்ற ஊர்கள் பேட்டை எனப்படும். 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கர்நாடகப் பிரதேசத்தில் நவாபாக இருந்த முகமது அலி என்னும் வாலாஜா அரசனின் காலத்தில், அவனுக்கு உறவினனாயும், அவன்கீழ் ஒரு தலைவனாகவும் இருந்த சையத் (Syed) என்பவரின் நினைவாகச் சையத் பேட்டை என்னும் பெயரால், இப்பகுதி அமைந்தது. அதுவே பிற்றை நாளில் சைதாப்பேட்டை என மருவி வழங்குவதாயிற்று அவர் காலத்தில் அமைக்கப்பெற்ற மசூதி ஒன்றும் இப்பேட்டையில் அமைந்துள்ளது. அது, ''மசூதித்தெரு'' என இன்றும் வழங்கி வருகின்றது.

சையத் என்னும் இசுலாமியச் சிற்றரசர் காலத்தில் ஏற்பட்டு வளர்ந்த பேட்டையாயினும், இங்குக் காரணீசுவரர் என்னும் சிவன் கோயிலும், செங்குந்த கோட்டம் என்னும் முருகன்கோயிலும், கடும்பாடியம்மன் என்னும் அம்பிகை கோயிலும், இந்தப் பெருமாள் கோயிலும், இப்பேட்டையிற் செவ்விதின் அமைந்து சிறப்புறத் திகழ்ந்து வருகின்றன.

பிரசன்ன வேங்கட நரசிம்மர் :

இங்குள்ள பெருமாளுக்கு பிரசன்ன வேங்கட நரசிம்ம சுவாமி என்பது பெயர். திருவல்லிக்கேணியில் சுமதி முனிவரின் அரும்பெரும் தவத்திற்காக அகமகிழ்ந்து, அவர் விருப்பப்படி திருவேங்கட மலையிலுள்ள பெருமாள் கிருட்டிணாவதாரத்தில் பார்த்தசாரதியாக விளங்கிய நிலையில் காட்சி தந்தருளினார். அதனால் திருவல்லிக்கேணியிலுள்ள பார்த்தசாரதிப் பெருமாளுக்கு வேங்கட கிருஷ்ணன் என்றும் ஒரு பெயர் வழங்கும். அங்ஙனம் வேங்கட கிருட்டினனாக வெளிப்பட்டு அருள்புரிந்த திருவேங்கடத்துப் பெருமாளே, பின்னர் ஒருமுறை சுமதி முனிவரின் பிரார்த்தனைக்கு இணங்கி. இங்கு நரசிம்ம சுவாமியாக பிரசன்னமாயினர். அதனால் இங்கேயுள்ள பெருமாளுக்கு பிரசன்ன வேங்கட நரசிம்மசுவாமி எனப் பெயர் வழங்கி வருகிறது. திருவல்லிக்கேணிப் பார்த்தசாரதிப்பெருமாள், சைதாப்பேட்டைக்குத் திருவூறல் விழாவிற்காக ஆண்டிற்கு ஒருமுறை எழுந்தருளுதல், இத்தல வரலாற்றைத் தொடர்பு படுத்தும் நிகழ்ச்சியேயாகும் எனலாம்.

சிங்கப்பிரான் பெருமை :

திருமாலின் அவதாரங்கள் பத்தனுள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு சிறப்பும் தத்துவ விளக்கமும் உண்டு. பெருமான் அடியார்க்கருளும் இயல்பும், அடியவரின் பகைவரை ஒறுக்கும் பண்பும் வாய்ந்தவர். அடியவர்க்கு அருளும் இயல்பை 'ஆச்ரித

சென்னை சைதாப்பேட்டை, அருள்மிகு பிரசன்ன வேங்கட நரசிம்மசுவாமி கோயிலில் நடைபெற்ற அனைத் தூய்மைப் பரிசளிப்பு விழாவில், அறநிலைய ஆணையர் அவர்களின் தலைமையில் ஆற்றிய சொற்பொழிவினைத் தழுவியது. (23-6-73).

— ஆசிரியர்.

அனுக்கிரக சீலம்' என்றும், அடியவரின் பகைவரை ஒறுக்கும் பண்பை 'ஆச்ரித விரோதி நிக்கிரகசீலம்' என்று குறிப்பிடுவர். இவ்விரு பண்புகளுக்கும் நிலைக்களமாக விளங்குபவர் சிங்கப்பெருமாள். அதனாலேயே அவர் மிக்க பெருமையும் சிறப்பும் உடையவராகப் போற்றப்படுகின்றார். இத்தகைய சிங்கப்பிரானின் பெருமை நம் அறிவு கொண்டு ஆராய்ந்து அளத்தற்கு உரியதன்று ஆயினும் அதை நாம் இயன்ற அளவு ஆராய்ந்து உணர்ந்து அனுபவித்து மகிழ்தற்குரியது. இவ்வுண்மையினையே, "சிங்கப்பிரான் பெருமை ஆராயும் சீர்மைத்தே" என வினைக்குறிப்பும், வியப்புக் குறிப்பும் அமைய, நம்மாழ்வார் நயந்து இனிது அருளிச் செய்கின்றார்.

எங்கும் உளன் கண்ணன் என்ற
மகனைக் காய்ந்து.
இங்கு இல்லையால் என்று
இரணியன் தூண்புடைப்ப,
அங்கு அப்பொழுதே அவன்
வீயத் தோன்றிய என்
சிங்கப் பிரான் பெருமை
ஆராயும் சீர்மைத் தே.

பொய்கையார் :

பெருமாள், இரணியன் தன்னை இகழ்ந்ததனால் அவனைக் கொன்றார் என்று சிலர் நினைப்பர். தம்மை இகழ்ந்தமைக்காகப் பெருமாள் இரணியனைக் கொன்றார் அல்லர்! தம் அடியவனாகிய பிரகலாதனை நலிந்தது தரிக்கமாட்டாமையினாலேயே பெருமாள் இரணியனைக் கொன்றார்.

"வரத்தால் வலிநினைந்து மாதவ நின்பாதம்
சிரத்தால் வணங்கானும் என்றே? — உரத்
தினால்
ஈரரியாய் நேர்வலியோன் ஆய இரணியனை
ஓர் அரியாய் நீ இடந்தது ஊன"

எனவரும் பொய்கையாழ்வார் பாடல் இங்கு நாம் சிந்தித்தற்குரியது. "மாதவனே! இரணியன் உன்னை இகழ்ந்து பழித்தான் என்பதற்கோ, அவனை நீ வதைத்தாய்? அதற்காக அன்றிப் பக்தர்களின் தலைவனான பிரகலாதனிடத்தில் அவன் பெரிதும் கொடுமை செய்து குற்றப்படுத்தினான் என்பதற்காக அன்றோ, அவனை வதைத்தாய்" என்பது இப்பாடலின் பொருள்.

"நாட்டில் கண்டறியாத அத்விதீயமான ந்ருஸிம்ஹமாய்க் கொண்டு, அவனுடைய மார்விளமான பெரிய சரீரத்தை, ஆச்ரிதவத்ஸலனான நீ இடந்து பொகட்டது, ப்ரஹ்மாதிகள் கொடுத்த வரத்தால் வந்ததன் மிடுக்கைக் கனக்க நினைத்து, ஸர்வாதிகனான உன்னுடைய திருவடிகளைத் தலையாலே வணங்கி, ஆச்ரயியாதே யிருந்தான் என்றோ? அன்றிறே; சிறுக்கனைப் பலவாறு கறுவி நலிந்தானென்றுமிது கொண்டிறே யென்றபடி."

JL Q2m211, N59T15, N73.15.

எனவரும் பழைய சிறந்த உரைப் பகுதியும் இங்கு நாம் அறிந்து இன்புறற் பாலது. மேலும் "ஈசுவரன் அவதரித்துப் பண்ணின ஆனைத் தொழில்கள் எல்லாம் பாகவத அபசாரம் பொறுக்க இயலாத தன்மை என்று ஜீயர் அருளிச் செய்வர்" என்னும் சீர்வசனபூடணைத் திருமொழியின் பொருட்செறிவும், இங்கு நாம் சிந்திக்கற் பாலது.

அருட்பண்பு :

பெருமாள் தம்முடைய அடியவர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவது மட்டுமின்றி, தம்மைப் பகைப்பவர்களின் விருப்பங்களையும்கூட, ஒருவகையில் நிறைவேற்றி அருள்கின்றார் என்பது, நாம் உணர்தற்குரியது. எங்கு முளன் கண்ணன் என்றான் பிரகலாதன். இங்கில்லை என்று இரணியன் தூண்புடைத்தான் அங்கு அப்பொழுது, அவனுடைய மணிவாசல் தூணில் பெருமாள் வெளிப்பட்டார்: அவன் தட்டிய தூணில் தோன்றினார்; அவன் தட்டிய இடத்திலிருந்தே புறம் போந்தார்.

பிரமன் படைப்பிற்குட்பட்ட எதனாலும் நான் இறக்கலாகாது என இரணியன் விரும்பினான். அதனால் பிரமன் படைப்பில் இல்லாத மனித உடலும், சிங்கமுகமும் கொண்டு ஆளரியாய்த் தோன்றினார். அஸ்திர சஸ்திரங்கள் எதனாலும் தனக்கு இறப்பு நேர்தல் ஆகாது என்று இரணியன் விரும்பினான்; அதனால் அவையிரண்டும் அல்லாத நகங்களைப் பெருமாள் பயன்படுத்தினார்; இரவிலோ பகலிலோ தான் இறத்தலாகாதுஎன்றான். அதற்கு இசைந்துஇரவும் பகலும்அல்லாமல் அவை இரண்டும் கூடிய சந்தியாகிய மாலை வேளையில், பெருமாள் அவனை ஒறுத்தார் வீட்டிலோ வெளியிலோ தனக்கு இறுதி விளைதல் ஆகாது என்றான். அதனால் வீடும் வெளியுமில்லாத வாயிற்படியில் பெருமாள் அவனைத் தடிந்தார். மண்ணிலோ வானிலோ தனக்கு முடிவு நேர்தல் கூடாது என்றான். அதற்காக மண்ணும் விண்ணுமல்லாத தம் மடியின் மீது வைத்து அவனைத் தண்டித்தார். தம்மைப் பகைப்பவனின் விருப்பங்களையும்கூட ஒருவகையில் நிறைவேற்றி வைக்கும் அருட்பண்புடையவர் பெருமாள் என்பது இதனால் விளங்குகின்றது.

எம்பெருமானார் :

சிறந்த அரசர் முதலிய தலைவர்களுக்கும், கடவுளுக்கும் இன்றியமையாத பண்புகள் இரண்டு உண்டு. ஒன்று கொடியோர்த் தெறுதல் (துஷ்ட நிக்கிரகம்). மற்றொன்று செவ்வியோர்க்கு அளித்தல் (சிஷ்டபரிபாலனம்). இவ்விரண்டு குணங்களும் தலைமைப்பாடுடைய தக்கோர் அனைவருக்கும், இன்றியமையாத சிறந்த தன்மைகளாகும்.

'நட்டோரை உயர்பு கூறினன்
செற்றோரை வழிகபுத்தனன்''

எனவரும் புறநானூற்று வரிகளும் இவ்வுண்மையை உணர்த்துதல் காணலாம். பெருமாள், இவ்விரு தன்மைகளையும் 'சிங்கப்பிரான்' ஆகிய இவ்வவதாரத்தில் சிறப்புற வெளிப்படுத்தி அருளியுள்ளார். செவ்வியோர்க்கு அளித்தலாகிய அநுக்கிரகமும், கொடியோர் தெறுதலாகிய நிக்கிரகமும், இவ்வவதாரத்தில் ஓரே சமயத்தில் ஒருங்கே நிகழ்ந்துள்ளன.

''தோற்றக் கேடவை இல்லவன்
உடையான் அவனொரு மூர்த்தியாய்
சீற்றத்தோடு அருள் பெற்றவன்
அடிக்கீழ்ப் புகநின்ற செங்கண்மால் ...''

எனவரும் திருவாய்மொழிப் பாசுர விரிவுரையில்,

"இரணியன் பக்கல் சீற்றமும் செல்லா நிற்கப் பிரகலாதாழ்வானுக்குக் கிட்டலாயிருந்தபடி எங்ஙனே?' என்று சிலர் கேட்க, "சிம்மம் ஆனை மேலே சீறினாலும் குட்டிக்கு முலையுண்ணலாம்படி இருக்குமிறே" என்று எம்பெருமானார் அருளிச் செய்தார் ஆச்ரிதவாச்சல்யத்தாலே அவர்கள் விரோதிகள் மேலே சீறின சீற்றமானால் பின்னை ஆச்ரிதர்களுக்கு அணையவொண்ணாதபடி இருக்குமோ?"என்று அவர் அருளிச் செய்தார்"

என்று இங்ஙனம் வரும் விரிவுரைப் பகுதியால், சிங்கப்பிரான் நிக்கிரகம் அநுக்கிரகம் ஆகிய இரண்டையும் ஒருசேர நிகழ்த்தியருளிய திறன் தெளியலாம்.

நம்பிள்ளை உரைநயம் :

ஆராயும் சீர்மை அமைந்த சிங்கப்பிரானின் பெருமையினை, நம்மாழ்வார் வேறொரு பாடலிலும் நன்கினிது விளக்கியருள்கின்றார்.

148710

"உன்னைச் சிந்தையினால் இகழ்ந்த இரணியன

அகல் மார்வம் கீண்டஎன்
முன்னைக் கோளரியே! முடியாதது
என்! எனக்கே"

என்பது நம்மாழ்வார் அருளிய ஒரு திருப்பாசுரம். இதன்கண் "உன்னை இகழ்ந்த இரணியன்" என்பதே அமையும். எனினும், "உன்னைச் சிந்தையினால் இகழ்ந்த இரணியன்" என்று விதந்து கூறப்பெற்றுள்ளது இவ் விதப்புச் சொல், ஓர் ஆழ்ந்த பொருட்குறிப்பு உடையதாகத் திகழ்கின்றது. நம்பிள்ளை என்னும் வைணவப் பெருஞ் சான்றோர், நயஞ் சான்ற அவ்வரும்பெறற் பொருட் குறிப்பினை விளக்கி அருளியுள்ளார்.

இறைவன் அன்பர்களுக்கு அருள் செய்தும், அன்பற்ற கொடியவர்களை ஒறுத்தும் வருகின்றான். இங்ஙனம் செய்யுங்கால் அன்பர்களிடத்தில் மனம் நிறைந்த பேரன்பின் திறத்தை எதிர்பார்த்தே அருள் செய்வதில்லை. "பொய்யே புகழ்வார் புகழ்ந்தால் அதுவும் பொருளாக் கொள்வானே" என்றபடி போலி அன்பிற்கும் பெரிதும் மகிழ்ந்து இறைவன் இன்னருள் புரிகின்றான். இவ்வாறே அன்பில்லாத கொடியவர்களைக் கடிந்து ஒறுப்பதிலும், வெளியே மேலுக்குத் தோன்றுகின்ற பகைமையைக் கொண்டே இறைவன் ஒறுத்து விடுவதில்லை. உள்ளபடியே அவர்களின் உள்ளத்திலும், பகைமையுணர்ச்சி ஆழ்த்து படிந்திருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்து, அதன் பின்னர்தான் இறைவன் அவர்களை ஒறுக்க முற்படுகின்றான்.

ஒருவனுக்கு அருள் செய்வதற்கு 'என் பெயரைச் சொன்னான்' 'என் ஊரைச் சொன்னான்' என்றாற்போன்ற அற்பமான காரணம் ஏதேனும் இருந்தாலும் போலும். காரணம் இல்லாமலேகூட இருக்கலாம். இறைவனின் அருள் 'நிர்ஹேதுக கிருபை (காரணமில்லாத இரக்கம்) எனப்படுமாதலின்! ஆனால் ஒருவனைத் தண்டிப்பதற்கோ, மிகப்பெரிய வலிய சரியான காரணம் வேண்டும். நலம் செய்வதாயின், எவருக்கும் எதுவும் ஆராயாமலே நலம் செய்யலாம். ஆனால் ஒருவனுக்குத் தண்டனை தருவதாயிருந்தாலோ, பலகாலும் பலமுறையும் தீரத் தெளிய ஆராய்ந்து பார்த்து, மன்னிக்க இயலாத மாபெரும் குற்றம் என்று ஐயத்திற்குச் சிறிதும் இடமின்றி செவ்விதின் தெளிந்து உறுதி செய்து கொண்ட பின்னர்தான், தண்டித்தல் வேண்டும். அதுவும் கூட, அவனைச் செயல் நன்றாகத் திருத்திக் காப்பாற்றி அருளுவதன் பொருட்டுக் கடிதோச்சி மெல்லத் தண்டித்தல் வேண்டும்.

ஆதலின் பெருமான், இரணியனின் பகைமை வெளிநோக்கில் மேம்போக்காக அமைந்ததோ அல்லது உள்ளத்திலேயே பெரிதும் ஆழப் படிந்து கிடந்ததோ என்று, நன்கினிது தீரத்தெளிய ஆராய்ந்து பார்ப்பதற்காகவே, அகல்மார்பம் கீண்டு நோக்கி, அதன் பின்னரே இரணியனைக் கொன்றார் என்பது இப்பாசுரத்தின் இனிய அரிய நுண்பொருளாகும். "உளந்தொட்டு இரணியன் ஒண்மார்பு அகலம் பிளந்திட்ட" எனவரும் பெரியாழ்வார் திருமொழியிலும், 'உளந்தொட்டு' எனவருதல், இக்கருத்தினை அரண்செய்து வலியுறுத்தியிருத்தல் உணர்ந்து மகிழத்தக்கது. இதனால் பெருமாளுக்கு அநுக்கிரகம் செய்வது ஒன்றிலேயே, அதிகமான நோக்கு என்பது தெளியலாம். இத்தகைய அருளியல்பு, சிங்கப்பிரான் திருவவதாரத்தில் சிறப்புற அமைந்து திகழ்கின்றது என்பது பெரியோர்களின் துணிபு.

முடிவுரை;

அருளுருவாய் அமைந்து திகழும் சிங்கப்பிரான் (1) லட்சுமிநரசிம்மர் (2) யோக நரசிம்மர் (3) சத்திராந்தநரசிம்மர் (4) உக்கிரநரசிம்மர் (5) வராகநரசிம்மர் (6) பர்முலிதி நரசிம்மர் (7) பிரகலாதநரசிம்மர் (8) பார்க்கவநரசிம்மர் (9) காரங்கிநரசிம்மர் என ஒன்பது வகைகளில் சிங்கவேள் குன்றம் என்னும் திவ்வியதேசத்தில், நவ நரசிம்மராக எழுந்தருளிக் காட்சி தரும் சிறப்பு, அன்பர்கள் அனைவரும் தரிசித்து மகிழற்பாலது.

"நாதனை நரசிங்கனை நவின்று
ஏத்துவார்கள் உழக்கிய
பாத தூளி படுதலால், இவ்
வுலகம் பாக்கியம் செய்ததே"

(பெரியாழ்வார்)

திருக்குறளில் ஊழும் முயற்சியும்

['சித்தாந்தக் கலைச்செல்வர்' திரு. வச்சிரவேல் முதலியார், B.A., L.T. திருவாவடுதுறை]

திருக்குறளுக்கு வழங்கிவரும் பெயர்களுள் பொதுமறை என்பது ஒன்று. இப்பெயர் அவ்வருமந்த நூலின் பொதுமையினையும், உணர்தற்குரிய மாண்பொருள் நுட்பத்தினையும் ஆழத்தினையும் ஒருங்கே குறிப்பது. நாடு, மொழி, இனம் முதலிய வேறுபாடு கருதாது, உலகத்தார் அனைவரும் உரிமை கொண்டு, ஒல்லும்வகை ஓதியுணர்ந்து ஒழுக்கத்தால் உயரவேண்டும் என்னும் மிக விரிந்த நோக்குடனே தெய்வப் புலவர் மெய்வைத்த சொல்லால் அவ்வுய்வைத் தருநூலை அருளிச் செய்துள்ளார் என்பது தெளிவு. ஆயினும், அது சிறப்பாகத் தமிழ் பயிலும் மக்கட்கு, அவர்தம் தொல்வரவு, பண்பாடு, ஒழுக்கநெறி, மெய்ந்நெறி என்பவற்றின் உரையாணி எனச் செய்யப்பெற்று நிலவுவது என்னும் மெய்ம்மை மறக்கவோ மறுக்கவோ இயலாததொன்று. தமிழகத்தே பல திசைகளிலிருந்து பல்வேறு பண்பாடுகள், நாகரிகங்கள், கொள்கைகள், ஒழுகலாறுகள் என்பவை வந்து விரவத் தொடங்கிய குழப்பமான காலத்தில், தமிழ் மக்கள் கடைப்பிடித்து ஒழுகுதற்பொருட்டு, அவர்க்குப் பெறலரும் அருட்கொடையாகக் கிடைக்கப்பெற்ற, உயர்வற உயர்ந்த வாழ்வியல் அமைப்பு என விவரித்தற்கு உரியது திருக்குறள். இஃது ஒழுக்கநெறி உணர்த்தும் உலகப் பெரு நூல்களுள் முதன்மையான அறநூல்; சிறந்த தமிழ் இலக்கியம்; தனக்குப்பின் தமிழ்மொழியில் தோன்றிய எவ்வகை நூலையும் தன்வயப் படுத்தித் தன் வழியைப்பின்பற்றச் செய்த தலைமைசான்ற முழுமுதற் பெருநூல். பிறமொழியினர் பாராட்டிப் போற்றும் பெருமை உள்ளது.

அறத்துப்பாலின் இறுதியிற் கூறப்படுவது ஊழியல்; அஃது ஊழ் என்னும் ஓர் அதிகாரத்தால் விவரிக்கப்படுகின்றது. ஊழ் என்னும் சொற்கு மலர்தல், உதிர்தல், செவ்வி கெடல், முறைமை என்னும் பல பொருள்கள் உரைக்கப் படுகின்றன. அவற்றுள், அதனை வினையாகக் கொள்ளும்போது மலர்தல், பக்குவப் படுதல் எனவும், பெயராகக் கொள்ளும் போது முறைமை, திரிபின்மை எனவும் பொருள்படுவதாகக் கொள்ளுதல் இவ்விடத்திற்குப் பொருந்தும்.

பரிமேலழகர் ஊழைப் பொருள் இன்பங்களுக்கு முதற்காரணம் எனவும், அஃது இருவினைப் பயன்செய்வதனையே சென்றடைவதற்கு ஏதுவாகிய நியதி எனவும் கூறுகின்றார். மேலும், ஊழ், பால், முறைஉண்மை, தெய்வம், நியதி, விதி என்பன ஒருபொருட் கிளவி என அவர் குறிப்பதும உளங்கொளத் தக்கது. இன்ப துன்ப நுகர்ச்சி நுகர்வின்மைக்கும், அவற்றைப் பயக்கும் பொருளின் ஆக்க அழிவுகளுக்கும் ஊழ் காரணம் என்பதும், பொருளை ஈட்டுதற்கும் ஆளுதற்கும் துணையாக உள்ள முயற்சி, இயற்கையறிவு கல்வியறிவு, காலம், இடம் முதலிய உடனிலைகள் எல்லாம் ஊழின் வகையால் திரிவு படும் என்பதும் இவ்வதிகாரத்தாற் கூறப் படுகின்றன.

> ஊழிற் பெருவலி யாவுள? மற்றொன்று
> சூழினுந் தான்முந் துறும்

என்னும் இறுதிப்பாட்டால், ஊழ் தனக்கு மறுதலையாவதோர் உபாயத்தைச் சூழும் சூழ்ச்சி வழியாகவும் வந்து தான் முற்பட்டு நிற்பது என்னும்கருத்துத் தெரிவிக்கப் படுகின்றது.

சிலப்பதிகாரம் மணிமேகலை சிந்தாமணி என்னும் சமண புத்த காப்பியங்களில் வரும் கதைகளும், புத்த சின தருமங்களும் ஊழியலுட் கூறப்படும். மேற்காட்டிய முடிவுகளை எவ்வகையான தடையும் மாற்றமும் இன்றி முழுவதும் ஏற்று நடப்பவை ஆகும். இனி "ஊழிற் பெருவலி யாஉள?" என்ற ஆசிரியர் தாமே "முயற்சி திருவினை ஆக்கும்: முயற்சி

யின்மை-இன்மை புகுத்திவிடும்" எனவும் கூறுதலின், இவைபற்றிய விளக்கத்தை மேலும் கண்டறிய விரும்புவது இயல்பே. பண்டு சைவசித்தாந்த நெறியினர் இவற்றைப் பற்றி ஆராய்ந்துள்ளனர்; அவர்தம் துணிபு பின்னர்த் தரப்படும். ஊழைப் பற்றி உரையாசிரியர்களுரைத்தவை சரி அல்ல என்பாரும், திருக்குறள் முரணான கருத்துக்களைத் தெரிவித்தலின், அது பலரால் இபற்றப்பெற்ற பாக்களின் தொகை நூலே என்பாரும் உளர்.

இம்மை நுகர்ச்சி ஒன்றினையே உண்டு என வைத்து ஆராயும் மேலைநாட்டுக் கல்வி பயின்றார்க்கு முற்படத் தோன்றும் வினாக்கள் இரண்டு; ஒன்று, தானே எண்ணி முயலும் உரிமை ஒருவனுக்கு உண்டோ, இன்றோ? உண்டெனின், அவன் அறிவும் முயற்சியும் ஊழால் திரிவுபடும் எனல் பொருந்தாது; இன்றெனின், ஒருவன் செய்யும் செயல் மேலைக்கு வினையாய்வரும் எனல் வேண்டா; ஆதலால், எது முடிவு என்பது மற்றையது ஊழ் முயற்சி என்பனவற்றுள், எது மிக்கது? என்பது. "மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி' என்னும் சூத்திர உரையில் சேனாவரையர், "முயற்சியும் தெய்வமும் ஆகிய, காரணங்களுள் தெய்வம் சிறந்தமை யான். அதற்குக் காரணமாகிய தவஞ்செய்தல், தாயைக் கோறல் முதலாகிய தொழிலை மிக்கது என்றார்" எனக் கூறுகின்றார்.

இங்கு முதற்கண் ஊழ் அதிகாரத்தின் நோக்கம் யாது எனக் காணுதல் பயன் தருவதாகும். "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" ஆதலால், தீயவை நீக்கி மற்றவற்றைக் கொண்டு ஒழுகுக என்பதே அதன் முதன்மையான நோக்கு. கடவுள் வாழ்த்து முதலாக அவா அறுத்தல்வரை, செய்க, செய்யற்க என ஆசிரியர் கூறியவை எல்லாம் நற்செயலைச்செய்யும்படி ஒருவனை ஊக்குவிப்பவை என்பதில் ஐயம் இல்லை.

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாய் எல்லாம் செயல்

என்பதே ஆசிரியர் தரும் ஆணை, பின்னரும் ஆள்வினையுடைமை இடுக்கண் அழியாமை முதலாக முயற்சியோடு இயைபுள்ள அனைத்தும் வற்புறுத்தி விதிக்கப்படுகின்றன; அவை அறமாகவே அமைதல் வேண்டும் என்பதற்காக வினைத்தூய்மை, தீவினை அச்சம் போன்றவையும் உடன் வைத்து உணர்த்தப்படுகின்றன.

நடைமுறையில், நன்முயற்சி, குறித்த நற்பயனைப் பயவாமையும், மாறான பயனை விளைத்தலையும் காண்கின்றோம்; சிறு முயற்சி உடையார், தம் கருத்தின்றியே, பெரும் பயனை அடைவதையும் காண்கின்றோம். ஒருவர் இம்மைச் செய்வது நல்வினையே ஆகவும் அவர் துன்புறுதலையும், தீய செய்வார் இன்பமும் பொருளும் பெறுபவராகக் காணப்படுதலையும் அறிந்து வருகின்றோம். பலர்க்கும் குடிப்பிறப்பும், உடலமைப்பும் மனப்பண்பும் வேறு வேறாக அமைந்து, அவை காரணமாக அவர் செல்வ வறுமை, உயர்வுதாழ்வு, இன்பத்துன்பம், முயற்சி முயற்றின்மை, அறிவு அறியாமை என்றின்னவற்றை உடையராவதையும் காணாமல் இல்லை. இவை எல்லாவற்றையும் அடக்கி விளக்கக்கூடிய வாழ்க்கைத் தத்துவத்தை ஒருவர் உள்ளம் அவாவுதலின், நம்முன்னோர், தம் தெளிந்த யாசறு காட்சியில் மறுபிறப்பும், இருவினையும், வினைப்பயனும் ஊழும், காலமும் முதலியவற்றின் உண்மையினையும் இயல்பினையும் கண்டு கூறியுள்ளனர். அத்தகைய உண்மைகளில் ஒன்று ஊழ். அதனியல்பை விவரிப்பது ஊழ் என்னும் அதிகாரம். இவ்வதிகாரத்தின் பொருள்நிலைநன் முயற்சி பயன்தராத போதும், உலக நிகழ்ச்சிகள் நம் கட்டுக்கு அடங்கி வாராத காலத்தும் நம் மனப்போக்கைக் கட்டுப் படுத்தி உணர்ந்து, அமைதியும் தளக்கமின்மையும் மேற்கொண்டுவாழ்வதற்குத் துணையாக உள்ளதே அன்றி ஒருவனை மடிந்திருக்கச் செய்வதன்று. கணியன் பூங்குன்றனார் உளங்கொண்ட வாழ்வியல் உண்மையே ஊழ் என்னும் அதிகாரத்தால் விளக்கப் படுவது.

நன்று ஆங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவதெவன்?

என்னும் குறட்பாவைப் பாட்டோடு ஒப்ப வைத்துக் காணின், அதன் பொருட்பயன் இனிது விளங்கும். திருவள்ளுவர் மக்களை ஊழ்வினைக்கு அடிமையாக ஆக்கிவிட

வில்லை; அறநெறியினின்றும் பிறழாதே எனவே அவர் கட்டுப் படுத்துகிறார் என்பது ஓர்ந்து உணர்ந்து கடைப்பிடிக்கத் தக்கது.

மேலும், திருவள்ளுவர், ஒருவன் தனிவாழ்விலும் பொதுவாழ்விலும் தன் கடமைகளைச் செய்யுங் கருத்தினன் ஆயின், அவனுக்கு, அறம் காரணமாக இயற்கைச் சூழ்நிலையும் துணைபுரிவதாகவே அமையும் என்னும் கருத்து உடையவர்.

> வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
> பருவந்து பாழ்படுதல் இன்று. (83)
> அகன் அமர்ந்து செய்யாள் உறையும் முகன் அமர்ந்து
> நல்விருந்து ஓம்புவான் இல். (84)
> இலன் என்று தீயவை செய்யற்க; செய்யின்
> இலன் ஆகும் மற்றும் பெயர்த்து. (205)
> இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
> பெயலும் விளையுளும் தொக்கு. (545)
> முறைகோடி மன்னவன் செய்யின்உறைகோடி
> ஒல்லாது வானம் பெயல். (559)

என அவர் உடன்பாட்டானும் எதிர்மறையானும் கூறியிருத்தல் அறியத்தக்கது.

> தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் மழை. [வாள 55)

என அவர் கூறியதை, மக்களுக்கு அன்னையும் பிதாவும்முன்னறி தெய்வமாதல்போல மகளிர்க்குக் கணவன் முன்னறி தெய்வம் என உணர்த்த வந்ததாகக் கொள்வதே சால்புடைத்து. திருமணமான மகளிர் தெய்வந் தொழுதல் கற்பிற்குப் பழுது என அதுகொண்டு நாட்டத் துணிவது பெண்டிர்க்கு இறைவன் உண்மைக் கொள்கை வேண்டா என்றதாய் முடியும், மேலும்,

> தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தானென்றாங்கு
> ஐம்புலத்தாறோம்பல் தலை (43)

என்றதனால் இல்வாழ்க்கைக்குத் தெய்வ வழிபாட்டினை விதித்த ஆசிரியர் வாழ்க்கைத் துணையாவாள். அவ்வழிபாட்டின் கண்ணும் பங்கு பெறுவாள் என்னும் கருத்தினரே ஆவர்.

இனி, ஊழ் என்பது யாது எனக் காண்போம்: மன மொழி மெய்களால் ஒருமுறை செய்யும் செயல் மீளவும் தன்னைச் செய்விக்கும் ஒரு பழக்கத்தைத் தோற்றுவிக்கும்; அப்பழக்கம் ஒருவனைப் பல வகையாலும் பின்னும் பிணித்துப் பின்னிகழும் அறிவு முயற்சிகளை தெரிவு படுத்தும் எனக் கொள்வதில் தடையிராது. அப்பழக்கம் பின் பிறப்பினும் தொடரும் எனக் கொண்டால் அதுவே ஊழாம். 'ஊழிற் பெருவலி யாவுள' என ஊழை முயற்சியினும் வலிது என்றது யான் எனது என்னும் செருக்கொடு நிகழும் முயற்சியை நோக்கிக் கூறியது;

> தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சிதன்
> மெய்வருத்தங் கூலி தரும்,

எனவும்,

> குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
> மடிதற்றுத் தான்முந் துறும்

எனவும், ஊழ் முயற்சிக்குத் தடை ஆகாதென்றும் முயற்சிக்குத் துணையாகவே நிற்கும் என்றும் கூறியது அறமாவது இறைவனது ஆணையே என அதன் இயல் பறிந்து முயலும் அறவழி முயற்சியை நோக்கிக்கூறியது; இங்ஙனம் கொண்டால், பொய்யில் புலவர் வாய்மொழிகள் முன்னொடு பின் முரணாது அமைந்து இருத்தல் புலப்படும்.

> இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
> பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

என வெளிப்படையாகவும்,

> ''கூற்றங் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
> ஆற்றல் தலைப்பட் டவர்க்கு''

எனக் குறிப்பாகவும் இறைவன் அருளை நினைவார்க்கு வினையைக் கடத்தல் கூடும் என ஆசிரியர் உணர்த்தியுள்ளமை நினைவிற் கொள்ளத்தக்கது. நல்ல நினைவு சொற் செயல்களைக் குறிக்கொண்டு பழகிக் கொள்ள வேண்டும் என்பதும், மறுதலையானவற்றை-ஒருவன் தன்கண் நிகழாமல் குறிக்கொண்டு காத்தல் வேண்டும் என்பதும், இவை சிற்றினம் சேராது பெரியோரைத் துணையாகக்கொண்டு ஒழுகின் நிலையாக அமையும் என்பதும் திருவள்ளுவர் துணிவுகள்.

இனி வினையின் இயல்பு பற்றிச் சித்தாந்த சைவர் கொடுத்துள்ள விளக்கம் சுருக்கமாக உரைக்கப்படும்: முற்பிறப்புக்களிற் செய்த முயற்சியே, பின்னர்வரும்

148710

உருஉடம்பு, சூழ்நிலை, செல்வவறுமை, உயர்வுதாழ்வு, இன்பதுன்பம் என்பவற்றிற்கு ஏதுவாக நிற்கும் நிலையில், வினை எனப்படுகின்றது. உயிர் ஓர் உருஉடம்பை எடுக்கும்போது அதற்கு உரிய சூழ்நிலைகளும் அதுகொண்டு நுகர்வதற்குரிய பொருள் இன்பங்களும் புலப்படாத அருநிலையில் அமைக்கப்பெறுகின்றன. இது விளைநிலம் பெற்றான் ஒருவனுக்கு அதன்கண் அமைந்துள்ள மண்வளம், நிலத்தடித் தண்ணீர் முதலியவை போன்றது. அத்தண்ணீரையும் வளத்தையும் பயன்படுத்தி நுகர்வது கிணறு தோண்டுதல், உழவு என்னும் முயர்சிகளின்றி அன்றி நிகழாதவாறு போல, ஊழ்காரணமாகப் புலப்படாத அருநிலையில் அமைந்த பொருளின்பங்கள் புலப்பட்டு வெளிப்படுதற்கு முயற்சி இன்றியமையாதது. ஒரு பிறப்பில் ஒருவன் எய்தும் பொருள் இன்பங்களுக்கு ஊழ் முதற்காரணம் எனின் முயற்சி துணைக் காரணம் ஆகும். துணைக் காரணமாக உள்ள முயர்சி உயிர்க் கிழவனால் செய்யப்படுவதே ஆயினும், அஃது உலகு, உடல், கரணம், காலம், செயப்படுபொருள், செய்தி, இன்னதற்கு இது பயன் என்னும் ஏனைய தொழில்முதல் நிலைகளோடு பொருந்தியபோது நிகழ்வது ஆதலால், அவற்றைஉயிர் தானே கூட்டிக்கொள்ள மாட்டாது; அவை இறைவனால் கூட்டப் பெறுபவை. ஆதலால் ஒருவன் தான் செய்யும் முயர்சியை ஈசன் இட்ட பணியாகக் கொண்டு செய்தல் வேண்டும். ஆனால், உயிர்கள் யான் எனது என்னும் செருக்கோடு அம்முயர்சியைச் செய்யும்: செய்தலின், அது செயல் வகையால் முன்னை வினைக்கு ஈடாக வரும் நுகர்ச்சியைக் கொடுத்ததே, நாம் என்னும் முனைப்பாற் செய்யப்படுதல் பற்றி மேலைக்கு வரும் வினையாகவும் முடியும். இங்ஙனம், முனைப்பாற் செய்யும் முயர்சிகள் எல்லாம், உணவின் பொருட்டு விளைந்த கனி முதலாயின உணவுமாகி மேலைக்கு வித்துமாகி வருதல் போல, வீடுபேறு எய்தும்வரை நுகர்ச்சியும் மேல்வினையுமாகி இடையறவுபடாது தொடர்ச்சியாய் வரும் ஆதலால், பிறசெயாது வினை நுகர்ச்சி இல்லை. இத்தொடர்ச்சி அறவேண்டின், ஒருவன் தனக்கு இயலும் முயற்சியை ஈசன் பணி என உணர்ந்து, முதல்வன் ஆணையாகிய ஒழுக்கநெறி நின்று, அவன் பொருள்சேர் புகழ்ந்து புரிந்து வரல்வேண்டும். வரின் இருவினைத் தொடர்ச்சி அறும்.

உயிர்க்கு இயல்பாக உள்ள இருள் என்பது மூலநோய் போன்றது: உடம்பு முதலியவையும் அவைகாரணமாக நிகழும் முயற்சியும் இன்பதுன்ப நுகர்ச்சியும் அந்நோய் நீங்குதற்குத் தரும் மருந்து போன்றவை. அக இருள் காரணமாக உடம்பு முதலியவற்றோடு கூடியபோது உண்டாகும் மருள் எனப்படும் சுட்டறிவும் அவ்வறிவு காரணமாக நிகழும் நினைவு சொற் செயல்களும் மருந்து அருந்தினவனுக்கு விளையும் எதிர் இசைவு போன்றவை இறைவன் பிறவி நோய் மருத்துவன்.

இவ்வடிப்படைக் கருத்தொழுங்கினைச் சேக்கிழார் பெருமான், முன்னர்ப் பௌத்தன் சார்ந்து பின் சிவநெறியைப் பற்றிய சாக்கியநாயனார் மேல் வைத்துப் பின்வருமாறு அருளிச் செய்துள்ளார்:

"செய்வினையும் செய்வானும்
அதன்பயனும் சேர்ப்பானும்
மெய்வகையால் நான்காகும்
விதித்த பொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி
அல்லவற்றுக்கு இல்லையென
உய்வகையாற் பொருள்சிவன் என்று
அருளாலே உணர்ந்தறிந்தார்."

எனவரும் செய்யப்படும் இருவினைகளும், அவற்றைச் செய்யும் உயிரும், இருவினைப் பயன்களாகிய இன்ப துன்பங்களும் செல்வ வறுமை முதலியனவும் இவற்றை உயிர்க்குப் பிறழாது சேர்ப்பிக்கும் முதல்வனும் என்னும் நாற்பொருள் உணர்வு அறவாழ்க்கையின் அடிநிலை உணர்வாகும்; இவற்றை முன்பின் முரணின்றிக் கொண்டு பொருள் உண்மையும் பொருளியல்பும் சாதனமும் பயனும்கூறும் நெறி சிவநெறி ஒன்றே; ஆதலால், அந்நெறியே எடுத்த பிறப்பின்கண் கட்டறுத்து வீடு பெறுவிப்பது; அந்நெறியின்கண் நின்று பிறவிப் பயன் எய்திய செம்புலச் செல்வர்கள் தலைப்பட்டுணர்ந்த சிவம் எனப்படும் செம்பொருளே உயிர்க்கு என்றும் பற்றுக்கோடாவது என்பதை முதல்வன் அருள் தலைக்கூட்ட, நாயனார் உணர்ந்து கடைப்பிடிப்பார் ஆயினர் என்பது பாட்டின் பொருள். ★



சென்னை, புரசைவாக்கம் கங்காதரேசுவரர் கோயிலில் தொடர்
சொற்பொழிவு நிகழ்த்திய திருவாசகமணி திரு. K. M. பாலசுப்பிரமணியம்,
B.A.,B.L., அவர்கட்கு உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஆர். சதாசிவம் B,A.M,.L.,
அவர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தல்.



அம்பல் பிரமபுரீசுவரர் சுவாமி கோயில் திருப்பணித் துவக்க விழா.

Vol. 15 No. 9 Thirukkoil Regd. No. M. 7039



தஞ்சைப் பெருவுடையார் கோயில்

Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-34.
Printed at Paari Achakam, Madras-1. Editor. N.R. Murugavell, M.A., M.O.L.